

இந்துநாதனும் அங்கயற்கண்ணியும்.

[இவர்களைப்பற்றி "அங்கயற்கண்ணி" நாவலில் பார்க்கவும்.]

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :— திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

கமலம் - 1. Vol. 1. | சென்னை: அக்ஷய ஸ்ரீ தை மீ 1வ 1927-ம் ஸ்ரீ ஜனவரி மீ 14வ | இதழ் - 10. No. - 10.

## ஆநந்த தரிசனம்

ஹே! தேஜோமயா! ஸர்வ பூத மநோஹரா! ஜகத் ரக்ஷகா! உனது கடாக்ஷமும் அன்பும் ஸர்வத்திலும் வியாபித்திருக்கின்றது. அல்லும் பகலும் எம்மை வருத்துகிற எல்லாத் துன்பங்களுக்கும் ஹேதுவாகிய ஆசாபாசங்களும் லோக கர்மங்களும் எங்களை யணுகாமல் எமது மாநசங்களாகிய அன்னங்கள் உனது பாதார விந்தங்களிலேயே வசிக்கும்படி கிருபை செய்வாய் எங்கள் சித்த விருத்தி யெல்லாம் விஷய வாஞ்சையில் செல்லாமல் மனோ வாக்குக்கு எட்டாததாயும் மஹத்தாயுமிருக்கிற உனது மஹநீய ரூபத்துள் லயமாகும்படி அனுக்கிரகிப்பாய். உன்னுடைய நித்திய நிர்மல ஆநந்த ஸ்வரூபத்தை யாங்கள் தரிசிக்கும்படி சுஞ்ஞான நேத்திரங்களையும் பிரஸாதித் தருள்வாய். எம்மெண்ணமும் செய்கையும் நினது கருணாரஸ பான நிமித்தமாகவே இருக்கவென்று அருள்வாய். நாங்கள் இப்போது அநுபவிக்கிற உலக இன்பங்கள் யாவும் அநித்தியம். ஆகையால் நித்தியனும் ஆதியந்த ரகிதனும், சரணாகத போஷகனும்—வீற்றிருக்கிற நீ இன்னும் எங்களை இவ்வுலகத் துன்பங்களாகிய வெயிலில் தபித்து வருந்த விடாமல், உனது கருணா கடாக்ஷ சாயையில் சிறிது இடங் கொடுத்து விடாய் தீர்த்து ரக்ஷிப்பாய் ஸ்வாமி. கல்லும் காடும் முள்ளும் நிறைந்த இவ்வுலக நெறியினின்றும் எம்மை நின் பக்தியாகிற நல் வழியில், காமக்குரோத லோப மோஹாதி துஷ்ட மிருகங்கள் தடுக்காமல் காத்து, நினது பாதார விந்தங்களாகிய வீட்டைச் சேர நடத்திக்கொண்டு போவாய். கவலையாலும் துன்பத்தாலும் பூரிக்

கப்பட்டிருக்கிற எம் மனது சிறிது நேரமாயினும் நின்னைத் தியானித்து சந்தோஷ மடையும்படி அனுக்கிரகிப்பாய். எமது அஞ்ஞான இருளைப் போக்கும் மெஞ்ஞானப் பேரொளியே! எமக்குள்ளே அந்நியோந்நியத்தை யும் பரஸ்பர நேயத்தையும் பெருக்கி உண்மையோடு கலந்து வாழ உறுதி யுள்ள மனம் அருள்வாய். இவ்வுலகில் உள்ளவரை இதற்குரிய செல்வங் களை எமக்குக் கடாக்ஷித்து, அவ்வுலகுக்கும் நாங்கள் தக்கோராகும் பக் குவ ஞான வழிகளையும் ஈந்தருள்வாய். உனது திருவுளத்துக்கு இசைந்து உதவும் நன்மைகளையே யாங்கள் பெரிதும் பாராட்டி பரஸ்பர உபகாரிக ளாய்ப் பிரவர்த்திக்க அனுக்கிரகிப்பாய். எங்கள் வாழ்நாள் முழுதும் உனது திருப்புகழ் செப்பும் நினது திருக் கைங்கரியத்தில் தானே செலுத்தி நித்தியமான பரலோக சுகத்தையே பெறுவதற்கு வேண்டிய உபகரணங் களைத் தேட அருள்வாய். எக்காலத்திலும் எம்மை உனது சந்நிதியிலேயே யிருத்தி பொய், பழி, பாவம் ஒன்றும் அணுகாமல், அடியார்களது அன்பு குன்றாது செழித் தோங்கும்படி கடாக்ஷிப்பாயாக. ஓம் தத்ஸத்.

***

"ஹம்ஸ சுரோதாக்கள்" என்ற ஒரு வகையோருண்டு. ஹம்ஸ மானது நீரைப் பிரித்துப் பாலை மட்டும் உட்கொள்வது போல் கதாசிர வணம் செய்யும் பெரியோர்கள் கூறும் நல் விஷயங்களை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு மீதியைத் துரத்தி விடுவர். சில குழந்தைகளுக்குச் சிரம முண்டாகாதபடி தோலை யுரித்துப் பழத்தை மட்டும் கொடுப்பதுபோல் மகான்களாகிய பரமாச்சாரியர்கள் ஜனங்களுக்கு நன்மை யுண்டாக்கவல்ல உத்தமமான கிரந்தங்களை எழுதி வைத்திருக்கின்றார்கள். அவற்றைப் பூரணமாய்ப் படித்து மனதிற் கொள்ளவேண்டுமேயன்றி சிலவற்றை நீக் குவோ மென்று எண்ணுவது அவிவேகம். பெரியோர்கள் எப்போதும் பயனற்ற சொற்களை வழங்கார்களாதலின் அவர்களுடைய வார்த்தை ஒவ்வொன்றும் கவனத்தில் வைக்கத் தகுந்ததேயாம். மனுஷ்யன் தன் னுடைய காலத்தை ஸர்வோத்தமமாய் மதித்து எது செய்யத்தக்க கருமமோ, எது இகத்துக்கும் பரத்துக்கும் ஸாதகமோ அதையே செய்து வரவேண்டும்.

***

"சேரிட மறிந்து சேர்" என்றார் ஔவையார். எந்த இடமானது அடையத் தகுந்ததோ அதையே நாம் தேடி யடையவேண்டும். நாம் வெளிப் பார்வையில் எந்த வேலையைச் செய்துகொண் டிருப்பினும் நமது சித்தமெல்லாம் பகவானை நாடியதாய் இருக்கவேண்டும். தலையில் நீர்க் குடத்தை வைத்துக்கொண்டு போகும் பெண் தன் தோழிகளோடு பற்பல பேச்சுகள் பேசினாலும் குடத்தின் மீதுள்ள கவனத்தை விடாதது போல் பக்தன் பல காரியங்களிலும் பகவானை மறக்கமாட்டான். தன் குமாரத்தி இன்று பகல் வண்டியில் தன் கணவன் வீட்டினின்றும் வந்து சேருவா ளென்று எதிர்ப்பார்த்து நிற்கும் தாய், தன் வீட்டில் பல வேலைகளைச் செய்தபடி யிருந்தாலும் அவளுடைய சித்தமெல்லாம் தன் அருமைப் புத் திரியை எப்போது காண்போமோ என்பதிலேயே பதிந்திருக்கு மன்றோ? தெய்வத் தியானத்திலும் இவ்விதமான ஒரு பக்குவத்தை நாம் பெறக் கடவோம்.

***

"நெருப்பும் நீரும் நல்ல சிநேகிதர்க ளல்ல" என்பர். உலகத்தி லுள்ள எந்த வஸ்துக்களும் நாம் உபயோகிக்கும் விதத்தைப் பொறுத்து நன்மையாயும் தீதாயும் அமையும். இங்கு நெருப்பையும் நீரையும் வேறொரு வழியில் வியாக்கியானிக்க எடுத்துக் கொள்வோம். அக்கினிக்கு எல்லா வற்றையும் கொளுத்தும் சக்தி யிருக்கிறது. அதுபோல் பகவானுக்குப் பிராணிகள் செய்யும் பாபத்தைப் பஸ்மீகரப்படுத்தும் சக்தியுண்டு. ஸகல ஜனங்களும் செய்யும் பாபத்தை கங்கையானது போக்கி தான் எப்போதும் சுத்தமாயிருப்பதுபோல் ஈசுவரன் எல்லாரையும் காப்பாற்றித் தாம் ஆநந்தமா யிருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணன் பகவானகையால் அவர் வெண்ணெய் திருடி யுண்டதும், கோபிகைகளுடன் பிருந்தாவனத்தில் விளையாடியதும் பாபமாகா. லோகநாயகராகிய தம்மை மறந்து அல்பமான வெண்ணெய் போய்விட்டதே யென்று கோபிகைகள் துக்கித்தபோது அவர்களைச் சூழ்ந்துள்ள லோக மாய்கையை நோக்கிப் பகவான் சிரித்துக்கொண்டு நின்றார். கோபிகைகளுடன் விளையாடிய பாவனையானது ஜீவாத்மா வானது பரமாத்மாவை யடைந்ததும் தன்னை மறந்து பரமாத்மாவுடன் ஒன்றாகிவிடும் தன்மையை உணர்த்துதற்காகவே, யாம். எவ்வாறு கங்கை யில் நீராடுவோர் அதில் விழும் சாக்கடைத் தண்ணீரைக் கண்டு, ஐயையோ கங்கை அசுத்தமாயிற்றே யென்று சொல்லாமலும், அவ்விதம் எண்ணாமலும் அப் புண்ணிய நதியில் ஸங்கல்பம் செய்து ஸ்நாநம் பண்ணி ஸகல பாபங்களையும் போக்கிக்கொண்டு புனிதர்களாகின்றனரோ, அவ்வாறே கருணைக் கடலான கண்ணபிரானைப் போற்றும் உத்தமர்கள் அவருடைய லீலைகளைக் குற்றமென் றெண்ணார். புண்ணிய நதியை ஸ்பரிசித்துப் பாபத்தைப் போக்குவதும், கடவுளைத் தரிசித்துப் புண்ய மடைவதும், பகவானை ஸ்மரித்து இஷ்ட சித்திகளைப் பெறுவதும் நிச்சயமே போல், பகவானை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைக் கோபிகைகள் ஸ்பரிசித்தும், அர்ச்சித்தும், ஸ்மரித்தும் பாப விமோசனம் பெற்றுப் பரம சாயுஜ்ய பதவியை யடைந்தனர்.

***

"உலக சுகம் கானற் சலம்." கோடை காலத்தில் தாகத்தால் வருந்திய மானானது வனத்தில் அலைந்து கானலைக் கண்டு அதோ நீர் இருக்கிறதென்றெண்ணி ஓடி யணுகி ஏமாந்து தவிப்பது போல, இவ்வுலகத்தில் பிரமையால் பீடிக்கப்பட்ட புருஷன் ஆசையாகிய தாகம் கொண்டு அதைச் சாந்தப்படுத்தும் பொருட்டு சற்று தூரத்திலிருக்கும் பொய்யான சுகத்தை நிஜமான இன்பமென்றெண்ணி ஓடிப் பின்னர் ஏமாந்து முன்னிலும் பதின்மடங்கு அதிகமான தாகத்தால் பீடிக்கப்படுகிறான். மானின் அறிவும் மனிதனுடைய அறிவும் இவ்விஷயத்தில் ஒன்றாயிருக்கின்றன. உலக சுகம் கானற் சலமென்று நிச்சயிக்கும் சக்தியுடையவனே புத்திமான். மற்றவர்கள் வீண் பிரமை கொண்ட பித்தர்களே யாவர்.

***

"ஸம்சயாத்மா வினிச்சதி" எவன் ஸம்சயப்படுகிறானோ அவன் பயன் பெறான். காடுகளில் கீரிப்பிள்ளைகள் ஸர்ப்பங்களுடன் சண்டையிட்டு அவற்றைக் கடித்தெறிந்து பின்னர் ஓடி சிற்சில பச்சிலைகளிற் கிடந்து புரளுமாம். இந்தப் பச்சிலைகளின் மகிமை யென்ன? அவை சரீரத்தில் பட்ட க்ஷணம் பாம்பின் விஷம் தொலைந்து போகிறது. இன்

னும் திகைப்பூண்டு என்னும் ஒருவித செடியுண்டு. இதைக் காலால் மிதித்தவர்கள் இன்ன இடம் வந்தோம், இன்ன இடம் செல்லுகிறோம் என்பதை அறியாமல் திகைப்பர். தொட்டால் சுருங்கி, தொட்டால் சுணுங்கி என்ற பச்சிலைகளையும் பார்க்கிறோம். மனுஷ்யனுடைய கை பட்டவுடன் அவைகள் சுருங்குகின்றன. யானை தீண்டாப்பாளை, ஆடு தீண்டாப்பாளை என்ற சில செடிகள் உண்டென்றும் அவற்றைக் கண்டால் யானையும் ஆடும் செல்லாவென்றும் கூறுகின்றனர். சிவகரந்தை, தொளசி முதலிய பச்சிலைகள் திவ்வியமான வாசனையை வீசுகின்றன. இப்படிப் பச்சிலைகளுக்குப் பலவிதமான சக்தியிருக்கும்போது வேத மந்திரங்களுக்கு மகிமையிருக்கத் தடையென்ன? எதையும் நம்பினவன் நலம் பெறுவான்.

***

"உலகமே பெரிய கோயில்." அதில் ஈசுவரனே சட்டம், தன்னைத் தான் சீர்ப்படுத்திக் கொள்வதே ஜபம். தன்னயத்தைப் பாராட்டாமையே பெரிய பூஜை. நியாய ஸமுத்திரத்தின் அலைகள் நன்னடக்கையாகிய கரையில் மோதுகின்றன. ஸத்கருமங்களாகிய ரத்னக் கற்களிலிருந்து புண்யமென்னும் பிரகாசம் உண்டாகின்றது. நீறுபூத்த நெருப்பு போல் உலகத்தி லுண்டாகும் கௌரவம் என்று நினைவிற் கொள்ள வேண்டும்.

***

"நான் மனுஷ்யன்." நான் மனுஷ்ய வினத்தை விரும்புகிறேன். ஸகல மனிதர்களிடமும் எனக்கு விசுவாஸமுண்டு. பாபமற்ற மனுஷ்ய ஜன்மம் எல்லோராலும் விரும்பத்தக்கது. ஆயினும் ஜபத்தை அல்லது லாபத்தையே நான் பெரிதாக எண்ணுகிறவனன்று. முயற்சி அல்லது ஸத்கருமமே என்னால் செய்யப்படத்தக்கது. அதன் பலனை நான் அபேக்ஷிக்கிறவனன்று. பிரேமைக்கு நான் அடிமை. பிரியத்தை ஸம்பாதிக்கிற விஷயத்தில் என்னுடைய பிராணனைத் தத்தம் செய்ய ஸித்தமாயிருக்கிறேன். ஸகல பிராணிகளிடமும் பிரியமாயிருப்பதால் எனக்கு எவ்விதமான ஸங்கடம் நேர்ந்தாலும் பாதகமில்லை என்று பௌத்தர் கூறுகிறார். பிரேமை யொன்றினாலேயே மனம் சாந்தமான நிலைமையை யடைய முடியும். இங்கு பிரேமை யென்பது பகவத் பிரேமையாகும்.

***

"தன்னைத்தான் அறிவதே ஆத்ம தரிசனம்" என்று பெரியோர் கூறுகின்றனர். இதன் அர்த்தத்தைத் தெளிவாய் அறியவேண்டும். தன்னைத் தான் அறிவது என்றால் என்ன? ராமன் என்னும் மனிதன் தன்னை அறிவதற்கு என்ன உபாய முண்டு? தன் கண்ணால் தன் சரீரத்தைப் பார்த்துப் பின்னர் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்து அறிந்து கொள்வதா? இல்லை யில்லை. தன்னைத் தான் அறிவது என்றால் தன்னுடைய நிஜ ஸ்வரூபத்தைத் தான் தெரிந்து கொள்வது என்றர்த்தம். தான் கண்ணல்ல, காதல்ல, மூக்கல்ல, கையல்ல, சரீரமல்ல, தான் ஆத்மாவென்று தெரிந்து கொள்ளவேண்டும். இப்படி அறிவதற்குத் தடையா யிருப்பதென்ன? தன்னிடமுள்ள இந்திரியங்களும் உலகமுமே. கண்ணால் ஒரு படத்தைப் பார்க்கிறோம். இந்த நேத்திரேந்திரியம் படமாகிய விஷயத்திற் கலந்து ஒருவித சுகத்தை யடைவதால், அந்த சுகமே நிலைத்ததென்று

பிரமித்து அதை எய்துதற்கு வேண்டிய கவலையையும் முயற்சியையும் கொள்ளுகிறது. இதனாலே மனதுக்கு ஸஞ்சல முண்டாகி துக்கம் தோன்றி முன்னால் நிலைத்த சுகமென்று அறிவீனத்தால் எண்ணிய அற்ப சுகம் மாயமாய்ப் போய்விடுகின்றது. இப்படியே ஒவ்வொரு இந்திரியமும் உலக விஷயங்களிற் கலந்து சுகத்தையோ கஷ்டத்தையோ அனுபவிப்ப தால் மனுஷ்யனுக்கு அந்தர்திருஷ்டி குறைந்து வெளித் திருஷ்டியே அதிகமாகி தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை யறிய முடியாமலும், அதனால் உண்டாகும் ஆநந்தத்தை யனுபவிக்க சாத்திய மற்றும் திவ்ய ஞானியாகாமல் மாயையிற் சிக்கி அவஸ்தைப் படுகிறான்.

***

"தன்னைத்தான் அறிவதற்கு மூன்று வழிகள்" இருக்கின்றன. தியானம் ஒரு வழி. பல விஷயங்களிலிருந்து இந்திரியங்களை இழுத்து மனத்துடன் சேர்த்து, அந்த மனதை ஆத்மாவிடத்தில் இடைவிடாமலும் சலிக்காமலும் நிறுத்திப் புத்தியினால் தன்னை அறிந்து பகவானுடன் கலந்து கொள்ள வேண்டும். இதுதான் தியான மென்பது. ஒவ்வொருவனும் தன்னையும் பகவானையும் தெரிந்து கொள்வதற்காக தன் இந்திரியங்களையும் மனதையும் சேர்த்துப் பகவானிடத்தில் நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்திய மனதை அசையவிடலாகாது. இவ்விதம் தியானம் செய்து வரின் தன்னைத்தான் அறிவதுடன் பகவத் தரிசனமும் லபிக்கும். யோகிகள் தங்கள் மனதையும் இந்திரியங்களையும் விஷயங்களிற் செல்லாமல் தங்களுடைய பகவத்தியானத்திலேயே செல்லும்படி செய்வர். இத்தகையோர்க்கு முக்தி கிடைப்பது எளிது. இரண்டாவது வழியாவது :—சத்துவ-ரஜஸ்-தமோ - குணங்களின் காரியமாகிய இவ்வுலகப் பிரவர்த்திகளுக்குத்தான் ஸாக்ஷியே யன்றி அதற்குக் கர்த்தாவல்ல வென்று தீர்மானித்து அந்தப் படியே லோக விஷயங்களிற் பற்றுதலற்றுப் பரம்பொருளையே சிந்திக்கிறதால் பகவானைச் சுலபத்தில் அறிந்து கொள்ள முடியும். இனி மூன்றாவது வழியாவது:—தான் செய்வதாக எதையும் வைத்துக் கொள்ளாமல் எல்லாம் அவன் செயலென்று நினைத்து அனைத்தையும் ஈசுவரார்ப்பணமாகச் செய்யும் கர்மங்களால் சித்த சுத்தி யடைந்து, அதனால் ஞானோதயம் உண்டாகித் தம்மைத் தாமே அறிந்து பரமாத்மாவுடன் ஒன்றாகக் கலப்பதும் கூடும். எனவே இம்மூன்று வழிகளாலும் மனத்தை யடக்கி ஈசுவர பக்தி செய்யக் கடவோம்.

***

"புதிய வருஷம் பிறந்தது." இவ்வருஷத்தில் உத்தமமான 'ஆநந்த குண போதினி'யை யாதரிக்கும் கனவான்களும், மற்றவர்களும், ஸர்வ பிராணிகளும் ஸகல க்ஷேமங்களையும் அடைந்து இன்புறுமாறு ஸர்வேச்வரனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஆநந்த குண போதினி

அக்ஷய ௵ தை ௴ 1௳

# அஸ்ஸாம் காங்கிரஸ்

காங்கிரஸ் இந்தியரெல்லோருக்கும் பொதுவாயுள்ள ஒரு மகா ஸ்தாபனம். அம்மகாசபை 1885-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் பம்பாய் நகரில் சுப ஜனனமாகி அதற்குப் பின் நாளது வரையில் பிரதி வருஷக் கடைசியிலும் ஒவ்வொரு முக்கிய நகரங்களிலும் கூட்டப்பட்டு வருகின்றது. இம்முறை அஸ்ஸாமில் நடந்தேறியது.

காங்கிரஸ் மகா சபையில் ஒவ்வொரு மாகாணத்தாரும் ஆதிக்கம் படைத்து, செல்வாக்கு அடைந்த காலமுமுண்டு. ஒரு காலத்தில் வங்கதேசவாசிகளுக்குக் காங்கிரஸில் அளவுக்கு மீறிய செல்வாக்கு இருந்தது. லோகமானிய திலகரின் கடைசிக் காலத்தில் மகாராஷ்டிரர்கள் காங்கிரஸில் ஏராளமான செல்வாக்குப் பெற்றிருந்தனர். சில காலம் குஜராத்தியர்களுக்குச் செல்வாக்கு அதிகமிருந்தது. அஸ்ஸாம் காங்கிரஸைத் **தமிழர்களின் காங்கிரஸ்** என்றால் மிகையாகாது. இம்முறை ஒரு தமிழ்ச் செல்வரே அதன் அக்கிராஸனர்.

இந்தியர்கள் எல்லோருக்கும் பொதுவாக இலக்ஷணங்கள் உண்டு. எனினும் பாஷை வேற்றுமையாலும் சீதோஷ்ண ஸ்திதி நிலையாலும், "இந்தியர்" என்ற சொல்லில் உள்ளடங்கிய பலவேறு இனத்தவர்களுக்கும் சிற்சில சிறப்பான இலக்ஷணங்கள் உண்டு. வங்காளிகளைப்போல் உணர்ச்சி ததும்பும் இனத்தவர் இந்தியாவில் வேறெவரும் இல்லை. மகாராஷ்டிரர் அரசியல் நிபுணர்கள். பார்ஸிக்காரர்களும் குஜராத்தியர்களும் வருங் காலத்தை எதிர் நோக்கிக் கருமம் செய்யும் ஆற்றல் உடையவர்கள். பஞ்சாபியர்களும் ஏனைய வட இந்தியர்களும் பிடிவாதக்காரர்கள். ஆந்திரர்கள் மரியாதை தெரிந்தவர்கள். தமிழர்கள் நுண்ணறிவுடையவர்கள், விவேகிகள், குருபக்தி கொண்டவர்கள். சொல்லின் நிறைவும் விரிவும் குறைவும் தமிழர்களின் சுவைக்குத் தட்டுப் படுவதுபோல வேறு எவருக்கும் சொல்லின் அருமை அவ்வளவாகத் தெரியாது. இது தமிழர்களின் விசேஷ இலக்ஷணம்.

காங்கிரஸினுடைய வாழ்வின் காலத்தில் ஒவ்வொரு இனத்தவரும் தங்கள் தங்கள் தனிப் பொக்கிஷமான வல்லமை—சக்தியை அதனிடம் காணிக்கையாக ஸமர்ப்பித்து அவ்வாறாகக் காங்கிரஸை வளர்க்க வேண்டியதாயிற்று. பார்ஸிகளின் ஆதிக்க காலத்தில்,

காங்கிரஸில் அமரிக்கை குடிகொண்டிருந்தது ; அவஸரமே யில்லை. வங்காளிகளின் காலத்தில் அவஸரமயம், உணர்ச்சிமயம். மகாராஷ்டிரரின் ஆதிக்க காலத்திலே தான் லக்ஷ்மணபுரியில் (லக்னோவில்) ஹிந்துக்களுக்கும் இஸ்லாமானவர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு ஐக்கியபாவம் பெருகிற்று. இது மகாராஷ்டிரர்களுடைய அரசியல் நிபுணத்வத்தை நன்கு புலனாக்குகின்றது. குஜராத்தியர் காலத்தில் காங்கிரஸ் புத்துயிர் பெற்று எதிர்கால வாழ்வைப் பெரிதும் கண்ணோக்கிக் காரியங்கள் செய்தது.

‘தீர்மானம்’ என்றால் என்ன ? பொதுஜன வாழ்விலே ஒற்றுமையும் பலமும் குறைந்து வருகின்றன. அவைகளைச் செப்பனிட, பழுது பார்த்து நேர்மை படுத்த, சாதகமாயுள்ள சாதனங்கள் தாம் தீர்மானங்களாகும். தீர்மானம் என்பது சொல் விளையாட்டல்ல. “யானைக் கொம்புகள் வெளியிடத்திலே முளைத்து விட்ட பிறகு உள்ளே அது செல்லமாட்டா. அதேபோல் மனிதன் வார்த்தையும்” என்றார் ஸ்வாமி விவேகாநந்தர். அதாவது, தீர்மான வாயிலாக வெளிப்பட்டுவிட்ட ஒரு விஷயத்தின் முடிவு, பிறகு அது வெளியிலேயே இருந்து அதன் நிறைவேற்றத்துக்கான காரியங்களைச் செய்து கொண்டிருக்க வேண்டுமேயன்றி, மீண்டும் பழயபடி உள்ளே சோம்பற்குகையிற் புகுந்து உறங்கப் பார்ப்பது கூடாது என்பது அதன் பொருள். தீர்மானங்கள் என்பன வாழ்வினுடைய ‘பிழை திருத்த’ அட்டவணையாகும். இப்பிழைகள் இருக்குமளவும் வாழ்வுக்குப் பொருள்—கருத்து இல்லை. அதை ஒரு வாழ்வாகச் சொல்ல முடியாது. காங்கிரஸில் தீர்மானங்கள் நிறைவேறிற்று என்றால் என்ன ? கடவுளின் கருவிகளான, சாட்சிகளான மனிதர்களடங்கிய மனசாட்சிக் கூடத்தில் ஒவ்வொரு இந்தியனும் சத்தியம் செய்து கொள்ளுகிறான் என்பது பொருள். தமிழர்களின் காங்கிரஸான அஸ்ஸாமில் தீர்மானங்கள் விவேகத்துடனும் பக்தியுடனும் செய்யப்பட்டன. தமிழர்களின் விசேஷ இலக்ஷணங்கள் அஸ்ஸாம் காங்கிரஸில் பரிமளிக்கப் பெற்றமைபற்றி நாம் ஸந்தோஷம் அடைதல் வேண்டும். காங்கிரஸின் தீர்மான விவரங்கள் ஏற்கெனவே பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

அஸ்ஸாம் காங்கிரஸின் அக்கிராஸனரான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்காரின் பிரஸங்கம் இலக்கிய இரத்தினம்: கம்பீரங் கொண்ட உபந்நியாஸம் ; உண்மையை மறைக்காத பத்திரம் ; பிறரைச் சிறிதும் ஏய்க்க எண்ணாத உள்ளத்தின் பெருக்கு. யாவும் தெரிந்து சொன்ன அநுபவ வாசகம். காங்கிரஸ் கூடி முடிந்து விட்டது. இனி அதன் தீர்மானங்களை நமது ராஜீய வாழ்வில் நிறைவேற்றக் கடவோம்.

தாயே பாரத, நீயே வாழிய, நீயே சரணினி, நீயே எமதுயிர்,

வந்தேமாதரம் !

# சங்கராந்திப் பண்டிகை

சங்கராந்திப் பண்டிகையென்பது நமது தேசத்தில் வெகு விசேஷமாய்க் கொண்டாடப் படுகின்ற நாளாகும். அது தட்சணாயனத்திலிருந்து உத்தராயணத்திற்குச் சூரியன் திரும்புகின்ற முதல் நாள். இது பரியந்தம் விளைவு காலமாயிருந்து, தானியங்களை யறுத்து, விளைவிற்குச் சேர்க்கிற காலமாகிறபடியால் ஸந்தோஷம் கொண்டாடவும், சூரியனைக் கொண்டு விளைவுக்கு வேண்டிய மழை, வெப்பம், பனி முதலியவைகளை உண்டாக்கின கடவுளுக்கு உபசாரமாய் வணக்கம் செலுத்தவும் முதலில் அறுத்த தானியத்தின் அரிசியைப் பாலும் சர்க்கரையும் சேர்த்துச் சமைத்துக் கனிவர்க்கங்களோடு சூரிய மண்டலத்தில் எழுந்தருளியிருக்கிற பகவானுக்குப் படைத்து, பந்துக்கள் விருந்தினரோடும் பெருநாள் கொண்டாடுவார்கள். பக்திமான்களோ இந்த நாளை நினைத்துப் பரப்பிரம்மத்தைத் தியானிப்பார்கள். இதற்கு முன்னதாக வீடுகளைப் பழுது பார்த்துச் செப்பனிட்டு வைப்பார்கள்.

தை மாதம் இரண்டாம் தேதியாகிய இப் பொங்கல் தினத்தின் அடுத்த நாள் உழவு காரியங்களுக்கு விசேஷ உதவியாயிருந்து வந்த மாடுகள் நன்கு விருத்தி யடையவேண்டுமென்னும் கோரிக்கையினால் பகலுக்குப் பிறகு பொங்கலிட்டுக் கடவுளுக்குப் படைத்துத் துதித்து மாடுகளை அலங்கரித்து அவைகளுக்கும் பொங்கல் உண்பித்துக் கீதவாத்தியங்களோடு அதற்கு மறு நாள் ஊர்வலம் வருவதுண்டு. பொங்கல் இடுவதனால் தான் இந்தத் தினத்திற்கு சங்கராந்திப் பண்டிகை—அதாவது, "பொங்கல் பண்டிகை" எனப் பெயர் வழங்குகின்றது. பயிர் வளப்பத்தின் நன்றிக்காகப் பொங்கல் இடும் முதல் நாளைப் "பெரும் பொங்கல்" என்றும், மாடுகளின் விருத்தியைக் கோரிப் பொங்கலிடும் இரண்டாம் நாளை "மாட்டுப் பொங்கல்" என்றும் வழங்குவதுண்டு. தனவந்தர், மருமகர், இஷ்டர், ஊழியக்காரர் முதலானவர்களுக்கும் கோடி வஸ்திரம் தருவதுண்டு. இதற்குப் பிறகு பந்தினர் வீடுகளுக்குச் சென்று பால் பொங்கிற்றா? என்று க்ஷேமம் விசாரித்துத் தாம் பூலம் முதலிய உபசாரம் பெறுவர். பூர்வத்தில் நம் தேசத்தில் வியவசாயமானது எத்துணைக் கௌரவமாகவும், பிரதான்யமாகவும் பாராட்டப்பட்டு வந்ததென்பதையும் இந்தப் பொங்கல் பண்டிகையிலிருந்தும் உணரலாம். நம் நாட்டுப் பண்டிகைகளும் உத்ஸவங்களும் ஒவ்வொரு பிரதான கருத்தைத் தழுவியே யிருக்கும். அக்கருத்தினுள் மதமும் தேசமும் ஒருங்கே கலந்து பரிமளித்து நிற்கும். நமது அன்பர்கள் அனைவருக்கும் பொங்கல் மங்களம் கூறுகிறோம்.

---

# அறுந்த அவயவங்கள் மறுபடி வளர்தல்

ஜந்துக்களின் அவயவங்கள் அறுபட்டுப் போனால், மறுபடியும் முளைக்குந் தன்மை வெகு விசித்திரம். பல்லிக்கு வால் அறுந்து போனால், அது மறுபடியும் உண்டாகிற தென்பது எவருக்கும் தெரிந்த விஷயமே. 1712-ம் வருஷத்தில் ஒரு வித்வான் இவற்றைப் பரிசோதிக்க வேண்டு மென்று சில நண்டுகளைப் பிடித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விரலைத் தறித்துக் கடலோரததில் விட்டுவைத்தார். சில மாதங் கழித்து வந்து பார்த்து அவைகளுக்குப் புதிதாய் விரல் முளைத்திருப்பது கண்டு, அதன் வழி யாவருக்கும் தெரியும்படி செம்மையாய் உபந்நியஸித்தார்.

எண்பது வருடங்கட்கு முன் பூதத்துவ விசாரி யொருவர் ஒரு ஏரிக் கரை வழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில், சாம்பல் வர்ணமாய் மெல்லிய கொடிபோல் ஒன்றிருக்கக் கண்டு அது ஜீவவர்க்கமா, விருக்ஷவர்க்கமா வென்று பரிசோதிக்க வேண்டுமென்று அவைகளில் ஒன்றைத் துண்டு துண்டாய்த் தறித்தார். உடனே சற்று நாழிகையில் அந்த ஒவ்வொரு துண்டும் சகல அவயவங்களோடு ஒவ்வொரு ஜந்துவாக மாறி ஊர்ந்துபோய் இரைதேடத் தலைப்பட்டன. மறுபடியும் அவர் இரண்டு பூச்சியைப் பிடித்து நெடுக்கே கிழித்து ஒன்றின் பாதியை மற்றொன்றின் பாதியோடு ஒட்டினார். அது முன் ஆனதுபோல் ஆகாமல் விசித்திரமாய் வேறொருவகை ஜந்து வாயிற்று. இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு மற்றொருவர் இந்த ஜந்துக்கள் மாத்திரமேயன்றி, இன்னும் அநேக ஜல ஜந்துக்களையும் தரை ஜந்துக்களையும் நன்றாய்ப் பரிசோதித்து அவைகளுக்கு ஸஞ்சரிப்பதற்குரிய அவயவங்களும் ஜீரணமாவதற்கு உரிய அவயவங்களும் மறுபடியுண்டாகு மென்று கண்டு பிடித்தார். சில ஜந்துக்களுக்குத் தலை வால் இரண்டையும் அறுத்துப் பார்த்தார் ; உடனே அவைகள் உண்டாயின. இப்படியே நரம்பு, எலும்பு, தசை முதலியவைகளும் உண்டாகுமென்று கண்டறிந்தார்.

இப்படி விசித்திரமான தெய்வச் செயல்களைக் கண்டு பிடிப்பதனால், இவைகள் பூத தத்வ சாஸ்திரத்துக்கு விநோதமான விஷயங்களாக இருப்பதுமன்றி, கடவுளுடைய ஜீவகாருண்யத்தையும் திவ்ய சக்தியையும் தெளிவாய்க் காட்டுகின்றன. மேலும் ஜீவனது நமது தேகத்தில் ஒரு பக்கத்தில் ஒன்றாய் இருக்கவில்லை ; துளித்துளியாய்த் தேகமெங்கும் வியாபித்து இருக்கின்றது என்றும் இவைகளால் நன்றாய் விளங்குகிறது.

இப்படி அறுந்த அவயவங்கள் மறுபடி முளைப்பது ஜீவவர்க்கங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியானதன்று. அந்த சக்தி சிறிய ஜந்துக்களுக்கே அதிகம். ஜந்துக்கள் எவ்வளவு பெரிதாயிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவயவங்களைச் செப்பனிட்டுக் கொள்ளுகிற வல்லமை குறைந்து போகிறது. பூச்சி, புழு முதலிய அற்பமான ஜந்துக்களை நாம் எவ்வளவு பின்னப்படுத்தினாலும் அவைகள் ஓர் உருப்படியாய் மாறிப்போம். அவை

களுக்கு அந்தத் திறமை இளமையில் தான் அதிகம். அது நாளாக நாளாகக் குறைந்துபோம். சிறிய ஈக்களுக்குத் தும்பி அறுந்து போனால் உடனே உண்டாகிறது. சிலந்திகளுக்குக் கால்போய் விட்டாலும் அப்படியே. மனித ஜாதிக்கு மாத்திரம் அப்படியன்று. கர்ப்பத்தில் மட்டும் சிசுக்களுக்கு அங்கங்கள் சேதப்பட்டால் மறுபடியும் ஒத்துப்போகும். அப்புறங்கூட இளமையிலேயே இரத்த புஷ்டியும் ஜீரணஸக்தியும் அதிகயாய் இருக்கிறபடியால் 'கொஞ்ச நஞ்சம்' அங்கஹீனப் பட்டாலும் ஒருவாறு கூடிப்போம். அதிகமாய்க் காயம்பட்டாலும் துரிதத்தில் ஆறிப்போம். கைகால் ஒடிந்து போனாலும் செம்மையாய்ச் சிகிச்சை செய்தால், முன்னிருந்ததுபோல் அவ்வளவு திடமாய் ஆகாமற் போனாலும், முன்னிருந்ததிற் பாதியேனும் செம்மைப்படும். வயது சென்றுபோனால் அப்படி யாகாது.

இவைகளை யெல்லாம் நாம் செம்மையாய் ஆராய்ந்து பார்த்தால் நமக்குச் சிருஷ்டியில் அகப்பட்ட ஜந்துக்களுக்கு வால்களும், கால்களும், தும்பிகளும் இன்னும் மற்ற அங்கங்களும் உண்டாகிற வழி நன்றாய்த் தெரிய வரும். இவைகள் கடவுளுடைய திவ்ய சக்தியை எவ்வளவு தெளிவாய்க் காட்டுகின்றன ? மனிதனுக்குக் கைகால் முண்டமாய்ப் போனால், அதற்குப் பதில் ஏதாவது வைத்துக்கொண்டு அவன் காரியத்தை எப்படியாவது நடத்துவான். அங்கஹீனப்பட்ட நண்டு முதலியவைகளை இம்மாதிரி கடவுள் காக்காவிடில் உயிரை இழக்கவேண்டுமே தவிர வேறென்ன வழியிருக்கிறது ? அப்படிப்பட்ட ஜந்துக்களுக் கெல்லாம் அவைகளின் வயதுக்குத் தகுந்தபடி ஆறுவாரம் முதற் கொண்டு ஆறுமாதம் வரையில் தும்பி முதலிய அவயவங்கள் முளைத்துக் கொண்டிருக்கும்.

நாம் பல்லியின் வாலைப் பிடித்துக்கொண்டால், அது தன் வாலை நம் கையோடு விட்டு விட்டு ஓடிப்போம். சில நாள் கழித்து வால் முளைக்க ஆரம்பித்து இரண்டு, மூன்று மாதத்திற்குள் பார்வைக்குப் பூரணமாய் முளைத்துப்போம். ஆனால் ஒன்று ; அந்த வாலில் தசை, தசை நரம்பு, ரத்த நரம்பு, ரத்தம், மாமிஸம், முதலியவைகள் எல்லாம் உண்டாயிருந்தாலும், எலும்பு, மாத்திரம் உண்டாகிறதில்லை. சிலர் அதற்கு மறுபடி எலும்பு உண்டாகிறதே யில்லை யென்கிறார்கள். சிலர் மூன்று வருஷத்திற்குப் பிறகு உண்டாகு மென்கின்றனர். பச்சைப் பல்லிக்கு வால் போய் விட்டால், மூன்றுவருஷம் வரையில் புதிதாய் முளைக்கிற வாலுக்குப் பச்சை நிறம் உண்டாகிறதில்லை. அது வரையில் சாம்பல் நிறமாக இருக்கிறது. மூஞ்சூறு, சுண்டெலி முதலியவைகளுக்கு வால் முளைப்பது வெகு தாமதம். ஏனெனில், அவைகள் மழைக்கால மெல்லாம் தூங்குகிற படியால், தூங்குங் காலத்தில் ஜீவனுக்கு சக்தி குறைவாகையால் வெகு நாளாகிறது. அப்படி முளைத்தும் குட்டையாயிருக்கும்.

யாத்திரைக்காரர் ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறோம், தென் ஸமுத்திரத் தீவுகளில், அநேகம் தரை நண்டுக ளிருக்கின்றன. அவை தாம் இருக்கும் இடத்திற்கும் கடலுக்கும் உள்ளேயே துவாரம் செய்து கொண்டிருக்கின்றன. அந்தத் துவாரங்கள் வெகு தூரமிருக்கும். அவைகள் இராக்காலங்களில் அதின் வழியாய் முழுகித் தண்ணீர் குடிப்பதற்காகக் கடலுக்குப்போம். அப்படிப் புல்லிலும் பூண்டிலும் விழுந்து கொண்டு

போகும்போது ஒவ்வொரு வேளைகளில் அதன் கால்களில் மண்ணொட்டிக் கொண்டு பளுவாய் நடக்கக் கூடாமல்போய், அதனால் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் அவைகளே தங்களின் கால்களை ஒடித்துப் போட்டுவிட்டு நொண்டி நொண்டிக் கொண்டு தன் இருப்பிடம் போய்ச் சேருமாம். சிறிது காலம் அங்கேயே இருந்தால் மறுபடியும் புதிய கால்கள் முளைக்கத் தலைப்படுகின்றனவாம். அது முளைக்கிறவரையில் அந்த நண்டுகள் தமது இருப்பிடத்தைவிட்டு வெளியே புறப்படுகிறதில்லை. ஆனால், அப்படி முளைக்கிற கால்களுக்கு முன்னிருந்த அழகும் நீளமும் இராது.

ஒட்டு மாமரம் முதலிய பல மரங்கள் ஒன்றோடொன்று ஒட்ட நாம் கண்டிருக்கிறோம். ஒரு மாஞ்செடியைப் பெரிய மரத்தின் கிளையோடு இரண்டையும் பால் புறப்படும்படி செதுக்கிவிட்டு, ஒட்டவைத்துக் கட்டுவார்கள். சில நாளைக்குப் பிறகு அதை அவிழ்த்துப் பார்த்தால் இரண்டும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டு இருக்கும். ஆயினும் இரண்டும் ஒன்றாய்ப்போகாது. வேற்றுமை மாத்திரம் நன்றாய்த் தெரிந்துகொண்டே இருக்கும். ஜீவவர்க்கங்களிலோ அப்படியன்று ; ஆனால் ஒரு தேகத்திலிருக்கிற ரத்தத்தை மற்றொரு தேகத்தில் ஊற்றுவதுமட்டும் பார்த்திருக்கிறோம். இவ்விதமே வைத்திய நிபுணர்கள் வேறு பல ஒட்டுச் சிகிக்சைகளையும் அபூர்வமாய்ச் செய்கிறார்கள். இவ்விதமே எலும்பு ஒடியினும் ஒட்டவைக்கப் பிரயத்தினப் படுகிறார்கள். சாதாரணமாய் பற்களெல்லாம் ஒரு வகையான பையிலிருந்து முளைத்து அதைவிட்டு அசைக்கக் கூடாமல் அதிலேயே நன்றாய்ப் பதிந்திருக்கின்றன. ஒரு நாயினுடைய பல்லை அந்தப் பையோடு பிடுங்கி மற்றொரு பல்லில்லாத நாய்க்கு ஒட்டவைத்துப் பரிசோதித்ததில், அது நன்றாய் ஒட்டிக்கொண்டு ஸஹஜமான பற்கள் போலாயின. ஆயினும் ஒவ்வொரு பற்களைப் பிடுங்கி மற்றொன்றின் பையில் ஒட்டவைத்தால் மாத்திரம் அது வேர் இறங்கி ஒத்துப்போகிற வழி நன்றாய் அகப்படவில்லை.

தேகத்திற்குள் எலும்பு அடியோடு போய்விட்டால் அதைச் செப்பனிடுகிற வழிமாத்திரம் இன்னும் விசதமாய்க் கண்டுபிடிக்கப் படவில்லை. ஒரு தேகத்தில் எவ்வளவு எலும்பு சேதப்பட்டுப் போயிற்றோ, அவ்வளவு எலும்பு அதேமாதிரியான பிராணனோடு இருக்கிற தேகத்திலிருந்து எடுத்து வெகு நுட்பமாயும் ஜாக்கிரதையாயும் ஒட்ட வைத்துப் பார்த்ததில், ஒருவாறு ஒத்திருந்ததேயன்றி இயல்பாக இருந்த எலும்புபோல் ஆகவில்லை. இது வல்லாமல் நாள்தோறும் துளி துளியாய் எலும்புகளைக் கொண்டு வந்து ஒட்டினால் வழிக்கு வருமோ என்னவோ வென்று முயன்றார்கள் ; அதுவும் கைகூடவில்லை. இனி ஒரு வேளை அதிக ஊகையும் புத்தி நுட்பமும் உள்ள நிபுணர்கள் ஜனிப்பார்களாயின், இப்படிப்பட்ட காயங்களுள்ள ஜனங்களுக்கு விசேஷித்த ஸாதகம் கிடைக்கலாம்.

# சென்ற மாதம்

**ஸ்வாமி சிரத்தானந்தரின் படுகொலை.**

ஸ்வாமி சிரத்தானந்தரின் கொலை மிகு பயங்கரமானது. அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற பாதகன் தனது இஸ்லாமிய மதத்துக்கும் தனது தேசத்துக்குமே பெரிய அவமானத்தை விளைத்துவிட்டான். நமது பிரியமான இராஜப் பிரதிநிதியாகிய லார்ட்ஹார்டிஞ்சின்மீது முன்பு ஒரு பாதகன் வெடி குண்டெறிந்து படுகாயப்படுத்தியபோது, 'எவனோ ஒரு துராத்மாசெய்த அநீதத்துக்காக 'இந்திய ஸமூகத்தவரிடம் எனக்குள்ள மதிப்பை மாற்றப்போவதில்லை; அந்த மதிப்பு எப்போதும்போல் இருக்கும்' என்று அவர் தெரிவித்து அவ்விதமே கடைசிவரையும் நடந்தார். அதுபோல், நமது ஹிந்துக்களும் இது விஷயத்தில் இஸ்லாமிய ஸமூகத்தவரைச் சேர்க்காமல் முன்னிலும் பதின்மடங்கு அதிகமான ஒற்றுமையை வளர்க்கவேண்டும். தலைவர்களுக்குள் உண்டாகும் சாமானிய வேற்றுமைகள் பாமர ஜனங்களின் இடையில் எவ்வளவு கெடுதலுக்குக் காரணமானவைகளைத் தூண்டிவிடச் செய்கின்றன என்பது இந்தத் துர்ஸம்பவத்திலிருந்தும் அறியலாம், ஸ்வாமி சிரத்தானந்தரின் ஞாபகம் மற்ற மகரிஷிகளின் திருநாமங்களைப் போல் பாரத வருஷத்தில் என்றும் நின்றுலாவும்.

***

**ஜாதி பேதத்தை ஒழித்தல்.**

எல்லூரில் கூடிய ஆந்திர மகா நாட்டில் ஆசார சீர்திருத்த மகாசபையின் தலைமையை வகித்த டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு ஜாதிப்பிரிவினைகள் அறவே ஒழித்தல்வேண்டுமென்று பேசினார். நமது கோயில்களில் தீர்த்தம் தரும்பொழுது அனைவரும் ஒருவரையொருவர் மோதி முட்டிக்கொண்டு சென்று பெற்றுக்கொள்கின்றனர். இந்த சமயம் ஜாதி பேதம்கருதப்படுவதில்லை. அவ்விதமே கோயில்களில் பிரஸாதம் முதலியவைகட்கும் திருஷ்டி தோஷமில்லை. ஆடவர் மகளிர் யாவரும் கூட்டமாக நெருங்கிப் பகவானைச் சேவிப்பதிலேயே மனம் லயித்து நிற்கின்றனராக, அந்த சமயம் ஸ்திரீ புருஷ பேத நினைவுமில்லை. யாவரும் அத்தருணம் ஏக ஸகோதரமாகின்றனர். பின் கோயிலினின்று வெளி வந்ததும் ஜாதிபேதம் தொடங்குகின்றது. ஸ்திரீ புருஷ பேத நினைவும் துவக்கமாகின்றது. எனவே, ஜாதியை விடத் தகுந்த இடத்தில் விட்டொழித்து, கொள்ளத்தகுந்த இடத்தில் கொள்ளுதலாகிய உயர்தரமனப் பான்மையில் பழகுதலும் பயிற்சி பெறுதலுமே போற்றற்பாலதாம். மற்றபடி ஜாதியை அறவே ஒழித்தலென்பது சாத்தியமன்று. ஜாதி பேதம் இந்தியாவில் மட்டுமன்று, எல்லா நாடுகளிலும் உண்டு. ஆயினும், ஒரு ஜாதியினின்றும் பிரிந்த பல வகுப்பினரை ஒன்றுபடுத்தி ஐக்கியப்படச் செய்தல் சிலாக்யமாகும். அது ஆகக்கூடிய காரியம். உதாரணமாக வேளாள வகுப்பினரை எடுத்துக் கொள்வோம். வேளாண்மைத்தொழில் செய்வதைப் பற்றி வேளாளரெனப் பெயருண்டாயிற்று. அவ்வேளாளரில், பாண்டிய தேசத்து வேளாண்மை மாந்தர் பாண்டிய வேளாளரெனவும், சேர தேசத்து வேளாண்மை மாந்தர் சேரகுல வேளாளரெனவும், கொங்க

தேசத்து வேளாண்மை மாந்தர் கொங்க வேளாளரெனவும், சோழ தேசத்து வேளாண்மை மாந்தர் சோழிய வேளாளரெனவும் தொண்டைமண்டலத்து வேளாண்மை மாந்தர் தொண்டைமண்டல வேளாளரெனவும் சொல்லப்படுகிறது. துளுவ வேளாளரென்னும் ஒரு மரபிற்றானே பல பிரதேசங்களைப் பற்றி உட்பிரிவுகளுண்டா யிருக்கின்றன. அதாவது ஆற்காட்டுப் பிரதேசத்திலுள்ளவர் ஆற்காட்டார், புதுச்சேரி பிரதேசத்திலுள்ளவர் புதுச்சேரியார், பூந்தமல்லி பிரதேசத்திலுள்ளவர் பூந்தமல்லியார், பொன்னேரி பிரதேசத்திலுள்ளவர் பொன்னேரியார் எனப்படுகின்றனர். ஒரு பொன்னேரி மரபுக்குள்ளாகத் தானே காணியம்பாக்கத்தார், கூடாஞ்சேரியார், சைதாபுரத்தார், சதுரங்கபட்டணத்தார், நந்தியம்பாக்கத்தார்— என்று இவ்விதம் எண்ணிக்கையற்ற பிரிவுகள் ஏற்பட்டு ஒரு ஜாதியாரை மற்றொரு ஜாதியார், ஒரு குடும்பத்தாரை மற்றொரு குடும்பத்தார் இழிவு படுத்திப் பேசிக்கொண்டு ஐக்கியமில்லாமல் அவதிப்படுகிறார்கள். பிராமணரெல்லாம் ஒன்றாய்க் கொடுக்கவும் கொள்ளவும், செட்டிகளெல்லாம் ஒன்றாய்க் கொடுக்கவும் கொள்ளவும், வேளாளரெல்லாம் ஒன்றாய்க் கொடுக்கவும் கொள்ளவும் இருக்கப்போகாதா? அப்படிக்கில்லாவிட்டாலும், துளுவ வேளாளராகிய ஆற்காட்டார், புதுச்சேரியார், பூந்தமல்லியார், பொன்னேரியார் இவர்களாவது ஒன்றாய்க் கொள்ளவும் கொடுக்கவும் போகாதா? கடைசியில் 1877-ம் வருஷத்தில் பிரிந்த பூந்தமல்லியாரும் பொன்னேரியாரும் கொள்ளவும் கொடுக்கவும் போகாதா? ஜாதி பேதமே கூடாதென்பதிலும், இப்படி ஒன்றிலிருந்தும் பல பிரிவாகப் பிரிந்தவர்களை ஒன்று சேர்த்து ஐக்கியப்படுத்தப் பார்ப்பது எவ்வளவோ மேல்.

* * *

**விவாகத்தை வெறுத்து ஸமூகசேவை**

**மா**தர் கல்வி மகா நாடொன்று ஆமதாபாத்தில் நடந்தது. அதன் தலைவியாய் நின்ற ஸ்ரீமதி சாராள தேவி அம்பலா என்ற பெண்மணி "ஸ்திரீகள் விவாகமின்றியே தங்களின் ஜீவிய காலம் முற்றிலும் ஸமூகப் பணிவிடைக்கே தொண்டுபுரிய முன் வரக் கூடும்" என்று பேசினார். இது மேனாட்டுக் காற்றின் விசேஷமாகும். பெண் விவாகமின்றியே ஜீவியகாலம் வரையும் இருப்பதென்பது இந்தியாவுக்குப் புதிய விஷயம். அதிலும் ஸமூக சேவையினிமித்தம் விவாகத்தைத் தவிர்த்தலென்பது வீண் வார்த்தைப் பந்தல் தான். விவாகமில்லாத மனிதர்களைவிட விவாகம் செய்துகொண்ட மனிதர்கள் நம்பிக்கை — அந்தஸ்து — தயாளம்— அன்பு — ஐக்கிய சிந்தை — ஆத்ம சுத்தி—சன்மார்க்கம் முதலிய சுப லக்ஷணங்கள் பெற்று வாழ்கின்றார்களென்பது பிரத்தியக்ஷ அநுபவம். விவாகம் என்பது ஆடவர்—மகளிர் இரு பாலாருக்கும் பொதுவாக அமைந்த பிரதான்யமான ஒரு தர்மம். அதிலும் பெண்பாலாருக்கு விவாகம் என்பது இன்னும் அதி அவசியம். அவர்களுக்கு நாதன் என்று ஒருவர் ஏற்பட்டால் தான் அவர்களின் உலக வாழ்க்கைக்குக் கௌரவம். எல்லாவற்றிலும் மேலாகக் காமம் என்பது வெகு பொல்லாதது. வெளிக்கு விவாகத்தை வெறுத்து நின்ற பலர் அந்தரங்கத்தில் ஆபாஸகரமான அளவுக்கு மீறிய சிற்றின்பப் பிரியராக இருந்து வந்திருக்கிறார்களென்பது பல இடங்

களிலும் கண்ட விஷயம். காமம் ஒரு தேக தர்ம அவஸ்தை. அது விவாகத்தால் சாந்திபெற்று சன் மார்க்கத்தில் அமைகிறது. இந் நிலையில் விவாகத்தை ஒழித்துப் பெண் பாலார் ஸமூக சேவை செய்தலென்பது வெளித் தோற்றத்தில் கௌரவமாகக் காணப்பட்டாலும், அந்தரங்கத்தில் எண்ணற்ற தோஷ கிருத்யங்கட்கு எப்படியும் இடனுண்டாக்கி விடும். "ஸ்திரீகளுக்கு அகங்காரம் என்பதே கூடாது. ஏனெனில் என்றைக்கிருந்தாலும் ஒரு நாள் பெண்கள் புருஷருக்குக் கீழாகப் போகிறவர்கள். கீழாக வேண்டிய தென்றே ஸ்திரீகளுக்குக் காமத்தைக் குறடாவாக ஆண்டவன் அமைத்து வைத்திருக்கிறார். அதனால் கர்ப்ப வேதனை, பிள்ளைப்பேறு முதலான துன்பங்களெல்லாம் ஸ்திரீகளை அடக்கத்திற்குக் கொண்டு வருவதற்கே ஏற்பட்டிருக்கின்றன." தங்களுக்கென்று கடவுள் படைத்துள்ள புருட வர்க்கத்தை விட்டு விட்டு ஸ்திரீகள் தனியே வாழ ஒரு போதும் முடியாது. மறைவாகவேனும் ஒரு ஆடவனின் உதவி வேண்டியிருக்கும். சாதாரணமாக எழுதப்படும் கதைகள் கூட விவாகத்தில் முடிவு பெறுவது இந் நாட்டின் வழக்கம். விவாகத்தைத் தவிர்த்தலென்ற மேற்றிசைக் காற்று பாரத வருஷத்திய அங்கனைகளிடம் ஒரு போதும் வீசமாட்டா. அந்தப் புது ஸம்பிரதாயமும் நமக்குத் தேவையில்லை. அதனால் விளைகின்ற ரகசிய விபசார கிருத்தியங்களும் இங்கு நேரவேண்டாம்.

***

துன்மார்க்க வியாதிகளைச் சோதித்து அதன் நிவர்த்திக்கு யோசனை சொல்லுமாறு பிரிடிஷ் ஸமூக சுகாதார சங்கப் பிரதிநிதிகள் இங்கு வந்திருக்கிறார்கள். இந்தியப் பெண்மணிகளிற் பலர் இந்த ரோகத்திற்கு நிராதிகளாகவே இருந்திருந்தும் உட்படநேருகிற தென்றும், மேக ரோக விஷநீர் மூன்று தலை முறைகளுக்கும் கூட எட்டிப் பார்க்குமென்றும் இதற்குப் பரிகாரம் அவசியமென்றும் டாக்டர் முத்துலக்ஷ்மி யம்மாள் 'சுதேசமித்திர'னில் விரிவாக வரைந்துள்ளார்.

**துன் மார்க்க ரோகங்களின் வியாபகம்**

இந்தியாவில் விவாகமில்லாத பருவ யுவதிகட்குப் பாதுகாப்பு அதிகம். சாந்தி தினத்துக்கு முன் வரையில் அவர்கள் நிர்மலமான தேகிகள். பெண்மக்களின் விபசாரத்தைப் போல் ஆண்மக்களின் விபசாரம் கண்டிக்கப்படுவதில்லை யாதலால், விவாகத்திற்கு முன்பாகவே ஆடவர் வர்க்கத்துள் பலர் பரஸ்திரீ கமனத்திற் பிரவர்த்தித்து விடுவதினால், பலவித ரோகங்கட்காளாகி அந்த ஆஸ்தியைத் தங்களின் குற்றமற்ற மனைவியர்கட்கும் பங்கிட்டு விடுகிறார்கள். இந்த நிர்ப்பாக்கிய நிலையினின்றும் பெண்மணிகளை மீட்பிப்பதற்கு எந்த யோசனையும் பொருந்தியதாய்க் காணவில்லை. அவனுக்கென்ன மகாராஜன், பத்தெட்டுத் தாசிகளையும் வைத்துக் கொள்ளலாம் என்று விபசாரத்தை வெகு கௌரவத்தில் உயர்த்திப் புகழ்தல் எல்லாவற்றிலும் பெரிய அக்கிரமம்.

***

**முன்பு இவற்றிந்து மீட்சி எப்படி?**

விவாகத்தின்போது நடந்து வந்த 'சதுர் கச்சேரி'யைப் பழித்துப் பெரும்பான்மையும் நிறுத்திய நாகரீகர்கள் இப்பொழுது ஒழுக்கங் கெட்ட ஸ்திரீகள் நடத்தும்

தடபுடல் சங்கீதக் கச்சேரிகளுக்குப் போய் வருகிறார்கள்! அதை ஒரு பழிப்பாக எவரும் நினைப்பதில்லை. நமது ஆலயங்கள் விபசாரத்திற்குப் பெரும் நிலைக் களஞ்சியங்களாக இருக்கின்றன! கோயில் அர்ச்சகர்களும் குருக்களும் விபசார தோஷ விர்த்திக்கு வெகுதூரம் உதவியாக இருக்கிறார்கள். குலஸ்திரீயைவிட தாசிகட்கு அதிக கௌரவம் கொடுக்கப் படுதல் மற்றொரு வெட்கக்கேடு! நாடகக் கம்பெனிகளாலும் விபசார தோஷம் எங்கும் பரப்பப்படுகின்றது. நாடக நடிகர்களான ஸ்திரீ புருஷர்கள் இருவரும் மிக்க கேவலமான நடத்தைகளுள்ளவர்கள்! வெகு வெகு சிற்றின்பப் பிரியர்கள். பிரசித்திபெற்ற நடிகர்களும்கூட இந்தத் தோஷத்திலிருந்தும் தப்புவது சாத்தியமில்லை. சந்திரனுக்குத் தாரையும், டம்பாசாரிக்கு மதனசுந்தரியும் நிர்வாணமாய் எண்ணெய் தேய்க்கும் நாடகத்தன்றுதான் ஜனங்கள் விசேஷமாய்க் கூடுகின்றார்கள்! ஆபாஸ நூல்கள் தான் சுடச்சுட வுள்ள பணியாரம் விற்பதுபோல் சீக்கிரம் விலையாகின்றன! உத்தம திருஷ்டி யென்பதே பிசகிப்போயிருக்கின்றது. நமது ஊர் ஜட்கா வண்டிக்காரர்களை நம்பி நமது பெண்களைத் தனியே அனுப்புவதற்கு அச்சமாயிருக்கிறது. அத்துணைக் கேவல சிந்தகர்களாய்ப் பெரும்பாலோர் காணப்படுகின்றனர். விருத்த விவாகங்களாலும் நடத்தைத் தப்புகள் நேர்கின்றன. இவைகட்கெல்லாம் மீட்சி யுண்டானால் தான் துன்மார்க்க ரோகங்களுக்கும் ஒருவாறு முடிவு தென்படும்.

* * *

**பெண்களின் மானஸிகத் தொந்தரைகளும் பாடுகளும்**

**து**ன்மார்க்க ரோகங்களில் நிர்மல ஸ்வரூபிகளான பாவைமார் அநியாயமாய் அழுத்தப் படுகின்றார்களென்ற கூக்குரலையேனும் ஒருவாறு ஔஷத சிகிச்சைகளாலும், சன்மார்க்கப் பிரவர்த்திகளாலும் குணப்படுத்திவிடலாம். ஆனால், இதனினும் பொல்லாத மற்றொரு ரோகத்தால் மாதரார் பீடிக்கப்பட்டு மிகு பயங்கரமான அவஸ்தைக்குள்ளாகின்றனர். அது பேய்பிடித்துக் கொள்ளுதல் தான். விசேஷமாகப் பெண்களையே இந்தப் பேய் நோய் பீடிக்கின்றது. மானஸிக சிகிச்சைகளால் நிவர்த்திக்க வேண்டியுளது. பல இடங்களில் என்ன முயன்றும் நிவர்த்தியேயில்லை. மந்திரவாதிகள் சாமியார்கள் என்று போற்றப்படும் சில பேர்களுக்கு இதில் பிரக்யாதி அதிகமாவதே யன்றி அவர்களால் சுகமுறுவோர் சிலரே. அநேகர் ஒரு குணமும் பெறுவதில்லை. மந்திரவாதிகள் என்போரில் 100-க்கு 80 பேர் வழிகள் அல்பமான கல்வியும் கேடுகெட்ட நடத்தைகளையும் துஷ்ட தேவதைகளின் வணக்கங்களையும் கொண்ட முதல்தர அயோக்கிய சிகாமணிகள்! இவர்களை நம்பிப்பேயோட்டும்படி பெண்களை அவர்கள் வசம் விடுவதில் பெண்களையே அவர்கள் கொண்டுபோய்விட்ட சங்கதிகளும் கதைகளும் அநந்தம். பேய் பிடித்த பெண்கள் திடீரென்று மயக்கத்துக்காளாகின்றனர். ஜனத் திரளின் இடையில் மூர்ச்சிதராகின்றனர், அத்துடன் பலவிதமாகப் புரண்டும். கேவல பாஷிதங்களாடியும் பலவித சேஷ்டைகள் புரிகின்றனர். சாதம் வடித்துக்கொண்டிருக்கும்பொழுதே மயக்கமாகி கஞ்சியும் சாதமும் அடுப்பிலுள்ள குழம்பும் மேல் விழுந்து ஸ்மரணை தெரியாமல் அப்படியே கிடந்துவிட்ட சம்பவங்களும் பல. கிணற்றில் ஜலம் எடுக்கையில் இந்த

மயக்கம் நேரின் என்ன கதி! பாதி சமையலில் மயக்கம் வந்து கண்ட அலங்கோலங்களும் அநேகம். வெளியில் நடந்து சென்றுகொண்டிருக்கையிலேயே மயக்கம் வந்து விழுந்தவர் பலர். ஜலம் எடுத்துக்கொண்டு வருகையில் குடத்துடன் விழுந்து மூர்ச்சித்தசங்கதிகளும்எத்தனையோ. இலையில் சாதம் பரிமாறிக் கொண்டிருக்கும்போதே மயக்கம் வந்து விடுகிறது! மாதவிலக்காயுள்ளபோது மயக்கம் வந்து விடுவதில் தொடமுடியாமல் இன்னும் பெரிய சங்கடம்! சில சமயங்களில் மூர்ச்சையானது மிகு பிராண பயத்துக்கு இடம்தந்து பிறகு குணமாகின்றது. இதற்கு வைத்திய சிகிச்சை கண்களில் கலிக்கமிட்டு அதன் உபாதையால் பிரக்ஞையை உண்டாக்குவதைத் தவிர வேறெதுவும் பயன் படுகிறதில்லை. அந்தப் பிரக்ஞையும் அடுத்த நிமிஷத்தில் மறைந்து மீளவும் மயக்கமுண்டாகிவிடுகிறது. அதற்குப்பிறகு வைத்தியரும் மௌனமாய் விடுகின்றார். அந்தோ! இவற்றால் பெண்களையே நம்பியுள்ள குடும்பங்கள் படும் அவஸ்தை ஆண்டவனுக்கே அற்புதம்! துன்மார்க்க ரோகங்களை விட இது பெண்பாலாரை வெகு பாடுபடுத்தி விடுகின்றது. இதற்கு என்ன சிகிச்சை செய்வதோ! தகுந்த மாந்திரீகர்கள் அகப்படுவதோ அபூர்வமா யுளது. செலவுக்குச் செலவே தவிர குணத்தைக் காணோம்! ஆங்கில டாக்டர்கள் இந்தப் பேயின் ஆவேசங்களை நம்புவதில்லை. நம்பாவிடினும் நடப்பதென்னவோ உண்மை. இதற்கு முடிவு என்ன? ஆலோசனை யாது?

சென்னை மாகாணத்தின் புதிய மந்திரிகள் :—(1) கனம் டாக்டர் பி. சுப்பராயன் (2) கனம் எ. ரங்கநாத முதலியார் (3) கனம் ஆரோக்கியசாமி முதலியார்.

32-வது தமிழ் மாகாண மகா நாடு :—6–12–26-ல் சென்னையில் கூடிற்று. அக்கிராஸனர் ஸ்ரீமான் கே. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார்.

---

## உன் மனுஷ்யனே எதிரிகள் பக்கம்!

உனக்கு வேண்டிய ஒரு மனுஷ்யன் ஒரு நெருக்கடியான சமயத்தில் உன்னை எட்டிப் பாராமலே தூர இருந்து கொண்டுவிட்டு, அத்துடன் நிற்காமல் உன்னை விரோதிக்கிறவர்களுக்குக் கைத்துணையாகவும் நடந்துகொண்டுவிட்டு, பிறகு மேலுக்கு —நான் அங்குவந்தேன், என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை, அதனால் நானும் விலகி இருந்துவிட்டேன் என்றும் உன்மீதே சொட்டுச் சொல்லையும் கற்பித்துப் பேசுவதானால், அத்தகைய மனுஷ்யனைப்பற்றி என்றும் மறவாதவிதமாய் ஒரு நல்ல படிப்பினையை நீ பெற்றுக்கொண்டு, கடவுளிடம் உன் நெருக்கடியையும் கவலையையும் ஒப்புவித்து விடு. கடவுள் உனக்கு வேண்டிய ஆறுதல் தருவார்.

# பத்திரிகா சாரம்

## ஒரு விநோத வர்ணனை :—

'சுதேசமித்திர'னில் ஸ்ரீமான் வி. ஆர். ஸ்ரீனிவாசய்யங்கார் பி. ஏ. பின் வருமாறு வரைகின்றார் :— "புகை குடிப்பவர்கள் உபயோகிக்கும் ஆயுத வகைகளில் சுருட்டு, சிகரெட்டு, பீடி யென்ற தினுசுகளுண்டு. இவைகளில் சுருட்டென்பது கொளுத்தின பிறகு சற்றுநேரம் எரியக் கூடியது. அதற்கு அடுத்த வகை சிகரெட்டு. அதைப் போல் அவ்வளவு காலம் எரியா விட்டாலும் ஸுமார் கொஞ்ச காலமா வது எரியும். முதலாவது வகுப்பு புகையிலையையே சட்டையாகவுடை யது. இரண்டாவது வகுப்போ மெல் லிய கடிதத்தை மஸ்லின் உடை யைப்போல் தரித்திருக்கும். அதாவது முதலாவது வகுப்பு பிளானல் ட்வீட் முதலிய சீமைச் சரக்குகளை ஆடை யாகத் தரித்திருக்கும் மேநாட்டு வகைகளைப் போன்றது. இரண் டாவது காற்றைப்போல் மெல்லிய வெண்மையான ஆடைகளைத் தரித் திருக்கும் பெண்மணிகளைப் போன் றது. மூன்றாவது வகுப்பைச்சேர்ந்த பீடிகளோ வென்றால் அப்படியல்ல. மற்ற இரண்டும் லௌகிகம். இது பரம வைதீகம். புகையிலையும் கடித மும் ஆசாரத்திற் கேற்றபடியல்ல. அசுத்தமே. பீடியோ பரம வைதிகம். சுத்தமான தவஞ் செய்வோர்களின் ஆடையையே தரிக்கும். மரப்பட் டைகளால் செய்யப்பட்ட மரவுரி கூட அவ்வளவு ஆசாரமல்லவென்று மதித்து கேவலம் மரத்தின் இலை களையே ஆடையாகக்கொண்டு தவஞ் செய்யும்."

***

## விவாகம் :—

"சமூக வாழ்வின் நோக்கம், எண் ணம், நடத்தை எல்லாம் சுத்தமாக இருப்பதற்குக் கலியாணம் பெரிய உதவியாயிருக்கு மென்று நம்பு கிறோம்." (சுதேசமித்திரன்.)

***

## பெண்மக்களும் சொத்துரிமையும்:—

பெண்மணிகளுக்குச் சட்ட பூர்வ மாகச் சொத்துரிமை இல்லாமை பற்றி நேரும் இடர்பாடுகளை ஸ்ரீமான் வி. ராதாகிருஷ்ணன் பின்வருமாறு வர்ணிக்கிறார் :—" பெரும் பொருள் படைத்துப் பெருமான்களின் வீட் டுப் பெண்களாகப் பிறந்தும் தங்கள் தந்தையின் பொருள் அனைத்தையும் சகோதரர்கள் அனுபவிக்க விட்டு, உண்ண உணவும் உடுக்க உடையு மின்றித் தத்தளிக்கும் பெண்களைத் தனை? விதிவசத்தால் வறிய கணவர் களை அடைந்து தங்கள் சகோதரர் களின் தயவிற் கெதிர்பார்த்தும், அவர்களின் மனைவியர்களால் பெருந் துன்பமடைந்தும் நிற்கும் மங்கையர் கள் எத்தனை பெயர்? பெற்றோர் களது பக்ஷபாதத்தாலும் சில சமயங் களில் அவர்கள் கருமித்தனத்தாலும் பெரும் பொருளிருந்தும் ஒரு சிறு பயனுமடையாது தவிக்கும் பாவை யவர்கள் எத்தனை பெயர்? தாயத் தார்கள் (பங்காளிகள்) என்னும் பேய்களுக்குத் தங்கள் தந்தையின் சொத்தைப் பறிகொடுத்துப் பரித விக்கும் பங்கயச் செல்விகளெத்தனை பெயர்? செல்வச் செருக்கும், கெடு மதியும், கொண்ட சகோதரர்களின் சூழ்ச்சியால் வறிய வரனுக்கு வாழ்க்

கைப்பட்டுத் துன்புற்றிருக்கும் தாய மாதுகளெத்தனை பெயர்? மருமகன் தனக்கடங்கிக் கிடக்கவேண்டு மென்னும் மதி மயக்கங் கொண்ட சில பேயர்கள் மனப்படி திருமகளின் கடாக்ஷ மற்றுள்ள நாயகனை அடைந்து அவதிப்படும் அபலைகள் எத்தனை பெயர்? அப்பப்ப! இவர்களின் கஷ்டங்களை எடுத்தெழுத இடமும் காலமும் போதாது."

---

## இரண்டிடத்துப் பேர்வழி!

உன் மனைவியை அழைத்துப்போக உன் மாமி வீட்டார் வந்துள்ளார். உன் அபிப்பிராயம் எப்படியென்று தெரிவதற்குத் தங்களுக்கு வேண்டியவனும், உனக்கும் பிரீதியாக நடப்பவனுமுள்ள ஒருவனை உன்னிடம் போய் அறியும்படி தூண்டுகிறார்கள். அவன் வெகு நல்லவன் போல் உன்னிடம் வந்து, "என்ன அவர்கள் வந்திருக்கிறார்களே, பெண்ணை யழைத்துப் போக வேண்டுமாமே" என்று தன் வார்த்தையை நீட்டுகிறான். நீயோ கள்ளங் கபடமற்று உன் மனதில் உள்ள ஆத்திரத்தை அப்படியே வெளியில் கக்கி, ஓ! அனுப்ப முடியாது என்கிறாய். அவன் அதைப் பத்திரமாய் முடிந்துகொண்டுவந்து இவர்களிடம் சொல்லிவிடுகிறான். பிறகு நீ அவர்கள் இருக்கும் இடத்துக்கு வருகையில் உன்னைப் பார்த்து அவன், நீங்கள் என்னிடம் சொன்னதை அவர்களிடம் ஒன்றும் சொல்லவில்லை என்று அவர்கள் முன்னிலையிலேயே கூறுகிறான். அவன், தான் சொல்லவில்லை யென்ற வார்த்தையை அவர்களும கேட்டுக்கொண்டு, அதென்ன சங்கதி யென்று வினவாமலே ஏதும் தெரியாதவர்கள் போல் மவுனமாகி விடுகிறார்கள். நீ அவனிடம் தெரிவித்ததை அவன் அவர்களிடம் சொல்லவில்லை யென்று நம்புகிறாயா? அவன் சொல்லாதிருந்தால், "அதென்ன சங்கதி" என்று கூட அவர்கள் கேளாமல் ஜாடையாக இருந்து விடுவார்களா? இப்படி உன் உட்கருத்தை அறிந்துகொள்ளப் பார்க்கிற இரண்டிடத்துக்கும் வேண்டிய தந்திரப் பேர்வழியிடம் நீ ஜாக்கிரதையாக எப்போதும் இரு. அவனுக்கு உன்னைப்பற்றி எவ்வித சரக்கும் கிடைக்காதபடி பார்த்துக் கொள்.

# பெண்கள் பக்கம்

## பர்த்தாவைத் 'திருப்தி' செய்தல்

ஸமீபத்தில் பத்திரிகைகளில் ஒரு வர்த்தமானத்தை நாம் வாசித்தோம். அதில் ஒருவனுக்கு விவாகம் நடந்து நெடுநாளாகியிருந்தும், அவனது சிற்றின்ப தேகதர்ம அவஸ்தையைத் தீர்க்க அவனது மனைவி உடன்படவேயில்லை யென்றும், பலமுறை வருந்தி யழைத்தும், எவ்வளவோ வேண்டியும், அவனது அந்தரங்க தாபத்தை அவள் சாந்தி செய்ய ஒப்பவேயில்லை யென்றும், அதன்மேல் கோபம் கொதித்து நடுக்காட்டில் அவளைக் கொன்று புதைத்து விட்டானென்றும் தெரிய வந்தது. இதனால் இருவகையோர்க்கும் எதாகிலும் பயன் உண்டா? அன்னோரின் விவாக மனோரம்ய பூர்த்தி இறுதியில் அலங்கோலமாய் முடிந்தது. இவ்விதம் முடிவதற்குத் தானா அத்தனைப் பொருத்தங்கள் பார்த்து விவாகம் செய்வித்தது?

***

ஒரு பெண் யுவதித் தன்மையை அடைந்தவுடனே, அதைப் பரவச முதிர்ச்சியோடும் பாராட்டிக் கொண்டாடும் கொள்கைக்குக் காரணமென்ன? காதல் தாகத்தினைத் தன் சொந்த அநுபவத்தே உள்ளூர உணரும் தன்மைக்கு—பக்குவ நிலைக்கு—அப்பெண் கொடி வந்துற்றாள் என்பதே யன்றோ? காதல் தாகம் கடவுள் அருளிய வரன். அது அவரது கிருபா விலாஸம்—கடாக்ஷம். காதல் தாகத்தினைப் பூர்த்தி செய்து கொள்ள முயல்வதில் விவாகம் பிராப்தமாகின்றது. திருமணத்தின் மூலமாக இரு பாலாரும் ஒன்றாகி 'இன்ப சுகம் தரு மன்பு பொருந்தி உணர்வு கலந்'திட, அதன் பயனாக ஸந்தான பாக்கியமும் லபிக்கின்றது. படிப்படியாய் இன்னோரன்ன நலங்கள்—சுபங்கள் அடுத்தடுத்து ஒன்றின் பின்னொன்றாகத் தோன்றி, வாழ்க்கையானது லக்ஷ்மீ விலாஸமும், வன்மையும், ஜனக்கட்டும், குடும்ப விர்த்தியும், காந்தியும் பெற்றதாகிப் பரிமளித்திடுகின்றது.

***

ஸ்திரீகளுக்குப் புருஷனை விடத் தெய்வம் வேறில்லை, விரதமில்லை, நோன்பில்லை, கோவில் குளமில்லை, மஞ்சளில்லை, மாலையில்லை, வாசனையில்லை. ஆடையாபரண முதலிய சிறப்பும் அவ்வுத்தமக் கணவனார் கண்டு களித்தற் பொருட்டே யன்றி வேறெதற்குமன்று. தம் பர்த்தாவுக்கு அவ்வப்போது உண்டாகும் சித்த விகாரமான தேகதர்ம அவஸ்தையைப் பரிபூரணமாய் மனம்கலந்து 'திருப்தி' செய்தலன்றோ உத்தமமகளிரின் கடனாகும்? தம் நன் கணவனார் மனம் கவரும்படி நடத்தலன்றோ மேன்மை? ஒரு பெண் கொடி முன்பே மானிடவர்க்குப் பேச்சுப்படாமலிருந்தால்—ஒருவர்க்கு மனைவி என்று ஆகாமலிருந்தால், அப்போது 'திருப்தி செய்தல்' என்பதும் அங்கு இல்லாது போக, அப்பெண்கொடியும் தன் இஷ்டப்படி நடக்கலாம்.

அங்ஙனம் எவர்க்கும் வாழ்க்கைப்படாது நிற்றல் பெண் பிறப்புக்குப் பொருந்துவதாகுமோ? அது தகுமோ? பெண்களின் பாதுகாப்புக்கு விவாகம் முக்கியம். திருமணம் நடந்தேறிய பின்னர், அகமடியானுக்கு (வீட்டுக்காரனுக்கு) அகத்தை (ஆத்மாவை)க் கொடாவிடினும், அங்கம் (தேகம்) அவனுக்கே உரியதாகையால் அதை அவனுக்குத் தந்துவிடவேண்டியதே. மேலுக்குத் தன் கணவன் என்ற வேஷம், உள்ளேயோ, 'திருப்தி செய்வித்தற்கு' இணங்காத துவேஷம். இப்படியானால் எங்ஙனம் ஜீவனம்? 'திருப்தி படுத்தாத' ஒரு பெண் கொடி தன் கணவனோடு நாட்கடலைக் கழிப்பது எவ்வாறு? இங்கு மங்கும் (இகலோகத்திலும் பரலோகத்திலும்) வாழப் பிறந்தவர்களன்றோ நாம்? இதை மனதில் வைத்து பதியைத் 'திருப்தி செய்து' மனம் குளிர மனமில்லையாகில் அது கற்புலக்ஷணமாகுமோ?

***

பின்னும் இவற்றை நன்கு விளக்கி இரு ஸகோதரிகளின் ஸம்பாஷணையாக அமைத்துக் கீழ் எழுதியிருப்பவற்றைக் கவனித்து நலம் பெறவேண்டுகிறோம்.

லக்ஷ்மீ காந்தம்;—உன் கணவனார் இருக்குமிடத்தில் நீ நிற்பதேயில்லையாம். அவர் ஆயிரம் தடவை தன்னருகில் உட்காரும்படி சொல்லினும் நீ வேண்டா வெறுப்பாக நிற்பது வழக்கமாம்; அல்லது கடுகடுப்புடன் அருகே அமர்வையாம். உலகத்தையே வெறுத்தொதுக்கிய வேதாந்தி போன்றும் பேசுவையாம். ஒரு நாள் ஏதாவது கடுகடுத்துக் கூறின் மூன்று நாள் வரை அதற்காக அவரோடு பேசமாட்டாயாம். பெண்கள் தமது நாயகர் தம் முடன் பேச நெருங்கினால்—ஆ! இவ்வளவுக்குக் கொடுத்து வைத்தோமா—என்ன பாக்கியம் செய்திட்டோம்—என்று நினைத்துப் பெருமகிழ் வெய்துதலன்றோ கற்புறுமடவார்தம் ஒழுக்கமாகும். நீயோ மற்றவர்களுடன் எவ்வளவோ சந்தோஷமாகப் பேசுவையாம். வீட்டு ரகசியங்களையும் நிகழ்ச்சிகளையும் கூறுவையாம். உன் பர்த்தாவின் முன்பு பேசுவதானால் அது உனக்கு வெகு கசப்பாம். அப்படிப் பேசினும் சிடுசிடுத்த முகத்துடன் தானாம். பேசவே உனக்கு மனம் வராதாம். பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தை நீ பதில் சொல்வாயாம். உங்களுக்குள் பார்யா—பர்த்தா அந்நியோன்னியமே இல்லையாம். எந்நேரமும் முகத்தை—உம்—என்று தூங்கு மூஞ்சிபோல் வைத்துக் கொண்டு கிடப்பாயாம். அது அறமன்று, சரியன்று. நமது யௌவன காந்தியின் உறுதியை இழத்தற்கு முன்னரே பதியின் பிரேமையை—அவருக்குத் திருப்தியானபடி யெல்லாம் இருந்து—நடந்து—நம்மை நன்கு சுவைத்துக் கொள்ள—அவரது ஆவல் தணியுமளவும்—அவரது மனம்போல்—அவர் பிரியப்படி—விட்டுவிட்டு—அதற்கெல்லாம் நாம் இஷ்டத்தோடும் உள் விருப்பத்தோடும் இடங் கொடுத்து நின்று அவரது அன்புக்கு உரியவளாக நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும். இந்த வழியிற் சென்று தான் நாம் நமது கணவனாரை நம் வசப்படுத்துதல் வேண்டும். இதுவே பெரிய வசிய ஔஷதம். அப்பொழுது தான் நமது யௌவனவன்மை வற்றித் தளர்ந்திட்ட நாளிலும், நம் மீது நம் பிராணபதி கொண்டுள்ள காதல்—பிரேமை—ஐக்கியம்—சலனப்படாமல் என்றும் பதிநூறகப் பிரவகித்தோடா நிற்கும். இந்த விஷயத்தில் இணக்கமின்றி பதியின் தேகதர்ம அவஸ்தையைத் 'திருப்தி' செய்யாது விலகி அவரது விவாக ரம்யத்தைக்

கெடுத்து விட்டு, மற்ற பயனிலா விஷயங்களில் அவருடன் ஒற்றுமைப்பட்டு நின்றால்—அது புத்திசாலித்தனமாகாது. எனவே, தம் கணவர் முன்பு நாணிக்கொண்டும், கோணிக்கொண்டும், அவரது மனோபீஷ்டத்திற்கு இணங்காமலும், அச்சமயம் வெகு சிடுசிடுத்தும்,—ஏதோ அவரது வற்புறுத்து தலுக்காகத்—தான்—மனவெறுப்புடன் இணங்குவது போன்றும், கணவனுக்கு அவனது மணவாழ்க்கையில் ஒரு அதிர்ப்தி தோன்றி விடும்படி—ஏமாறும்படி—நடந்து கொண்டும், இங்ஙனமாக—பயனுள்ள (புத்திர பாக்கியத்துக்கு ஏதுகரமான அத்தவப்பொழுதை வீணே அவப் பொழுதாக்கிப் பாழ் படச் செய்து புருஷத் துரோகியாய், சண்டாளியாய், காதகியாய் மாற லாகாது. நம்மை நம்பிய கணவனுருக்கென்று பயன்படாத இத்தேகம் இருந் தென்ன, போயென்ன?

கனகவல்லி:—தாங்கள் என்னைப் பற்றிச் சொல்லியன வெலலாம் முன்பு நடந்தது. நான் இப்போது திருந்தி விட்டேன். பதிபக்தியைக் குறித்து எனக்கும் சொந்தத்தில் கொஞ்சம் அநுபவமுண்டு. ஆடவர்களினும் அதிக அபேக்ஷை—தாகம் உடையவர்களாக நம்மைக் காண்பித்துக்கொண்டு, நம் கணவரின் விருப்பத்தைக் குறிப்பாக வுணர்ந்து, அவர் பிரியத்துக்கு இசைந்து நின்று, அவரது காதல்தாகம் நணிந்து பெருகிட வைந்து, அதை எஞ்ஞான்றும் வற்றாத ஸமுத்திரமாக்கி, அதனால் நம் பதியின் உள்ளத்தைக் கவர்தல் வேண்டும். தங்களின் அபிப்பிராயமும் இப்படித்தானே. ஒரு ஆடவனுக்கு—அவனது பல்வகைத்தாய லோக கஷ்டங்களும் துயரங்களும்—அவனது மனதில் அவ்வளவாகத் தோன்றாதபடியும், அவனது வாழ்க்கையில் வெறுப்பும் தெவிட்டுதலும் உண்டாகாதவாறும் செய்விப்பவள் அவனது பிரிய மனைவியே யாவாள். அவள் நடந்து கொள்ளும் விதத்தைப் பொறுத் துப் புருஷனது சுகபாக்கிய போகாதிகள் அமையும்.

லக்ஷ்மீ சாரதம்:—கஷ்டமோ, சுகமோ, லாபமோ, நஷ்டமோ, துயரமோ—எதுவாயினும் சரியே; அவற்றை நாமும் நமது பதியுமாய் ஸமமாகப் பாகித்துக் கொள்ளக் கடவோம். நம்முடைய எத்தகைய ரகசியங்களையும் அந்தரங்கங்களையும் நமது பதியிடம் நாணமின்றித் தெரிவித்துக் கொள்ள நம்மால் முடியும்—கூடும். அவரிடத்தில் நமக்கு மறைபொருள் ஒன்றுமில்லை. நமது மானத்தையே அவருக்கு அர்ப்பணம் செய்திருக்கின்றோம். அது பகவத் ஆக்ஞை—பரம பிதாவின் கட்டளை—ஸர்வ பிராணிகளுக்கும் பொருந் திய இயற்கைப் பிரமாணம்-அமைப்பு. ஸ்திரீ புமான்களிருவரது ஹிருதயங் களும் தேகமும் ஒன்றுபடுதற் கென்றே இந்த அமைப்பு—கூட்டுறவு—ஸம் ஸர்க்கம் உலகு தோன்றிய நாள் முதலாக அதுவும் கூடவே தொடர்ந்து வருகிறதுபோலும். ஸதிபதிகளுக்குள் எத்தனை விரோதங்கள், கலகங்கள் பிரிவுகள் நேரினும், அந்த ஒன்று படுகையின் பிரபாவமானது எல்லா மனஸ் தாபங்களையும் அவர்கள் மறந்துவிடும்படி செய்விக்கிறது. மனஸ்தாபத்தாற் பிரிந்தோரை மறுபடியும் ஒன்று சேரவைக்கிற பரம திவ்யாமிர்தம் அதுவே. அது பகவானால் உலகினருக்கு அருளப்பட்ட இணையில்லாத நன்கொடையாகும்.

கனகவல்லி:—நன்றாக எடுத்துத் தர்மநியாயமாய்ப் போதிக்கின்றாய் அக்கா! நமது பதி ஆடவரின் வர்க்கத்தைச் சேர்ந்தவராயினும், நமக்கு அவரை ஒரு ஸ்திரீவர்க்கத்தைச் சேர்ந்தவர் போலவும், ஒரு பெண்ணைப்

போலவும் நாம் கருதலாம்—பாவிக்கலாம். ஒரு பெண்ணைப்போல நமது விலகிய ஆடையை அவர் தாராளமாகப் பிரியத்தோடு ஒழுங்குபடுத்தவும் அவருக்குச் சுதந்திரமுண்டு. ஸயன அறையிலிருந்தும் அவர் வெளிச்செல்லும் போது, நாம் ஆயாஸமேலீட்டினால் இன்னும் உறங்கியவாறாகவே இருந்தால், நமது ஸயனத்தை ஒழுங்காக்கி, நமது ஆடைகளைத் திருத்தி, ஒரு அன்பு முத்தமும் நமக்கு அளப்பரிய காதலுடனும்தந்து, அப்பால் கதவைத் திறந்து கொண்டு அவர்—நமது பிரேமபதி—வெளியே போகும் காட்சியின் நிகழ்ச்சிகள் ஆகா! எத்தனை மனோரம்யமானது!! ஒரு பெண் விதவையாய் விட்டாளென்று துக்கிப்பதெல்லாம் மேற்சொன்ன "காட்சியின் நிகழ்ச்சிகள்" அவளுக்கு இனி அந்த ஜன்மத்தில் வாய்க்கப் போவதில்லையென்ற ஸந்சலத்தினால்தானே! மேற்சொன்ன அந்தக் "காதற்காட்சியின் நிகழ்ச்சிகள்" இல்லையாகில் குடும்பவிர்த்தியேது, மகப்பேறு ஏது, தம்பதிகளுக்குள் ஒற்றுமை ஏது, கணவன் வீட்டுஞாபகம் ஏது, தாய்வீட்டில் மதிப்புதான் ஏது, மஞ்சள் குங்குமம் அணிவது ஏது, கைவளையல் ஏது, மருமகள்—மருமகன் வந்தமைவதேது, மாமி ஸ்தானம் பெறுவதேது—ஒன்றுமேயில்லை. ஒண்டிமரமாக நின்று பூமிக்குப் பாரமாய்த்தோன்றி ஒழிந்து தொலையவேண்டியதுதான். அழுவாரற்ற பிணமாய் அலங்கோலப் படவேண்டியதுதான். இனி நமது உயிர்த்தோழியும் நமது பிரேமபதியே யாவார். ஒரு தோழியினிடத்து ஸாதாரணமாக நாணம் விடுத்து போலி மரியாதைகளின்றி விளையாடுவதுபோலும் பேசுவதுபோலும் அவரிடமும் ஸல்லாபிக்கலாம். அவர் நமக்கு இறைவனால் அருளப்பட்ட மகத்தான பெரிய சொந்த சொத்தன்றோ? அவரது மடியின்மீது தலைவைத்தும் உறங்கலாம். அவரது மடியில் பஞ்சவர்ணக்கிளி போன்று உட்கார்ந்தும் கொள்ளலாம். அவருடன் இன்பமேவி அதி மனோரம்யமாய் ஸல்லாபிக்க நமக்கென்று ஒரு அந்தரங்கமான—ஏகாந்தமான அறையையும் கடவுள்—நமது பெரியோர்கள் நமக்கு அருளி யிருக்கின்றனரன்றோ?

லக்ஷ்மீகாந்தம்:—நமது அத்யந்த பிரியமுள்ள பணியாளாகவும் நமது பதியைச் சொல்லலாம். நாமும் நமது குழந்தைகளும் க்ஷேமமா யிருக்க வேண்டுமென்றுதானே அவர் இந்த உலகத்தில் இவ்வளவு பாடும் படுகிறார். நமது குடும்பத்தை அவர் தமது குடும்பமாக நினைத்துக் கொள்கிறார். பத்து மாதமும் நொந்து சுமந்துபெற்ற நமது மக்களை, நமது பதி—தமது குழந்தைகளாக—தாமே வயிற்றில் தாங்கிப் பெற்றதாக எண்ணிக் கொள்கிறார். இன்னும் நமது தேகத்தைத் தமது சரீரமாக—தமது சரீரத்தினும் மேலானதாகக்கருதி—அதற்கு ஆபரணங்கள் அணிவித்து—தாமே அவற்றை யணிந்து இன்பறுவதுபோன்ற சிந்தையிற் பூரித்து அழகு பார்த்துப் புளகாங்கித முறுகின்றார். என்ன பேதமை! என்ன விநோதம்! எத்தகைய ஒற்றுமை! பகவானுடைய பரமசக்திப் பிரபாவம்—இதில்தான்—தம்பதிகளின் அன்னியோன்னியத்தில்—அவ்விருவரானும் கலக்கப் படுகின்ற பனி யனைய சிறிய துளி பிறகு பெருகி யொரு ஆலரூபமாவதில்தான்—பிரகாஸிக்கின்றது—ஜ்வலிக்கின்றது. எனவே, நாம் பதியைத் 'திருப்தி செய்யும்' தர்மத்தை முழு மனதுடனும் பக்தி பூர்வமாய் நிறைவேற்றக் கடவோம்.

கனகவல்லி:—உயிரில்லாமல் தேகமிராது; தேகமில்லாமல் உயிருமிராது. அதுபோல, புருஷன்-மனைவி யென்கிற இருவருஞ் சேர்ந்து ஓ

உருவாம். அவர்கள் இருவரும் மலரும் மணமும்போல ஒன்றித்து ஒருவரை யொருவர் சிநேகியாமல் முரட்டுத்தனமாய் இருத்தலானது எத்தன்மைய தென்றால், தேகமும் அத்தேகத்திலுள்ள உயிரும் ஒன்றோடொன்று சண்டை செய்து இரண்டும் அழிந்ததற்குச் சமானமாம் இக்கருத்தடக்கியே,

"ஆவியின்றி யுடலமிலை, யுடலமின்றி
யாவியிலை, யதுபோற்பர்த்தா
தேவியெனு மிருவருஞ்சேர்ந் தோருருவாந்,
செழுமலருந் தேனும்போல
மேவியவ ரிருவருமே நள்ளாது
முரண்செய்யல்—விளங்க மெய்யுஞ்
சீவனுமொன் றோடொன்று போராடி
யழிந்ததொக்குஞ் செப்புங்காலே!

என்றார் நீதிநூலார்.

லக்ஷ்மிகாந்தம்.—நீ சொல்லிய பாடல் மிகவும் சரி. பொய்யாக வேடம்பூண்டு ஆடும நாடகத்தில், புருடனைப் போலவும் மனைவியைப்போல வும் வேஷம் தரித்தவர்கள் தாம் கொண்ட கொள்கையை நிறைவேற்றா திருப்பார்களாகில் சிரிப்புக் கிடமாகும். உலகமுழுதும் அறிய கணவன்—கணவியென மெய்யாகவே அமைந்தவர்கள் தங்களுக்குள்ளாக ஒருவருக் கொருவர் பட்சமில்லா திருப்பார்களாகில, இந்தப் பிரபஞ்சமாகிய விநோத நாடகத்தைத் தம்முடைய கையினால் ஆட்டுவிக்கும் கடவுள், அப்படிச் சிநேகமில்லாத புருஷன்—மனைவியை நரகத்தில் தள்ளிக் கோபிப்பார். இக்கருத்தை நீதி நூலில் பின்வரும் செய்யுளாலும் அறியலாம்:—

"பொய்யான நாடகத்திற் பதி-மனைபோல்
வேடமுற்றோர் பூண்டகன்மஞ்
செய்யாரே னகைக்கிடமா முலகறிய
மணவாளன் றேவியென்ன
மெய்யாவுற் றோர்கடம்மு ணற்பிலரேற்
பிரபஞ்ச விநோதக்கூத்தைக்
கையாற்கொண் டாட்டுவிக்கும் பரனவரை
யழற்புகுத்திக் காய்வனம்மா."

ஸகோதரிகாள்! மேற்சொல்லிய எங்கள் இருவரின் ஸம்பாஷணையி னின்றும் நீங்கள் அறிந்துகொண்ட கருத்துகள் என்னென்ன? உங்களின் வாழ்க்கைக்கு வேண்டிய ஞானத்தை அதிலிருந்தும் தெரிந்து கொண்டீர் களா?

உங்கள் அன்புள்ள,

லக்ஷ்மிகாந்தம்; கனகவல்லி.

# தாயைப்போலப் பிள்ளை!

மாற்றுந் தாயானால் என்ன? தனக்கு முன்னிருந்தவளது மக்களைத் தான் ஈன்ற குழந்தைகள்போல் பாவிப்பின், அவளது குழந்தைகளும் அவர்களை உண்மையான உடன்பிறப்பாகக் கருதி கிஞ்சிற்றும் பேத நினைவின்றி அன்புணர்த்திக் குலாவ வைக்கும்.

அதே மாற்றுந்தாய் தனக்கு முந்தியவளது மக்களைப் பகைப்பின், அவளது வயிற்றுப் பிள்ளைகளும் அவள் வழியை யநுஸரித்து அந்த முதல் தாரத்து மக்களைப் பேத நினைவுடன் நோக்கி வேற்றுமை உணர்ச்சியோடுந் தூர விலகி நிற்கவைக்கும்.

இவ்விதமே ஒரு பெண் தான் முன்பு மிக்கப் பிரீதித்து உறவு பாராட்டியிருந்த இடத்தில் அலக்ஷியமும் அன்பற்ற தன்மையும் சலிப்பும் கொள்வாளாகில், அதுவரையில் தாயைப்போலவே அந்த உறவினரிடத்தில் ஆர்வம் மிகுந்து நின்ற அவளது மக்களும் அப்பால் தமது அன்னையின் போக்கை யனுஸரித்து, அந்த உறவினரைத் தாழ்வாய்ப் பேசித் தூற்றிக் கேவலப்படுத்தவும் விலகவும் தொடங்கிவிடுகிறார்கள்.

இதனால் தெரிவது என்னவென்றால், தாய் இருப்பதற்குத் தக்கபடியே மக்களும் இருப்பர் என்பதாம். தாயினுடைய அந்தரங்க மனோபாவத்தையே அவளது குழந்தைகளும் வெளியிடுகின்றன. தாய் முதிர்ந்த அறிவு படைத்தவளாதலின் தன் மனோபாவத்தை மறைத்து வெளியில் போலி அன்பு காண்பித்துக்கொண்டு குலாவ முற்படுகிறாள். அவளது குழந்தைகளோ அவ்விதக் கபட மறைப்பின்றி உள்ளதை வெளியிட்டுவிடுகின்றன. தந்தையின் உறவினரைவிடத் தாயைச் சேர்ந்த பந்துக்களிடமே மக்கள் விசேஷித்த அன்பைக் காட்டுவது எங்கும் வழக்கம். தாயின் ஹிருதயமே குழந்தை பயிலும் பள்ளிக்கூடம். தாயைப்போலப் பிள்ளை. என்னைப்போல எங்கள் அம்மா என்கிறது குழந்தை.

## பிரீதிக்கும் பான்மையைக் குழந்தையிடம் கற்றுக்கொள்.

பெண்மணியே! உன் சிறு குழந்தை தன் தந்தையிடத்துக் கொண்டுள்ள நிஷ்களங்கமான ஆழ்ந்த அன்பை நீ பார்த்தே யிருக்கிறாய். அக்குழந்தையின் உள்ளம் மிகு நிர்மலமானது. அது தன் தந்தையிடத்து உணர்த்தும் அன்பில் பாதியையாவது உன் பர்த்தாவிடம் நீ கொண்டிருந்தால் வீட்டில் எவ்வித முணுமுணுப்பும் இராது. நீயும் உன் கணவனுக்குப் பிரியமான உத்தம பத்தினியாய் விளங்குவாய். இன்று முதல் அவ்விதம் நடக்கப் பார்.

## மறைத்து மற்றொன்று !

---



**என்னடா** இந்த விகட சித்தாண்டி இருந்தாற் போலிருந்து "மறைந்து மற்றேன்று" என்கிறானே! இந்தப் பித்தாண்டிக்கு இலக்கணம் எதும் தெரியாது போற் காண்கிறதே; விகட எத்தாண்டி ஏதோ அவசரத்திலே வாய்க்கு வந்ததெல்லாம் சரக்கு — சொன்னதெல்லாம் இலக்கணம்—கண்டதெல்லாம் அநுபவம்—விண்டதெல்லாம் விகடஞானம் — என்று வகை — தொகை—பகை—மிகை பாராமல் உளறி விட்டானுக்கும் என்று எண்ணுகிறீர்களோ! "மறைந்து மற்றேன்று" என்பதற்குப் பதிலாக வாய் குளறி "மறைதது மற்றேன்று" எனக் கூறினனுக்கும என்பீர்களோ! ஒருககால் மறைநது போயிற்றே—அநத 1926-ம் வருஷம்; இப்போது புறப்பட்டுக் கொண்டதே — இந்த 1927-ம் வருஷம்—இதை நினைத்துககொண்டு தான் 'மறைந்து மற்றேன்று" என்று பல்லவி பாடவந்தான்போலுமென்பீர்களோ! அவவிதமும் இல்லை. அவ்வாருன அர்த்தத்துக்கு "மறைத்து மற்றொன்று" என்பது இலக்கணரீதிப்படி பொருந்தாதே. "மறைந்து"—"மறைத்து" என்ற பதங்களுக்கு எவ்வளவோ பேதமிருக்கிறதே. இனி அதை "மறை1துப் மற்றேன்று" என்று திருத்தப் புகினுங் கூட அதுவும் வேறுவித சரக்காக மாறிவிடுமே. எப்படித்தான் மாறுமென்பீர்களோ? மரத்தின் உட்பகுதியை மூடிக் கொண்டு மறைக்கும் மற்றொரு தோலைக் காணவில்லையா? குழந்தைகளின் எத்துணை அழுகையையும் ஒரு கணத்தில் மாய வித்தைப்போல் போக்கிச் சமாதானப்படுத்தி விட வல்லதான மகா உத்கிருஷ்டமும் பரிசுத்தமும் பொருந்திய அமிர்த கலசங்களை மறைக்கும் மார்பகத்து மற்றொரு துணியின் ஞானத்தை அறிந்தீர்களா? மறைக்கும் மற்றொரு தோல் மரம் பட்டுப் போகாதவாறு காக்கின்றது. அவவிதமே அமிர்தமாகிய பால் நிறைந்துள்ள பாண்டத்துள் அன்னிய திருஷ்டிதோஷம் முதலாகிய தூசிகள் விழாவாறு மறைக்கும் மற்றொரு துணியானது

காக்கின்றது. ஒரு சிறு தூசி விழுந்தாலும் அல்ப தவறு காணினும் அது பொறுமல் உடனே பால் உடைபட்டுவிடுவது கண்ட விஷயம். எல்லாம் பாலிலேயே செய்யவேண்டியுள்ள லேகிய பாகத்தில் பால் முறிந்துவிடின், அதில் கலந்த பல சரக்குகளும் வியர்த்தமாகி வைத்தியர் திண்டாடுவதும் நடக்கும் சங்கதி. சிறு தோஷத்தைக் கூடத் தன்னில் ஏற்க இடம்தராமல் அவ்வளவு பரிசுத்தத்திலும் கண்டிப்பிலும் பால் நிற்கிறது. ஆயினும் தனக்குரியவர்களான நீர், சர்க்கரை என்னும் கணவன்—குழந்தைகள் இவர்களை மட்டும் மறைப்பின்றி வரவேற்றுக்கொள்கிறது. எனவே, தீமையை நீக்குதற்கே மறைக்கும் மற்றொரு கஜத்துத் துணி அங்கு துணையாகிறது. மூடியது மூன்றுலகமும் பெறும் என்பது பழமொழி. இவ்விதமே சூரியனைக் குடை மறைக்கிறது-ஏன்? வெயிலின் தீக்ஷண்யம் நம் மீது தாக்காதிருக்கவே. இவ்விதமே நாளை வரும் துன்பச் செய்தியை மறைக்க அஞ்ஞானப் பேய் நமது அறிவை மூடிக் கொள்கிறது. வாய்க்குள் சென்ற உணவு வெகு ருசிகரம் தரினும் வாய்மூடி மறைக்கும் சங்கதி ஏன்? உட் சென்ற பதார்த்தங்கள் பற்களால் பலவிதமாக அரைக்கப்பட்டு நாவினால் அவற்றின் ரஸம் யாவும் பிழியப்படும் நிலையில் அதைக் கண்கள் உற்று நோக்கின் அசங்கிதம்கொள்ளுமன்றோ? அதை மறைக்கவே மேல் வாயும் தாழ் வாயும் ஒன்று கூடி உள்ளேயுள்ள வஸ்துக்கள் வெளித் தெரியாவாறு மூடிக் கொள்கின்றது. பூமியி லிட்ட விதையை மறைக்கும் மற்றொரு பொருளாக மண் நிற்கின்றது. மண்ணால் அவ்விதை மூடப் பெறுவிடில் அதி னின்றும் முளை கிளம்புதல் கூடாததாகிவிடும். எவ்வளவு ஜாக்கிரதையாக வைத்தியர்கள் ரண சிகிச்சை செய்யினும், அவர்களுக்குப் புலப்படாமல் மறைக்கும் மற்றொரு கோளாறு அங்கிருந்து கொண்டு ரணத்தைப் புறையோட வைத்து அத்தனை சிகிச்சையையும் பாழ்படுத்துகிறது. ஒரு வியாதிக்கு மருந்து தர, அதிலிருந்து மற்றொரு வியாதி கிளம்ப—இதிலும் வைத்தியனது அறிவுக்கு எட்டாமல் மறைக்கும் மற்றொன்று உள்ளிருந்து கொண்டு அவ்வளவு வைத்தியத்தையும் வீணாக்குகிறது. அதிகப் பசியுள்ளவனுக்கும், பெரும் விபத்துகளில் அகப்பட்டவனுக்கும், கவலையில் தத்தளிப்பவனுக்கும் தான் உண்ணும் சோறு எப்படியிருக்கிறதென்றே தெரியாமல் வயிற்றை நிரப்புவோனாகிறான். அங்கே ருசிகரத்தை யுணராதபடி பசி, விபத்து, கவலை இவைகள்மறைக்கின்றன. ஒருவன் ஓரிடத்தில் கடை வைத்து நஷ்டப்பட்டுக் கடையை எடுத்துவிட, அதே இடத்தில் அதே கடையை மற்றொருவன் வைக்கத் தலைப்படுவதில் இங்கே மறைக்கும் மற்றொன்று எது? — முன்னவனைப் போலத் தனக்கு நஷ்டம் வாரா தென்று துணிந்த எண்ணம் தான். ரயிலிலிருந்து குழந்தை கீழேவிழ உடனே அக்குழந்தையைக் காக்கத் தாயும் குதித்துவிடுகிறாள். இங்கே குதிப்பதின் அபாயத்தை மறைக்கும் மற்றொன்று எது? புத்திர பாசமே. இதே விதமாக அந்த பாசமே குழந்தையின் அசங்கிதத்தை யெல்லாம் எண்ணாதபடி மறைக்கிறது. வேசியிடத்துப் படும் அவமானத்தை மறைக்கிறது எது? — அவளிடத்துக் கொண்ட கண்மூடிய காமமாம். எவ்வளவு கிழ வயதிலும் இவ்வுலகத்தை விட்டுப் போக விரும்பாத அத்தனை ஆசையையும் தற்கொலை செய்து கொள்வோன் ஒரு நிமிஷத்

தில் உதறி விடுகிறான்; இங்கு மறைக்கும் மற்றொன்று எது? தன் துயரத்துக்கு இனி மீட்சி யில்லை யென்று அவன் முடிவு கட்டி விட்ட அவனது சித்த விகாரம் தான். அது எதற்கும் துணிந்திட வைத்து விடுகிறது. சீதையைப் பிரிந்த ராமர் "காடும் செடியும் அவளாகத் தோற்றுதென் கண்கட்கே" என்றார். இங்கே வனவிருக்ஷங்களை யெல்லாம் சீதையாகத் தோற்ற வைத்து மறைக்குஞ் சங்கதி எது? சீதா தேவியிடத்திருந்த பிரேமையே. காட்டில் வாழும் புலி தன் இரைக்காகச் செடி கொடிகளிடத்து ஒளிந்து நிற்க, அங்கு பயிர் பச்சைகளை மேய வரும் மற்ற பிராணிகளுக்குப் புலி இருப்பது தெரியாமல் மறைக்கும் சங்கதி எது? புலியின் தேகத்திலுள்ள வரிக்கோடுகளே. அவை புலிக்கும் செடிகொடிகளுக்கும் பேதம் தெரியாதிருக்க வைத்துப் புலிக்கு ஆகாரம் கிடைக்கப் பண்ணுகிறது. இவ்விதமே நெடுக வியாக்கியானித்துக் கொள்ளலாம். மேற்கூறிய இவ்வளவும், இவற்றைப் போலொத்தனவும் "மறைத்தும் மற்றொன்று" என்பதில் அடங்கிவிடும். "மறைந்து மற்றொன்று" என்பதில், சென்று விட்ட பழய 1926-ம், புகுந்துவிட்ட புதிய 1927-ம், அதைப் போன்ற பலவும் அடங்கப் பெறும். மூத்தவள் சாக, மற்றொருத்தி வருகிறாள். இது மறைந்து மற்றொன்றாகும். ஆனால், இந்த விகடன் சொல்ல வந்ததோ—"மறைந்து மற்றொன்று" என்பதல்லவோ? அதையும் இப்போது படிப்படியாக அளந்து விடுகிறேன்; நீங்களும் பிடிப் பிடியாக அள்ளிக் கொள்ளுங்கள்!

***

"மறைத்து மற்றொன்று"—என்பதிலே உலக விநோதங்களும் பிரபஞ்ச அநுபவங்களும் வெகுவாய் ஊற்றெடுத்துப் பெருகுகின்றன. விவாகத்துக்கு வெளியில் பல கௌரவ வாசகங்கள் போதிக்கப் படினும், அந்தரங்கத்தில் மதன தாப சாந்திக்கே பிரதானமாய் அது கொள்ளப்படுகின்றது. புத்திர-புத்திரிகள் வீடு நிறைந்திருக்கையில் மனைவி தவறிய ஒருவன் மறுமணம் புனைவதின் நோக்கமென்ன?—முன்னே சொல்லியதுதான்! ஆயினும அந்த மதன தாப அவஸ்தையை மறைத்து மற்றொரு பேச்சான விவாகம் என்ற சொல்லை முன்னே வைத்து வெகு கௌரவத்தில் அதை மூடி விடுகிறார்கள்! கலகம் செய்ய வந்தவன் அதை மறைத்து மற்றொரு பேச்சைத் தொடங்கி அதிலிருந்து கலக மார்க்கத்தை எதிலிருந்து தொடங்குவதெனெ ஆராய்கிறான்! அவயவங்களின் அசங்கிதமான பெயர்களை மறைத்து மற்றொரு ரம்யமான பெயர்களிடுவதன் கருத்தென்ன?—அப்பெயர்களால் சித்தவிகார முண்டாகாமல் இருக்கவேதான்! ஒருவன் ஒரு பெண்ணின் எதிரில் தன் புன்னகையைத் தெரிவிக்கிறான். அப்பெண்ணோ அப் புன்னகையைத் தனக்கு நேரும் ஒரு விபத்தாக நினைத்து பதில் புன்னகை காண்பியாமல் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள். இதன் பொருளென்ன?—ஆடவன் அவளை வசியப்படுத்தக் கருதி, அதை மறைத்து மற்றொன்றாகிய புன்னகையை வெளியிடுகிறான். பெண்ணோ தான் புன்னகை புரிவதிலுள்ள தீமையை முன்னறிந்தவளாய் அதை மறைத்து மற்றொரு செயலான மௌனத்தையும் முகம் திருப்பிக் கொள்வதையும் அநுசரிக்கிறாள். சுபாசுபங்களில் பந்துக்கள் மரியாதை செய்வதின் பொருள் என்ன? இப்போது

தாங்கள் செய்தால் தான் அதற்குப் பதிலாகத் தங்களின் சுபாசுபங்களுக்கு அவர்கள் செய்வார்களென்ற கருத்தே. ஆயினும் அதை மறைத்து மற்றொன்றாகிய வெளியன்பையும் பந்தத்துவ உருக்கத்தையும் தங்களில் தோற்றுவித்துக் கொள்கின்றார்கள்! தங்களுக்கு மரியாதை செய்யாதவர்களுக்குப் பந்துக்கள் திருப்பி மரியாதை செய்வதேயில்லை. ஏன்? மேற்சொல்லிய சுயநலக் கருத்தால்தான். ஆயினும் அக்கருத்தை மறைத்து வெளிக்கு மற்றொன்றாக வெகு பிரியமும் அநுதாபமும் உடையவர்கள் போல் பாசாங்கு காட்டுகிறார்கள்! அவன் இறந்து விட்டானென்ற செய்தி தெரிந்து கொண்டும் உடனே வாராமல் மறுநாள் பத்து மணிக்கு நன்றாக உண்டுவிட்டு வருகிறார்கள்! ஏன்? தங்கள் உள்ளத்தில் சற்றும் பசை—பச்சாத்தாபம் இன்மையால் தான். ஆயினும் அதை மறைத்துக்கொண்டு வெளிக்கு மற்றொன்றாகிய ஓயாத அழுகையைத் தொடங்கி வெகுவாய்த் துக்கப்படுவோர் போல் அபிநயிக்கிறார்கள்.

***

வைத்தியன் மருந்துச் சரக்குகளை மறைத்து மற்றொரு அழகான பெயர் தந்து பிணியாளனுக்குத் தருகிறான். இதில் தன் மருந்தின் சேர்க்கைப் பொருள்கள் வெளி வந்து தன் ஜீவனம் கெடக்கூடாதென்பது ஒன்றாக, அதன் சேர்மானங்களைக் கூறிவிடின் நோயாளி இவ்வளவு தானுவென்று எண்ணிவிடுவதில்—அந்த அலக்ஷிய அவநம்பிக்கையில் அவனுக்குக் குணம் செய்யாமற்போய்விடுவதனால், அதற்காகவும் அதிற் கலந்த ஒளஷத சரக்குகளை மறைத்திட வேண்டியவனாகிறான். என்றுமில்லாத உபசாரமாய்த் தன் மனைவி பலவகைப் பக்ஷணங்களோடும் மிகு பணிவுடன் தன்னை உபசரிப்பதன் பொருள் என்ன?—தன் தாய்வீட்டார் வந்திருப்பதில் அவர்களுக்காகும் அதிக செலவைத் தன் கணவன் நினைத்துவிடாதிருக்கும்படி அதை மறைத்து அவனுக்காகவே எல்லாம் செய்ததான மற்றொன்றை வெளியில் புலப்படுத்திக் கொள்கிறாள். ஒருவன் தன் வீட்டில் விருந்திட்டும், சினிமா-நாடகம்-காபி ஹோட்டல் இவைகளுக்கு அழைத்துச் சென்றும் கனப்படுத்துவதேன்?—சதா நம்மோடு சிலர் சுற்றித் திரிவதேன்?—நமக்கு வெகுவாய் உழைப்பதாகக் காண்பித்துக் கொள்வதேன்? அவர்களுக்கு நம்மால் ஆகவேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது; அல்லது நமக்குப் 'பட்டுக் குல்லா' போட யோசித்தபடியுள்ளார். அதை மறைத்து மற்றொன்றாகிய இந்த நடிப்புகளையெல்லாம் காட்டி வெகு பிரியமுள்ளவர்களாகப் பாவனை புரிகின்றனர். ஒருவரது வீட்டுப் பெண்ணைக் கொள்ள நினைக்கையில், அவ்வீட்டாரே தம் வீட்டுக்கு எதிர் பாராமல் வந்து விடில் கனத்த விருந்துகள் நடக்கின்றன. விருந்துண்பவரோ 'ஏதப்பா பலமான விருந்து' என நடுங்கிச் சொல்லாமலே போய் விடுகிறார்கள். இதன் பொருள் என்ன? தங்களை வெகு விநயமுள்ளவர்களென்று நினைத்துப் பெண் தந்துவிடுவார்களென்பது இவர்களின் உள் எண்ணம். அதை மறைத்து அவர்களை மிகவும் கௌரவித்ததற்காக விருந்துகள் செய்ததுபோல் மற்றொரு பாவனையை உணர்த்துகிறார்கள்! இனி வந்தவர்களோ அவர்களுக்குப் பெண் தர மனமற்றவர்களாயிருக்கையில் இந்த விருந்து விசேஷங்களைக் கண்டு எங்கு அவர்கள் வார்த்தைக்கு இணங்கிவிட நேரு

கிறதோ வென எண்ணி, அதை மறைத்து மெதுவாக நழுவிவிடுதலான மற்றொன்றை யநுசரிக்கிறார்கள்.

* * *

விவாகமானவுடன் சில அன்பர்கள் மாறிப்போகும் வயணமென்ன? அதற்கு முன்பு கூடிக் குலாவத் துணை யில்லாமையால் அன்பர்கள் மீது பற்றுவைத்து நின்றனர். இப்போதோ ஒரு ஸ்திரீ ரத்தினம் தன் இன்பங்கட்குப் பொருத்தமாய் வந்திருப்பதில் மற்றவர்களுடன் கலந்து உறவாடிய மனம் மாறிவிடுகிறது. ஆயினும், அதை மறைத்து ஏதோ மனப் பிணக்குகளால் பிரிவதுபோல் மற்றொன்றைக் காண்பித்துக் கொள்கிறார்கள்! திடீரென்று ஐசுவரிய ஸம்பன்னனாகிவிட்ட நண்பன் தன் எளிய நண்பனைத் தன்னிடம் நெருங்க விடாமல் தூரத்துவதேன்? அவனால் தன் பணத்திற்குச் செலவு நேரு மென்பது ஒன்று; பின்னும் அவனால் தன் புது நண்பர்களுக்குத் தன் முன்னைய தரித்திர நிலைகள் தெரிந்துவிடக் கூடுமென்பதொன்று; எனினும் அதை மறைத்துவிட்டு வெளிக்குத் தன்னை நெருங்காத வகையில் எவ்வளவு அலக்ஷியங்கள் காண்பித்துக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கும் பிரயத்தனிக்கிறான். நகையை ஒருவனிடம் வைத்து வைக்கும்படி சொன்னவன் இரண்டு தினங்கள் பொறுத்து நாலு ரூபாய் தரும்படி அதிகாரத்துடன் கேட்கிறான். நகையைப் பெற்றவனோ உடனே நகையும் இரண்டு ரூபாயும் அவனிடம் தந்து, நகை தவறிவிட்டால் சங்கடம் என்று திருப்பிக் கொடுத்துவிட்டதாய்ச் சொல்கிறான். இதன் உட் கருத்தென்ன? தன் நகை அவனிடம் இருப்பதால் அதற்குப் பதிலாகப் பணம் தருவதற்குக் கேடென்ன என்பது இவன் எண்ணம். அதை மறைத்து ஏதோ அவசரமாகக் கேட்பதான மற்றொரு நடிப்பு செய்கிறான். நகையைத் திருப்பித் தந்தவனோ—நகையை வைத்திருந்தால் இந்தக் கடன் தொல்லை சூழுமென்பது உட்கருத்து. அதை மறைத்து நகை போக்கடிந்து போனால் துன்பமென்று திருப்பித் தந்ததாய் மற்றொரு நடிப்பு.

* * *

அரசாங்க சங்கதிக ளெல்லாம் உள்ளே அந்தரங்க ராஜீயக் கருத்தொன்று இருக்க, அதை மறைத்து மற்றொன்றான ஜனோபகாரக் கருத்தை வெளியிடுகையான நடிப்பாம். தங்களுக்குள்ள கௌரவப் பட்டங்களின் விருப்பத்தை மறைத்து வெளிக்கு உத்தியோகஸ்தர்களிடம் வெகு விசுவாசம் இருப்பதுபோன்ற மற்றொரு நடிப்பு. என்றைக்கும் அதிகமாகத் தன் இல்லம் வாராதவன் அடிக்கடி வந்து குலாவுகை வீட்டுப் பெண்களிடம் ஒரு கண் வைத்துள்ள காரணத்தாலாயினும், அதை மறைத்து மற்றொரு அன்பு நடிப்பு. உங்கள் கடியாரத்துக்கு இந்தப் பொன்சங்கிலி வெகுநன்றாக இருக்குமென்பவன், தான் அதை விற்க வந்ததை மறைத்து ஏதோ அவனுக்காகவே அதைக்கொண்டு வந்தது போன்ற மற்றொரு நடிப்பு. முன்பு சண்டையிட்டுப் பிரிந்துபோன பந்துக்கள் இப்போது தன்னைச் சிலாகிப்பதும், தன்னுடன் அதிகம் பழகுவதும், தங்கள் குமாரன் குமாரத்திகளுக்கு நடக்கவேண்டிய விவாகத்திற்கு அவன் தலைமையும் உதவியும் வேண்டியிருக்கிற தென்ற உட்கருத்தினாலாயினும், அதை மறைத்து, போனதுபோக—இனியாவது ஒன்று பட்டு நிற்போம் என்ற மற்றொரு ஒப்பாரியுறவு நடிப்பு!

***

இவ்விதமே பெண் வீட்டார் பிறகு தர மறுப்பரோ என்ற சந்தேகத்தை மறைத்து மற்றொன்றாகிய நிச்சயார்த்த சடங்கு! ஸ்திரீ புருஷர்கள் கூடிக்கொள்ளும் அசங்கிதத்தை மறைத்து மற்றொன்றாகிய 'சோபனம்'—'சாந்தி முகூர்த்தம்' என்ற மங்களப் பெயரின் நடிப்பு, இறந்தான்—செத்தான் என்ற அசுபச் சொல்லை மறைத்து 'ஈசனின் திருவடியடைந்தான்' என்ற மற்றொரு சுபச்சொல் நடிப்பு! ஆகாத செவ்வாய்க் கிழமையை மறைத்து மங்களவார மெனல் மற்றொரு நடிப்பு! நாகத்தின் கொடிய விஷத்தை மறைத்து, நல்ல பாம்பு என்று மற்றொரு நடிப்பு! எவன் துஷ்டனோ, போக்கிரியோ அவனது சகவாசத்தை வெறுப்பினும், அதை மறைத்து அவனால் துன்பமில்லாதிருக்க மற்றொன்றாகிய வெகு விஸ்வாசப் பாசாங்கின் நடிப்பு! வயிற்றுப் பிழைப்பை மறைத்து மற்றொன்றாகிய துறவற நடிப்பு! அவன் குடுமி நமது கைக்குச் சிக்கவில்லையே என்ற ஏக்கத்தை மறைத்து மற்றொன்றான அவனோடு வெகு உறவாடிப் பேசும் நடிப்பு! அவன் தன் கடன் தொகையை இன்னும் திருப்பித் தரவில்லையே என்ற விசாரத்தில் அதை மறைத்து, தனக்கு ஏதோ அவசரமாகப் பணம் தேவையிருப்பதுபோல் விநயமாய்க் கேட்கும் மற்றொரு நடிப்பு!

***

உட்பகை நெஞ்சில் நிறைந்திருக்க, அதை மறைத்து அடிக்கடி வந்து போகும் மற்றொரு வெளி நடிப்பு! அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு போகத் தமது வஞ்சகத்தை மறைத்து மற்றொரு நடிப்பு! உலகப் பிரக்யாதியை விரும்பி அதை மறைத்துத் தேச நலத்தை நாடும் மற்றொரு நடிப்பு! இலவச டிக்கட்டின் விருப்பத்தை மறைத்து நாடகக்காரர்களின் நட்பு ஆசித்தது போன்ற மற்றொரு நடிப்பு! வியாபார உள் மர்மங்களைத் தெரிந்து கொள்ள விரும்பி, அதை மறைத்து அந்த வியாபாரியின் காரியங்களுக்குத் துணையாக நிற்பது போன்ற மற்றொரு நடிப்பு! இரு பக்கத்திலும் குலாவுவோன் ஒருவர் ரகசியத்தை மற்றொருவரிடம் சொல்வதற்காக அதை மறைத்து வெறும் பேச்சுப் போக்கில் பல முக்கிய சங்கதிகளையறிந்துவிட நினைக்கும் மற்றொரு தந்திர நடிப்பு! நாங்கள் அங்கு வந்து சில நாள் தங்க நினைத்திருப்பதில் அவர் எண்ணம் எப்படியோவென்று ஒருவர் மற்றொருவரிடம் சொல்ல, அதை ஜாடையாய்த் தெரிந்து வருகிறேனென்று புறப்பட்டு வந்தவன், தான் வந்த சங்கதியை மறைத்துவிட்டு, அவர்களெல்லாம் இங்கு சில நாள் வரவேண்டு மென்கிறார்களே—செலவு அதிக மாகுமே—என்று வெகுவாய்ப் பரிந்து சேர்ந்து பேசுபவன்போல் மற்றொரு நடிப்பைத் துவக்கி, அதிலிருந்தும் அவன் மனப்போக்கை யறிய விரும்புகிறான். இவனைத் தன் மனிதனென்று நம்பி அவன் ஏதாவது உளறிவிட்டால் அதை அப்படியே இவன் அங்கு போய்க் கொட்டிவிடுகிறான். இவ்விதமே பத்து ரூபாய் கொடுக்கும்படி கடிதம் தந்து அனுப்பிவிட்டுப் பிறகு மற்றொரு ஆள்மூலம் அக்கடிதத்திற்குப் பணம் தராதிருக்கும்படி சொல்லியனுப்பி விடுகிறான். இங்கே மறைத்து மற்றொன்று செய்கிறானன்றோ? இவ்வளவு நெடுக விவரித்ததிலிருந்தும் விகட சித்தாண்டி விளக்கவந்த "மறைத்து மற்றொன்று" என்பதின் உள் ஞானங்களும் உலக அநுபவங்களும்

கபடங்களும் தெளிவாய்ப் புலப்படு கின்றதா? உங்களுக்கு வேண்டிய நற்கருத்துக்களை இவற்றிலிருந்தும் எடுத்துக் கொள்ளுங்கள். ராம்! ராம்! சுபம்! சு!! சுவாஹா!!!

---

பாபவிநாசம் என்னும் சிவக்ஷேத்திரம் கல்லிடைக்குறிச்சிக்கு ஏழு மைலுக்கப்பால் தாமிரபர்ணி தீரத்திலிருக்கிறது. மூர்த்தியின் திருநாமம் பாபவிநாசேசுவரர். கோயிலுக்கருகே யிருக்கும் ஆற்றின் கரையோரமாகக் கொழுத்த மீன்கள் கோடிக் கணக்காய்த் துள்ளி விளையாடுகின்றன. இவற்றை எவரும் பிடிக்கக்கூடா தென்பது அநுஷ்டானம். இந்த க்ஷேத்திரத்திற்கு ஒன்றரை மைலுக்கு மேற்கே மலையின்மேல் ஏறிச் சென்றால் கல்யாணி தீர்த்தத்தைக் காணலாம். இங்கு தாமிரபரணி நதி சுமார் 50 - அடி உயரத்திலிருந்து இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து வீழ்கிறது. அவ்வருவி விழும்படியான இடத்துக்குத் தான் கல்யாணி தீர்த்த மென்று பெயர். யாத்ரீகர்கள் இங்கு ஸ்நாநம் செய்து நீர் வீழ்ச்சியைக் கண்டு ஆநந்த மெய்தி சிலநேரம் சுத்தமான நீர்க்காற்றை ஸ்பரிசித்துப் பிறகு பாபவிநாசத்துக்குத் திரும்புவர். இதற்கு 10-மைலுக்கு மேற்கே பாணதீர்த்த மிருக்கிறது. இங்கு மிருகங்களின் தொந்திரவு அதிகமாதலின் யாத்திரிகர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வர். சில மாதங்களில் பாணதீர்த்தத்துக்குச் செல்ல முடியாதாம். கோடைகாலமே பாபவிநாசத்துக்குச் செல்வதற்கேற்றது. அப்பொழுது நல் முத்துக்களின் கோர்வையைப்போல் விளங்கும் நீர் வீழ்ச்சியையும், மலைகளின் மற்ற விநோதங்களையும் கண்டு களிக்கச் சுலபமா யிருக்கும்.

## அவ்வளவுக்கு அங்கே நெருங்கவைத்துக் கொள்ளாதே.

ஆம் அப்பா! அதில் நீ கண்ணுயிரு. அவன் எவ்வளவு நெருங்கிய உறவினனே யாகட்டும்! அவனுக்கு உன் மனைவியிடம் அவ்வளவு அதிகப் பழக்கம் ஏன்? உன் மனைவியும் அவனும் பேசிக்கொண்டிருக்கையில் நீ அங்குபோனதும் அந்த வார்த்தைகள் திடீரென்று நின்றுவிட்டன பார்த்தாயா? நீ அறியாதபடி ஒரு ரகசிய சங்கதியாய் உன் மனைவிக்கு அவனிடத்தில் அவ்வளவு பேச்சு ஏன்? உன் மனைவிக்கு வேண்டியதை அவன் உன்னிடத்தில் கேட்டு வற்புறுத்த வருவானேன்? அவ்வளவு தூரத்துக்கு அவனை விடாதே. உன் மனைவி எவ்வளவு கற்புக்கரசியாய் இருப்பினும் இந்த ஆண்மகனின் பழக்கத்தைப் பொறுத்துக்கொண்டிராதே. அது ஒருவேளை பிறகு பொல்லாப்பான சந்தேகமாய் முடிந்து விட்டாலோ—அது மகா ஆபத்து. உன் வீட்டிற்கு வந்தால் உன்னோடு மட்டும் அவன் பேசிக் குலாவட்டும். உன் மனைவியிடம் அவனுக்கு என்ன வேலை? என்ன பேச்சு? அது நல்ல செய்கையல்ல.

# நாணயம்

ரூபாய், அணு, பைசா என்பது தான் பண்டமாற்றுக்குப் பிறகு முதல் முதல் உண்டான நாணயமாகும்.

அது செம்பினுல் செய்யப்பட்டிருத்தலின் பஞ்சலோகங்களுள் செம்பே முதல் முதல் கண்டறியப்பட்டதெனல் வேண்டும். பைசா என்பது ஓரணு வில் பன்னிரண்டில் ஒரு பாகமாகலின், செம்பு அரிதாயும் பண்டங்கள் மலிந் தும் அக்காலத்திலிருந்தன என்பது விளங்குகிறது.

பைசா என்பதற்கு அரசன் தனது மார்பின் விற்குறியைப் பொறித்துச் செய்யப்பட்ட நாணய மென்பது பொருள்.

சாப=வில். அது பைசா என நிலை மாறித் திரிந்தது. இப் பைசா விலிருந்து தான் நாணயங்கள் பெருகின. நாணய மென்பதற்கு மூங்கிற் குழாயில் பொதிந்து வைப்ப தென்பது பொருள்.

அக்காலத்தில் பொன் முதலியவற்றை மூங்கிற் குழாயில் வைத்துக் காத்து வந்தனர்.

நாணம்—நாணயமாயிற்று; நாளம்—நாணமாயிற்று. நாளம்=மூங் கிற் குழாய்.

நாணக்குழாய்=தாலியுருவில் பக்கத்தே கோர்ப்பது.

நாணயம்=சொல் தவறுமையுமாம். அது பொன் முதலியவற்றைக் கொடுக்கல் வாங்கல்களாலுண்டாவது.

பண=ஹணு—ஹணு என்பது கன்னட பாஷைச் சொல்.

பகரத்தை ஹகாரமாக உச்சரிப்பது கன்னடர் வழக்கு. பணமென்பது முதலில் செப்பு நாணயத்தையும், பிறகு பொன்னுணயத்தையும் உணர்த்தி நிற்கும்.

சின்ன பணம் பெரிய பணம் என்பன செப்பு நாணயம்.

பணம் என்பது ஒரு பொற் காசினை உணர்த்தின் பொன்னுணயம்.

விராக னென்பதற்கு விற்குறி பொறித்த பொன்னுணய மென்பது பொருள். பிறவும் உணர்ந்து கொள்க.

மாகறல். கார்த்திகேய முதலியார்.

---

நீ எப்போதும் உழைத்துக்கொண்டிரு.

"உன்னுடைய காரியத்தில் பொது ஜனங்கள் கவலை செலுத்துவதில்லை. ஆனாலும் உன்னால் கூடியதை நீ செய்யவேண்டியதே."

மகாத்மாவுக்கு ஸ்ரீ சுரேந்திரநாத பானர்ஜி.

தேசாபிமானிகளின் ஆதரவுக்கு

# செலிபிரேடட் ஓர்க்ஸ்

புதிய வெளியீடு புஸ்தகங்கள்.

[illegible] பரிசோதனைக்கும் போதும்
[illegible] பிரயோசன
[illegible] புராணிக் புஸ்தகங்கள்

## பார்ட் I. ஆர்மெண்ட்

தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| ஹிந்து சபையின் மன்றத்துக்கு | ரூபாய் | 1—0—0 |
| மற்றவர்களுக்கு | ,, | 1—8—0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.


செலிபிரேடட் ஒர்க்ஸ்
பிரசுரகர்த்தர்ஸ், கவர்பிரிண்டர்ஸ்.
19, வெங்கடேசகிராமணி தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(437-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 30. மானுஷ்ய மில்லாதவன் மனுஷப் பதர்.

‘தோன்றிற் புகழொடு தோன்றுக’ என்றபடி மனுஷ்ய ஜன்மம் எடுத்தவனுக்குப் பெயரும் கீர்த்தியுமே பிரதானம். அதில்லாமல் பூமிக்குப் பாரமான மனிதனாக இருப்பதில் என்ன பயன் என்பது இந்தப் பழமொழியின் கருதது. மானுஷ்யத் தன்மை எப்படி உண்டாகும்? அன்பு ஒன்றினாலேயே அந்தத் தன்மையை அடைய முடியும். அன்பு இருந்தால் அதைச் சேர்ந்த இரக்கம், தயாளம், பெருந்தன்மை, தானதர்மங்களில் பிரீதி முதலிய உத்தம குணங்கள் தொடர்ந்து கூடி ஒருவனுக்கு உன்னததை உண்டு பண்ணும். போர்வீரனுக்கு வீரத்வம உண்டாவதும் கூடத் தன் அரசனிடமும் தன் நாட்டினிடமும் உள்ள அன்பினாலேயேயாம். அன்பு ஒன்று இல்லாவிடில் அவன் எதற்கும் உதவான். அவனுக்கு மானுஷ்யமே இல்லை. எக்காலத்துக்கும் கெடு புத்தியும், விஸ்வாச காதக நெஞ்சும், ஆபத்தான சமயங்களில் ஒதுங்கிக் கொள்ளும் சண்டாளத்துவமான செயலும் உள்ளவனாய்க் கால முழுதும் கேவலப் பிரவர்த்தியிலேயே சிந்தையைச் செலுத்துவோனுமாகிப் பரம தூர்த்தனாய் விடுகின்றான். இத்தகையோனை மானிடப் பதர் என்று சொல்லாமல் வேறென்ன கூறுவது? இங்கு மானுஷ்ய மென்பதற்கு அன்பாலாய பெருந்தன்மை, கம்பீரமான செய்கை என்பது பொருள். மானுஷ்யமில்லாத அற்பனுக்கு எக்காலத்தும் விடியாது. அவனுக்குப் பரம தரித்திரமே துணை.

### 31. சித்திபெறாத மருந்தும் மருந்தோ, பெற்றுப் படையாத பிள்ளையும் பிள்ளையோ?

மருந்தினுடைய தன்மை, அதை நாம் எந்த ரோகத்திற்குக் கொடுக்கின்றோமோ அந்த ரோகத்தைத் தீர்த்துக் குணப்படுத்துவதாகும். அவ்விதம் அது குணம் செய்யாவிடில் அந்த மருந்தும் ஒரு மருந்தாகுமோ? அது போல் நாம் பிள்ளையைப் பெற்றது—நமக்குப் பிற்காலத்தில் உதவுவான், நம்மைக் கவலையற்ற தன்மையில் வைத்துக் காப்பாற்றுவான், நாம் தேடிய பொருள்களை நம்மைவிட அதிகப் பாதுகாப்பாய்க் காப்பாற்றி விருத்தி செய்வான், நமது குடும்பமும் அற்றுப் போகாமல் அவனால் வாழையடி வாழையாய்த் தொடர்ந்து பெருகும் என்னும் கருத்தினால் தானே. இவவித கருத்துக்களை நிறைவேற்றாத பிள்ளையைப் பிள்ளையென்று எப்படிச் சொல்வது? நமக்குப் பிற்காலத்தில் உதவுவான் என்று நினைததிருக்க, அதற்கு எதிரிடையாய் நம்மை அவன் ஆதரித்துப் படையாமல் நிர்க்கதியாய்த் தெருவில் விடுவோனானால் அந்தப் பிள்ளையால் என்ன பயன்? நம்மைக் கவலையற்ற தன்மையில் வைத்துக் காப்பாற்றுவான் என்

பதற்குப் பதிலாக அவன் எப்போதும் துன்மார்க்கங்களில் கை நனைத்துக் கொண்டு பரம துஷ்டனாய்த் திரிந்து நமது கவலையை மேன்மேலும் பெருக்குவானாகில் அப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்று நாம் என்ன ஸந்தோஷத்தை யடையப் போகிறோம்? நாம் தேடிய பொருள்களைப் பின்னும் விருத்தி செய்வா னென்று நம்பியதற்கு முற்றும் வேறாகச் சில நாட்களில் யாவற்றையும் அழித்துத் தீர்த்து ஸர்வ நாசம் செய்து விடுவானாயின் அவனைப் பிள்ளை யென்று எப்படிச் சொல்வது? தனது வம்சம் அவனால் விருத்தி யடையுமென்றும், தனக்கு அந்திய காலத்தில் அருகிலிருந்து உதவி, அப்பால் எள்ளுந் தண்ணீரும் வார்ப்பானென்றும் நம்பி யிருக்கப் போகத் தனக்கு முன்னாலேயே அவன் போய்விடுவானாகில், அவ்வாறான பிள்ளையைப் பெற்றுப் பலனென்ன? விதிவசம் சூழ்ந்துகொண்டு காலம் முடிந்துவிடும் ஒரு சங்கதி போக, மற்றவைகளி லெல்லாம் ஒருவன் தன் பெற்றோர்களிடத்து அன்பாயும் ஆதரணையாயும் நடந்துகொள்வது கூடுமன்றோ? அவர்கள் சேகரித்த பொருளிடத்து அன்பு மிகுந்து அவற்றைப் பொன்போல் போற்றி வளர்ப்பதும் செய்யக்கூடிய காரியம் தானே. இவ்வாறாக அன்பு இல்லாதவகையில் அவ்வித பிள்ளையைப் பெற்றுப் படைக்கிற பயன் என்ன என்பது இப்பழமொழியின் கருத்தாம்.

### 32. சகோதரமுள்ளவன் படைக்கஞ்சான்.

சகோதரக் கட்டு, தாயின் வயிற்றிலே அன்பால் ஒன்று சேர்க்கப் பட்ட ஒரே இரத்த ஸம்பந்தக் கூட்டு ஆகும். அந்த உடன் பிறப்பின் அன்பு எதற்கும் துணிந்து நின்று, தன் உயிரையே கொடுத்தாயினும் தன் ஸகோதரத்தைக் காப்பாற்றத் தூண்டுதல் செய்யும். அவ்வாறான ஸகோதர முள்ளவர்கள் எந்த எதிர்ப்புக்கும் அஞ்சாமல் தைரியத்துடன் முன்னிற்பார்கள் என்பது இதன் பொருள்.

### 33. அடைந்தோரை ஆதரி.

நம்மையே கதியென்று நம்பி அடைந்தவர்களை அன்புடன் பாராட்டி ஆதரிக்கவே நாம் இவ்வுலகிற் பிறந்ததாகும். நம்மை விட்டால் வேறு கதியில்லை யென்று நம்பியிருப்பவர்களை நாம் துரத்திவிட்டால் அவர்களுக்குப் போக்கிடம் ஏது? நாம் அவர்களைக் கைவிட்டால், கடவுளும் நம்மைக் கைவிட்டு விடுவாரன்றோ? நம் கைக்கீழ் அடங்கிக் கிடப்பவரென்று அலக்ஷியமாய் எண்ணி நாம் கடுஞ்சொல் வழங்கத் தலைப்பட்டால் அதன் பலனை நாம் அனுபவிக்காமல் போகமாட்டோம். மனுஷ்யனாய்ப் பிறந்தவனுக்குத் தன்னை அடைந்தோரை ஆதரிக்கும் குணம் இருந்தே தீரவேண்டும். அவ்விதமாக ஆதரிக்கும் குணம் ஒருவனுக்கு உண்டாவதற்காகவே கடவுள் அவனுக்கு மனைவி மக்களைத் தந்து அதில் அவனைப் பழக்குவிக்கிறார். ஆதரித்தலாகிய பெருங்குணம் அன்பால் விளைவதாகும். எஜமானன் தன் பணியாளிடம் அன்புள்ளவனா யிருந்தால், அவ்வேலைக்காரனும் எஜமானனுக்கு உண்மையுள்ள மனிதனாகி அவனுடைய எல்லாக் காரியங்களுக்கும் உதவுவோனாய்விடுகிறான். இவ்விதமே ஒருவன் தன்னிடம் வந்தடைந்தோரிடத்து அன்புணர்த்தி ஆதரிக்குங் குணமுள்ளவனாய் இருந்தால், அவனை யடைந்தவர்களும் அவனிடத்து அத்தியந்த அன்புடன் கூடியவர்களாய் விளங்குவார்கள்.

34. இராமரைப்போல் ராஜா இருந்தால் அனுமானைப்போல் சேவக னிருப்பான்.

ஆம், அது உண்மை. இதை யார் இல்லையென்று மறுப்பார்கள்? இராமபிரானைப்போல் அடைந்தோரை ஆதரிக்கும் அன்பு மனத்தினரா யிருந்தால், அனுமானைப்போல உண்மையோடு உழைக்கும் உத்தம சேவகர்கள் ஏன் இருக்கமாட்டார்கள்? எல்லா நன்மைக்கும் அன்பே நற்றுய்.

35. அருமை யறியாதவன் ஆண்டென்ன மாண்டென்ன?

அன்பின் அருமை தெரிந்து, அதை உணர்த்தி ஆளாத அரசனுயினும், குடும்பஸ்தனுயினும் அவர்கள் ஆண்டென்ன, குடும்பத்தை நிர்வகித்தென்ன, அப்பால் அவர்கள் கடைசி இடமான மசானம் சேர்ந்தாலென்ன, அவர்கள் பிராணனுடன் இருந்தும் இல்லாததுபோல்தான் அன்பற்றவர்கள் வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் மற்றவர்களுக்கு அதெல்லாம் ஒன்று போலத்தான். இவ்விதமாக நினைத்து அன்பற்றவர்களிடம் மற்றவர்களும் அன்பற்றவர்களாகப் போய், அவன் ஒரு உதவாக்கட்டை யென்று ஒரு மூலையில் ஒதுக்கிவிடுவோர்கள். மனைவி மக்களின் அருமை யறியாத ஒருவன் இருந்தென்ன போயென்ன என்றும் மற்ருெரு வகையில் பொருள் கூறலாம்.

36. அன்பற்ற இடத்தில் நாயும் நில்லாது.

நாய் மிக்க நன்றியுள்ள பிராணி. ஒரு கவளம் அன்னம் கொடுத்தோரைக்கூட எக்காலத்தும் அது மறவாதது. அத்தகைய நாயும்கூட அன்பற்றுப்போன ஒரு இடத்தில் நில்லாதெனில், அன்பின் சாயலே இல்லாதவர்களை அந்த நாயினுங் கடையராகவே சொல்லவேண்டும். பின்னும், ஒரு கவள அன்னத்திற்கு அந்த நாய் காட்டும் நன்றி எத்துணையோ பெரியதாயிருக்க, காலமுற்றும் நம்முடன் கூடியிருந்து நம்மால் எவ்வளவோ உதவிகளை அடையப் பெற்றவர்கள் ஒரு அற்ப விஷயத்தில் பிணக்கு கொண்டு நம்மை அன்னிய மனிதர்களாகப் பாவித்து வேற்றுருவங்களாகி வேறு பட்டும், அன்பற்றும், நமக்கே சுண்ணும்பு தடவுவோர்களுமாகி அநுகூல சத்துருக்களாய் முடிகிருர்களே! இந்த அன்பற்ற தன்மையை என்னென்று சொல்வது?

37. அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிராது.

அன்பு இருந்தால்தான் அருமை தோன்றும். ஒரு காலத்தில் ஒருவரிடம் முற்றிய அன்பு இருக்கும்போது அவர்கள் நம் வீட்டுக்கு வருவது நமக்கு வெகு அருமையாய்ப்பட்டு அதற்கேற்ற பெருமையோடும் அவர்களை உபசரித்து அனுப்ப நம்மை யறியாமலே நாம் ஆவல்கொள்ளுகிருேம். காரணம் என்ன? நாம் அவர்களை நமக்கு வேண்டிய அருமையான மனிதர்களாக நினைத்ததுதான். அந்த அருமை எண்ணத்தால் நமது உள்ளத்து அன்பை எல்லாம் அவர்களிடம் கொட்டிவிடுகிருேம். எனவே அருமை என்பதற்கு இங்கு அன்பு என்பது பொருளாகும். மந்த புத்திகொண்ட மிருகமான எருமையே தன் அருமை யறியாத வீட்டில் குடியிராதெனில் தன்னுணர்ச்சிபெற்ற மனிதனு அந்த அருமையற்ற இடத்தில் நிற்கப் போகிருன் என்பது இதன் பொருள். ஒரு சமயம் ஒருவனுடைய குணம்

தெரியாமல் அவனிடம் வேலைக்கு அமர்ந்து விட்டாலும், பிறகு சீக்கிரமே அவனது அருமையற்ற தன்மையை உணர்ந்துகொண்டு அதைவிட்டு விலகிப் போய்விடுவதோடு, 'ஏன் அப்பா அந்த இடத்தை விட்டுவிட்டுப்போய் விட்டாய்?' என்று தன்னைக்கேட்பவர்களுக்கு அந்த அருமையற்ற இடத்தில் வேலை செய்வதைவிட ஒரு நாய் பேய் இடம் இருந்து வாழலாம் என்று பழித்துப் பேசவும் தலைப்பட்டுக் கொள்வார்கள். இவ்விதமே, முன்பு தங்களை அருமையாய் நினைத்து அன்பு பாராட்டியபோது, ஒன்று சேர்ந்து பாச முதிர்ந்து கூடியிருந்த உறவினரும் நண்பர்களும், அந்த அருமை தப்பி, அன்பற்றுப் பராமுகமாய் நடக்கிற காலத்தில், இவர்களும் அவர்களைவிட்டுப் பிரிந்துபோய், முந்திய மாதிரியிலா அவர்கள் நம்மை நினைக்கிறார்கள், அந்தப் படி அருமையாய் நம்மை எண்ணிய காலம் மலையேறிப் போச்சுதம்மா, இப்போது அவர்கள் அருமையும் அன்பும் மாறி வேற்று மனுஷ்யர்களாக வல்லவோ போய்விட்டார்கள், அந்த இடத்தில் நாம் வலிய வலிய நுழைவானேனென்று வருந்திய உள்ளமாய்ச் சொல்லி மனம் நொந்து தூரப்போய் விடுவார்கள். சிலர் தம்மை முன்பு அவர்கள் அருமையாய் நினைத்துப் பழகிய பாசத்தை மறக்க முடியாதவர்களாய், இப்போது அவர்கள் அருமையற்று, அன்பற்றுப் போய்விட்டதையும், அவர்களிடமிருந்து வாரத்துக்கு ஒரு கடிதமாக வந்ததுபோய் இப்போது வருஷத்துக்கு ஒன்றாகி, அதுவும் அபூர்வமாய் விட்டதையும் எண்ணி எண்ணி இரத்தக் கண்ணீர் விட்டுத் துக்கிப்பார்கள். அவர்களின் மனோவாதனையை—பாச உள்ளத்தின் ஆற்றாமையை—காலமும்—கடவுளும் தான் துணையிருந்து ஆற்றவேண்டும்

(தொடரும்.)

---

## மனம் தளரேல்.

நீ ஒடுங்கி சுருங்கிப் போவதின் காரணம் என்ன தெரியுமா? உன் ஆஸ்தி இனி வளரப்போவதில்லையென்று நீ நம்பிவிட்ட உன் மனச்சோர்வே உன்னை மேல் எழவொட்டாதபடி தடுத்துவிடுகிறது. உன்னிலும் ஏழையான அவன் எவ்வளவு உற்சாகமாய் இருக்கிறான் பார்! தன்னால் இன்னும் வேண்டியது தேட முடியுமென்றும், தனக்கு இனி சேரப்போகும் ஐசுவரியம் அபாரமானதாக இருக்கலாமென்றும் அவன் மேல்நோக்கிய சிந்தனைகளால் பூரிக்கிறான். அந்த சிந்தனை வேகமோ அவனை ஆத்மசக்தியில் உயரப் பண்ணி, அவனுக்குப் புதிய பலத்தையும் உண்டாக்கி தலை நிமிர்ந்து நிற்கச் செய்துவிடுகிறது! நீயும் அப்படியிருக்கப் பார். மனம தளரேல்.

# பிரபஞ்ச தரிசனம்

**சுதந்திரம்** இழந்த நாடுகளின் சரித்திரத்தைக் கவனித்தல் வேண்டும்.

ஐரோப்பாவிலே நாடுகள் சுதந்திரம் இழந்து பின்னர் விடுதலை யடைந்த வகையை உற்று நோக்கில் கட்டுக்கதையாகத் தோன்றும். சுதந்திரம் என்பது சொந்த வாழ்வாகும். பொது ஜனங்களின்—மூதாதைகளின் வாழ்வாகும். மூதாதைகளின் வாழ்வை நேர்ப்படுத்தி நிலைநிறுத்துவது அந்தந்த நாட்டாரின் கடமையாகும். இதற்குத்தான் சுதந்திரப் போராட்டம் என்று பெயர்.

***

நாட்டைக் காக்க வேண்டுமென்று வெறுங் கூச்சலிட்டுப் பயனில்லை. நாட்டிலே நமதான எதற்கு ஆபத்து வந்திருக்கிறது? எதை நாம் காப்பாற்ற வேண்டும்? என்று நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். தமிழ் நாட்டிலே உள்ள ஆறுகளுக்கும் மலைகளுக்கும் மண்ணுக்கும் கேடு நேரவில்லை. நாடு என்பது இவைகள் அல்ல. (மண்ணையும் பிறர் கைப்பற்றாதபடி காப்பது அவசியந்தான்.) பிறகு நாடு என்பது என்ன? நமது மூதாதைகள் தேடி வைத்து விட்டுப்போன பழக்க வழக்கங்களாம். நம் நாட்டுக்குத் தமிழ் நாடு என்று பெயர். நாட்டுக்கு இலக்ஷணமான பாஷை எல்லோருக்கும் பொதுவானது. தமிழ்ப் பாஷை தமிழர்களுடைய அருந்தனமாகும். தமிழ்ப் பாஷை அழியா வண்ணம் காப்பது நமது கடமையாகும்.

***

ஒரு தேசத்தில் அறிவாளிகளுக்குள் அநேக சங்கதிகளில் அபிப்பிராய பேதம் வரலாம். ஆனால் பாஷையைப் பற்றிய மட்டில் எண்ணத்தில் பிளவு இருக்காது. அறிவாளிகள் ஒன்று கூடித் தங்குமிடம் இலக்கியமாகும். இலக்கியப் பொக்கிஷத்தைக் காத்துச் சிறப்பித்து மேன்மைப்படுத்த அறிவாளிகள் எந்த தேசத்திலும் உயிர் துறக்கத் தயாராய் இருப்பார்கள். இந்த ஒற்றுமைக் கருவியை நாம் பலப்படுத்த வேண்டும்.

***

---

தேகப் பயிற்சி செய்.
நித்தமும் பயிற்சி ஒத்ததாய் செய்.

---

உடலினை யுறுதி செய்.
யௌவனங் காத்தல் செய்.
வீரியம் பெருக்கு.
ஆண்மை தவறேல்.
சிதையா நெஞ்சு கொள்.
ஏறுபோல் நட.
குன்றென நிமிர்ந்து நில்.
சூரரைப் போற்று.

---

—"தோளை வலியுடைய
தாக்கி - உடற்
சோர்வும் பிணிபலவும்
போக்கி - அரி
வாளைக் கொண்டு
பிளந்தாலும் - கட்டு
மாற உடலுறுதி தந்து"..........
—தேகப் பயிற்சியைத்
திடமுற நாடுக.

மு. லெ. சோமசுந்தரம்.
கீழச்சிவல்பட்டி.

---

முதலிலே அயர்லாந்திலே பெருமுயற்சி செய்தும் சுதந்திர தாகம் பொது ஜனங்களிடம் பரவவில்லை. செத்துப்போக விருந்த கெயிலிக் பாஷையை மீட்டும் உயிர்ப்பித்துஎழுப்பினு லொழிய ஜாதீயப் பெருமை நிலைக்காது என்று கண்டு கொண்டார்கள். ஆங்கிலபாஷையின் ஆதிக்கத்தைக் குறைத்தார்கள். கெயிலிக் பாஷையில் கவிகள், காவியங்கள், நாடகங்கள் எழுதினுர்கள். காவியங்களை நாட்டில் ஏராளமாய் அச்சிட்டுப் பரப்பினுர்கள். அயர்லாந்தியரின் தன்மதிப்பு பெருகி விட்டது. நாட்டிலே காக்க வேண்டிய சங்கதி இன்னதென்று உடனே புலனுகிவிட்டது. பிறகு அவர்களின் இயக்கமும் பலித்துவிட்டது.

***

ருஷியாவை எடுத்துக் கொள்ளுவோம். கொடுங்கோல் பலப்பட்டுக் கொண்டே வந்தது. சுதந்திரம் மனக் கண்ணுக்குக் கூட எட்ட வில்லை. புதிதாக ருஷிய இலக்கிய சம்பந்தமான இயக்கம் தோன்றிற்று. டால்ஸ்டாய், கார்கி, குரோபாட்கின் முதலிய பிரபல ஆசிரியர்கள் ஆச்சரியமான காவியங்களை ருஷிய ஜனங்களுக்கு எழுதித் தந்தார்கள். ருஷிய ஜனங்களுக்கு உடனே புத்துயிர் உண்டாயிற்று. பெருமை பிறந்தது. வலிமை பெருகிற்று. அறிவு தெளிவடைந்தது. ஜனங்கள் ஒருவாறு ஒற்றுமைப்பட்டார்கள். இலக்கிய சம்பந்தமான இயக்கம் தோன்றி யிராவிடில் ருஷிய ஜனங்கள் வலிமை பெற்றிருக்க மாட்டார்களென்பது உறுதி.

***

தென்னுப்பிரிக்காவைப் பாருங்கள். சில காலத்துக்கு முன்னா, அதாவது 34-வருஷங்களுக்கு முன்னர், தென்னுப்பிரிக்காவி லிருக்கும் போயர்களும் ஆங்கிலம் பேசி வந்தார்கள். அவர்கள் சொந்த உணர்ச்சியையும் பெருமையையும் படிப்படியாய் இழந்து கொண்டே வந்தனர். திடீரென ஒரு தீர்மானம் அவர்களுடைய மனதிலே உதித்தது. ஆங்கில பாஷை மூலமாய்த் தங்களுக்குக் கதி கிடையாது என்று தெரிந்து கொண்டார்கள். போயர் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப்பள்ளிகளுக்கு அனுப்பாமல் தடுத்து விட்டனர். உடனே புதிய இலக்கியம் தோன்றிற்று. ஜனங்கள் ஒருமனப்பட்டார்கள். அத்துடன் நாட்டுக்குச் சுதந்திரமும் கூடவந்தது.

***

இத்தாலியா தேசத்திலும் இதே கதை தான். மாஜினி, மான்ஸோனி போன்ற பிரபல ஆசிரியர்கள் புத்துயிர் ததும்பும் இலக்கியத்தை ஜனங்களுக்கு அமைத்துக் கொடுத்தார்கள். நாட்டில் எங்கும் இலக்கியத்தின் மூலமாய் சுதந்திர வாஞ்சையை நாட்டினுர்கள். எல்லாம் பிறகு இனிது முடிந்தது.

***

தமிழ் நாட்டை இப்பொழுது கவனிப்போம். நமது நாட்டில் பல்வேறு ஜாதிகள் இருப்பது உண்மையே. எனினும் எல்லோருக்கும் தமிழ்ப் பாஷை பொது. (அபிமானப் பிள்ளைகளுக்கும் சொத்தில் பங்குண்டு.) தமிழ்ப் பாஷையிலே இலக்கியப் பஞ்சம் இப்பொழுது இருக்கிறது. இந்த சொற்கள் சிலரைத் திடுக்கிடச் செய்யலாம். எனினும் இது உண்மை. பண்

டைக் காலத்து, எளிதிலே அர்த்தமாகாத சங்கத்து நூல்கள் தவிர, மனதைக் கவரக் கூடிய தமிழ் நூல்கள் இப்பொழுதில்லை. சுதந்திர தாகத்தை வளர்க்கக் கூடிய நூல்கள் இப்பொழுதில்லை. பாரதியார் நூல்கள் இருக்கின்றனவேயென்று சொல்லலாம். அது கூட சரியானபடி முழுதும் வெளியாக வில்லையே. இனி வெளிவரினும் தனி மரம் தோப்பாமா? பாரதியாரைப் போல் அநேக பாரதிகள் தோன்றினன்றோ சுதந்திர இயக்கம் வலிவு கொள்ளும்?

***

சைவப் புராணங்களை வைஷ்ணவர்கள் படிப்பதில்லை. திருவாய்மொழியை சைவர்கள் வாசிப்பதில்லை. அருத்தமாகாத சொல் தொடருள்ள கவிகளைப் புனைந்து பண்டிதர்கள் மனக்கோட்டை கட்டிக்கொண்டு தமிழ்ப் பாஷையின் வளர்ச்சிக்கான பிரதான விஷயத்தைச் செய்யாது போய் விட்டனர். அவர்கள் பேரில் குறை சொல்லிப் பயனில்லை. பழங்காலத்து மரபையே பற்றிச் சென்று விட்டனர். அதனால் நல்ல உணர்ச்சி கொடுக்கும் இயக்கத்துக்குத் தக்க இலக்கியம் தோன்றவில்லை. இயக்கமும் முன்பு இல்லை; இலக்கியமும் பிறக்க வில்லை.

***

இலக்கிய வேலை தான் இப்பொழுது தமிழ் நாட்டார் செய்யவேண்டிய முக்கியமான வேலையாகும். ஆந்திரர், வங்காளிகள், குஜராதிகள், மகாராஷ்டிரர்கள் இந்த வேலைக்கு முபபது வருஷங்களுக்கு முன்னரே துவக்கி விட்டனர். இப்பொழுது அவர்களுக்கு அரசியல் வேலை எளிதாய் இருக்கிறது. ஒரு ரவீந்திரர் தோன்றி வங்காளிகளுக்குத் தன் மதிப்பு ஊட்டி விட்டார். தமிழ் நாட்டிலும் பாரதியார் தோன்றி மறைந்து விட்டார். ஸ்ரீ. ஜீ. சுப்பிரமணிய ஐயர் தமிழ் மொழியைக் கொண்டு ராஜீய ஞானத்தை இன்னவாறாகத் தமிழ் ஜனங்களுக்கு ஊட்டுவிக்கலாமென்று தெரிவித்துச் சென்று விட்டார். அவர்களை நாம் பெருமைப்படுத்த வேண்டியதில்லை. அவர்கள் தமிழர்களைப் பெருமைப்படுத்தி விட்டுப் போய் விட்டனர். அந்தப் பெருமையை நாம் பெருக்கிக் கொள்வது நமது கடமையாதும். அவர்கள் துவக்கின வேலைகளைச் செய்து முடிப்பது நமது பொறுப்பாகும்.

***

இலக்கிய வேலைக்கு சுதந்திர தாகம் பொங்கும் இளைஞர்கள் தேவை. சமரஸ எண்ணங் கொண்ட தேச பக்தர்கள் தேவை. தமிழ்ப் பாஷையின் மதிப்பைக் காக்கும் தமிழ்ச் சத்தியாக்கிரகிகள் தேவை. படிப்பு இல்லையே என்று கவலைப் படவேண்டாம். நூதனப்படிப்பை நாம் இப்பொழுது படைத்து வருகின்றோம். பாரதியார் பி. ஏ. பரீக்ஷை கொடுத்தாரா? பிரெஞ்சு தேச வாழ்த்துப் பாட்டாகிய "லாமார் ஸேஸ்" பாடிய இளைஞனுக்கு என்ன படிப்பு இருந்தது? புதிதாய்த் தோன்றும் இள ஆசிரியர்கள் இயற்கையிலேயே பிறவி ஆசிரியர்களாய் இருந்தால் அதுவே போதும். பிறவி ஆசிரியத்தன்மை பெறாத ஒருவர் என்ன பட்டம் பெற்றிருந்தாலும் அங்கு ஆசிரியத்துவத்தின் நறுமணம் கமழ்வது அருமை. இலக்கியத்தில் புத்துயிரின் மணம் கமழவேண்டுவதொன்றே நமக்குத் தேவை. அந்த சக்தி படைத்தவர்கள் பட்டங்கள் பெறாவிடினும் அவர்களே இவ்வேலைக்குத் தகுதி வாய்ந்தவர்கள்.

***

தமிழ் மொழியிலே தேசீய நாடகங்கள் தோன்ற வேண்டும். காம விகாரங்கொண்ட நவீனங்கள் மலிந்து வருகின்றன. "ஆநந்த மடம்" போன்ற நல்ல நவீனங்களை எழுதவேண்டும். மேல் நாட்டு வீரர்களின் வரலாற்றை வரைய வேண்டும். சுதந்திர தத்துவங்களை விளக்கும் புதுப் பத்திரிகைகள் தோன்ற வேண்டும். எழுதுவன வெல்லாம் எளிய நடையில் இருத்தல் வேண்டும். பொது ஜனங்கள் உபயோகப்படுத்தும் சொற்களை இலக்கியத்தில் எடுத்தாள வேண்டும். ஜீவதாது கொண்ட இலக்கியத்திலே தான் அழகு உண்டு. பொது ஜனங்களுக்கு அர்த்தமாகும் இலக்கியத்திலே தான் உயிர் உண்டு.

***

ஒரு மனிதனுடைய நல்வாழ்வுக்குக் கல்வி எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல, ஒரு தேசத்தினரது நல் வாழ்க்கைக்குத் தாய்ப்பாஷை அவசியமாயிருக்கிறது. அது தன்னைச் சொந்தமாகக் கொண்டவர்களின் இன்பதுன்பங்களுக்கு இணைபட்டு நிற்கும் இயல்பு வாய்ந்தது. அவர்கள் உயர அதுவம் உயர்கின்றது; அவர்கள் தாழ்ந்தால் அதுவும் தாழ்கின்றது. உலக சரித்திரத்தைச் சற்று விசாரித்தால் இதன் உண்மை புலப்படும். நேற்றுவரை ஜப்பானிய பாஷையை யாரும் விரும்பி யிருக்க மாட்டார்கள். இன்றோ அவர்கள் உயர அவர்கள் பாஷையும் உயர்ந்து நிற்கின்றது. ஆதலின் அப்பாஷையைக் கற்பதால் அநேக நன்மைகளை யடைய ஏதுவாகு மென்று கருதப்படுகிறது. நாம் உயர்வடைய வேண்டு மென்று ஆத்திரப படுவதற்குத் தக்கபடி நம்முடைய தமிழ்ப் பாஷையும் உயர்வாக்கப் படவேண்டுமென்ற எண்ணம் நமக்கு இல்லை. நம்முடைய தமிழ்ப் பாஷையை முன்னேறும்படி செய்து, அதன் ஒளியைப் பின்பற்றி நடப்பதே நம்முடைய சுதந்திர நல் வாழ்க்கையைப் பெறுவதற்குச் செல்லும் சரியான பாதையாகும். மேலும் அதுவே நம்முடைய சுதந்திர தாக வாழ்வு என்றும் மாளிகையின் பெயர்த்தெடுக்க முடியாத அஸ்திவாரமுமாகும். சுதந்திர வளர்ச்சியின் வழி இதுவே.

---

வசன நடையில் சுதந்திர தத்துவங்களை அமிர்த வருஷம் போல் மொழிவதற்குத் தமிழ்நாட்டுத் தத்துவ சாஸ்திரியான ஸ்ரீமான் வ. இராமசாமி ஐயங்கா ரவர்கள் (வ. ரா.) உள்ளார். ஜாதீயக் கவிதைகள் புனைவதற்கோ ஸ்ரீமான் பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் உள்ளார். இவ்விரு பெரியோர்களையும் சலியாது உழைக்குமாறும், நூல்கள் எழுதுமாறும் தமிழகத்தார் தூண்டுதல் வேண்டும்.

# பெரியாரின் மொழிகள்

(434-வது பக்கத் தொடர்ச்சி.)

42. O, pleasure, you are indeed a pleasant thing,
Although one must be damned for you no doubt.

*Byron.*

ஓ இன்பமே! நீ உண்மையில் ஓர் இன்பமான வஸ்துவே. ஆனால், உன் பொருட்டு நிச்சயமாக ஒருவன் நாசமடைய வேண்டி யிருக்கிறது.

பைரன்.

43. The question between man and man always is, 'Will you kill me or shall I kill you' *Carlyle.*

'நீ என்னைக் கொல்லுகிறாயா, உன்னை நான் கொல்லட்டுமா?' இதுவே மனிதர்களுக்குள்ள ஒரே பிரச்னை. கார்லைல்.

44. We look before and after
And pine for what is not;
Our sincerest laughter
With some pain is wrought;
Our sweetest songs are those that tell of saddest thought. *Shelley.*

நாம் முன்னும் பின்னும் பார்த்துப் பார்த்து இல்லாத வஸ்துவிற்கு ஏங்குகிறோம். நமது உண்மையான நகைப்பும் சிறிது வருத்தம் கலந்தே யிருக்கிறது. நமது இன்பமான கீதங்களோ மிகத் துன்பமான எண்ணங் களைக் கொண்டவை. ஷெல்லி.

45. God doth prefer
Before all temples, the upright heart and pure.

*Milton.*

கடவுள் எல்லா கோயில்களையும் விட தூயமானதும் நேர்மையானது மான ஹிருதயத்தையே மேலாகக் கருதுகிறார். மில்டன்.

46. The mind is its own place and in itself
Can make a Heaven of Hell, a Hell of Heaven

*Milton.*

மனம் தன்னிலையில் தனியே நின்று நரகத்தைச் சுவர்க்கமாகவும், சுவர்க்கத்தை நரகமாகவும் மாற்றும் வன்மை யுடையது. மில்டன்.

47. Kings are like stars—they rise and set—they have
The worship of the world, but no repose.

அரசர்கள் நக்ஷத்திரங்களை யொத்தவர்கள். அவர்களும் உதயமாகி அஸ்தமிக்கின்றனர். உலகம் அவர்களை வணங்குகிறது. ஆனால் அவர்க ளுக்குச் சாந்தி யென்பதே கிடையாது.

48. Full many a gem of purest ray serene
The dark unfathomed caves of ocean bear;
Full many a flower is born to blush unseen
And waste its Sweetness on the desert air. *Gray.*

*ஆழமறிய முடியாத இருட்டான கடலடியில் தூயமான காந்தியைப் பெற்ற அநேகம் முத்துக்கள் கிடக்கின்றன. எவ்வளவோ புஷ்பங்கள் மனிதர் காணாத விடத்தே மலர்ந்து அவற்றின் வாசனையைக் காட்டுக் காற்றில் வீணாக்குகின்றன. க்ரே.*

49. God made the country; and man made the town.
*Cowper.*

*கடவுள் கிராமத்தைச் சிருஷ்டித்தார். பட்டணங்களையோ மனிதன் நிர்மாணித்தான். கௌபர்.*

50. The glories of our birth and state
Are Shadows, not substantial things;
There is no armour against State
Death lays his icy hands on kings. *Shirley.*

*நமக்குப் பிறப்பினாலும், நம் நிலையினாலும் உண்டாகும் மகிமை வெறும் நிழலே; கெட்டியான வஸ்து வல்ல. விதிக்கு எதிராக ஆயுதமொன்று மிலது. யமன் தனது குளிர்ந்த கரங்களை அரசர் மீதும் பிரயோகிக்கிறான். ஷர்லி.*

51. What is in a name? that which we call a rose
By any other name would smell as sweet.

*கேவலம் பெயரில் என்ன உண்டு? ரோஜா என்றழைக்கப்படும் மலரை வேறு பெயரிட் டழைத்தால் அதன் மணம் மாறி விடுமோ?*

52. Suspicion always haunts the guilty mind;
The thief doth fear each bush an officer.

*குற்றமுள்ள மனதில் சம்சயம் ஜனித்துக் கொண்டே இருக்கும். திருடன் ஒவ்வொரு புதரிலும் அதிகாரி ஒளிந்திருப்பதாக எண்ணிப் பயப் படுகிறான்.*

53. There is a comfort in the strength of love;
'Twill make a thing endurable, which else
Would break the heart.

*அன்பையே பலமாகக் கொண்டவர்க்கு ஆறுதல் உண்டு. மனதைப் பிளக்கக்கூடிய விஷயங்களை ஸகிக்கும்படியாகவாவது அது செய்கிறது.*

(தொடரும்.)

R. இராமகிருஷ்ணன் B.A.,

# நட்பு

(444-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாருக, அவிவேகியின் நட்பைப்போல் ஆபத்துக்கிடமானது வேறில்லை; அவனைவிட விவேகமுள்ள விரோதியே மேல்.

அவிவேகி ஆஷாட பூதி

ஏனெனில், மூடனுடைய பகைமையால் பெரும்பாலும் துன்பமே யுண்டாகாது; ஒருகால் உண்டாயினும் அது எளிதில் விலக்கக் கூடியதாயிருக்கும். அங்ஙன மன்று யினும், அதனு லுண்டாகும் தீங்கினும் அவனது நட்பினுலுண்டாகும் தீங்குகள் மிகப் பலவாம். ஆதலின் 'தெளிவிலார் நட்பிற் பகை நன்று' என்றுர். இதற்கு மாருக, வேடிக்கைப் பேச்சுப் பேசி வீண் பொழுது போக்குந் தன்மையர் தொடர்பினுல் வருந் துன்பங்கள் விரோதிகளால் வருந் துன்பங்களினுங் கொடியவை.

> " கனவினு மின்னுது மன்னே வினைவேறு
> சொல்வேறு பட்டார் தொடர்பு "

என்றபடி சொல்லினுல் சிநேகர்போல் நடித்துக் காரியத்தில் கேடு செய்யு மியல்பினரது கேண்மை நனவில் மாத்திரமே யன்றிக் கனவின் கண்ணும் வருத்தங் கொடுக்கும். இத்தகைய உட்பகையாளர் நட்பு சமயம் நேர்ந்தவிடத்து 'மகளிர் மனம்போல மாறுபட்டு'ப்பகைமையில் முடியும். அவர்கள் சொல்லை நம்பலாகாது; பல நல்ல நூல்களைக் கற்று நல்ல சொற்களைச் சொன்னுலும் அவை நன்மை பயக்கா. 'அளவளாய் நட்டாலும் நண்பல்லார் நண்பல்லரே 'யன்றே?

***

இங்ஙனம் நேசத்தில் பல மோசங்கள் பழிபாவங்கள் இருத்தலின், நாம் ஒருவரது நட்பை நாடிய விடத்து ஆத்திரப்பட்டு ஸ்நேகித்துவிடக் கூடாது. அவ்வாறே, சிநேகித்த பின்பும் அவசரப்பட்டு அவரைவிட்டுப் பிரியலாகாது. இங்கே 'குலஞ் சிதைக்குங் கூடார்கட் கூடிவிடின்'—'பிறனைக்—கொலை யொக்குங் கொண்டு கண்மாறல்' என்பவை

நட்பாராய்தலின் அவசியம்

கவனிக்கற்பாலன. அன்றியும் 'நீக்கமறு மிருவர் நிங்கிப் புணர்ந்தாலு, நோக்கி னவர் பெருமை நொய்தாகும்' ஆகையால், 'கூடிப்பிரியேல்' எனவே, அவசரத்தால் சிநேக பாத்திரால்லாதவரைச் சிநேகிக்க நேர்ந்தால் மிகப் பெருந் துன்பத்திற்காளாக வேண்டிவரும் என்பது புலப்படுகின்ற தல்லவா? ஆகையால், ஒருவரோடு சிநேகிக்குமுன் மிக்க எச்சரிக்கையுடனும் பொறுமையுடனு மிருந்து தீர்க்காலோசனை செய்து அவர் நட்பின் தன்மையை ஆராய்ந்த பிறகே அவரோடு சிநேகிக்க வேண்டும். இதையே

> " ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
> தான்சாந் துயரந் தரும் "

என்று திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றுர்.

***

சிநேகிக்கத் தக்கவர்

இனி, நட்கத்தகாதவர் இருத்தலின் நட்பாராய்தல் அவசியம் என்ளும்; நட்பாராய்தல் அவசியம் என்றேற்படலின் நட்கத் தக்கவர் யாவரென்பதை யாராய்வது சால்புடைத்து. சிநேகிக்கத்தக்க ஒரு மனிதர், நட்பை விருத்தியாக்கி நிலை நிறுத்தக்கூடிய நன்னடக்கையும், அதை விட்டு விலகா திருக்கவேண்டிய மனோதிடமும் உடையவரா யிருக்கவேண்டும். அவர் நம்மிடம், படபடப்பின்றியும் தாராளமாயும் சந்தோஷத்துடனும் பழகுபவரா யிருத்தல் வேண்டும். நம் நட்பிலிருந்து நீங்கும்படி ஒருவேளை நேர்ந்த போதிலும், விசுவாசகாதகராகாது, நம்மை விரோதிக்காமலும், நாம் அவரை விரோதிக்கும்படி வைத்துக்கொள்ளாமலும் நடக்கும் சாதுரியமும், பெருமையும் பொருந்தியவரா யிருக்கவேண்டும். நம் உடைமைக்காகவன்றி நம்மை நமக்காகவே மதிப்பவராயிருத்தல் வேண்டும்.

இவற்றேடு, அவரவர் நிலைமைக்குத் தகுந்தவரோடு சிநேகிப்பதே நன்மை; ஆயினும் கள்ளமின்றி யுள்ளமொன்ருகும் அன்பு வெள்ளத்தினருக்கு ஜாதி பேதமும் மற்றெவ்வித உயர்வு தாழ்வும் இடையில் நிற்பனவல்ல. எனவே, எல்லாவிதத்திலும் நல்ல மனிதனே உத்தம சிநேகனுகிருன். 'ஊசியை ஊசிக்காந்த மிழுக்கும், உத்தமனைச் சிநேக மிழுக்கும்' என்பது பழமொழி.

* * *

நட்பாராய்தல்; கல்வி யறிவு 1. நன்னடக்கை 2. உயர்குடிப் பிறப்பு 3.

மேலே கூறிய குணங்க ளெவ்வளவும் உண்மையாக வாய்ந்தவர் வெகு சிலரே; ஆனல் அவைகளைக் கொண்டவராகக் காட்டிக் கொள்பவரோ கணக்கிலாதார். ஆதலின் ஒருவர் மற்றொருவருடைய உண்மையான குணங்களை உள்ளபடி யறிவது அசாத்தியம். எனினும், கல்வியறிவு, நன்னடக்கை உயர்குடிப் பிறப்பு இவைகளில் இரண்டேனு முடையோர் தமது உத்தம குணத்தை இடையிலே எப்போதும் மாறவிட மாட்டாரென்று தீர்மானிக்க இடமுண்டு. இவ்வுறுதி பற்றியே வேறு ஆராய்ச்சி யின்றி நட்புக் கொள்ளலாமென்று நாம் கூறவில்லை. நட்புக்குக் கல்வியறிவு, நன்னடக்கை, உயிர்குடிப்பிறப்பு இவைகளில் இரண்டேனும் அவசியம் என்பதையே வற்புறுத்துகிருேம். ஈண்டு,

"குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு
வினனு மறிந்தி யாக்க நட்பு"

என்பதைக் கவனிக்க.

* * *

நட்பாராய வழி. நல்லகால நண்பர்.

மேலே கண்ட இலக்கண முடையாரோடும் ஆராய்ச்சி செய்த பின்பே இணங்குதல் வேண்டும். அவ்வாறு செய்யவேண்டிய ஆராய்ச்சிகள் சந்தர்ப்பத்திற் கேற்ப பலவகைப் படுவன. தம்மைச் சூழ்ந்திருந்தவரில் உண்மையான நண்பரையறியும் பொருட்டு, ஒரு செல்வச் சீமான் செய்த சூழ்ச்சியைப்பற்றி வேடிக்கையான சிறு கதை யொன்று சொல்வதுண்டு. 'அர்ப்பத்னட் பாங்கி'யில் அவருடைய பணம் சிறிதுமே யில்லாதிருந்தும் அது முறிந்துபோன போது தம்முடைய செல்வமெல்லாம்

அதிற் சிக்கி யழிந்து போய்விட்டதால் தாம் ஒரு பிச்சைக்காரனுடைய நிலைமைக்கு வந்துவிட்டதாயும், அப்பொழுது தமக்கு ஒரு செல்லாக் காசுக்குக்கூட வழியில்லை யென்றும் தம் வறுமை நிலையை மிக்க விசனத்தோடு வெளியிட்டார். அந் நிமிடம்வரை அவர் வீட்டிலேயே அநேகமாய் எப்பொழுதும் இருந்துவந்த சொல்லளவில் நண்பர்களான பல பெயர்களில் இவ் விஷயத்தைக் கேட்டதும் அவருக்கு எல்லாவிதத்திலும் உதவுவதாய் முன்வந்த இரண்டொருவரைத் தவிர, எண்ணிக்கையற்ற மற்றையோர் அவரை யறியாதவரேபோல் வேறு பக்கம் திரும்பி அவரை வறுமையில் விட்டுப் பின்காட்டினர். அவர் மகளின் மணவாளனாக நிச்சயிக்கப்பட்டிருந்தவன் தனக்கு இன்னும் விவாக வயது வரவில்லை யென்று சொல்லி விட்டான். அவருடைய மகனுக்குப் பெண் கொடுப்பதாக வாக்களித்திருந்தவன் 'தன் மகள் தீக்குளித்து விடுவதாய்க் கூறுகிறாள்' என்று தெரிவித்து விட்டான். இவ்வாறு அத்தனவான் தம் நண்பர்களை முற்றிலும் ஆராய்ந்த பிறகு—அவர்களில் உண்மையானவர்களை யுணர்ந்துகொண்ட பின், தாம் எப்பொழுதும்போல பணக்காரரே என்பதை வெளிப்படுத்தினார். அப்பொழுது அவரிடம் வந்து மீண்டும் ஒட்டிக்கொள்ள முயன்றவர்கள் நல்லகால நண்பர்களைப் பற்றி வெளிப்படையான வார்த்தைகளைக் கேட்க நேர்ந்தது. இதிலிருந்து நட்பினரை ஆராய்ந்தறியும் சாதாரணமான வழி புலப்படுகின்றதல்லவா? (தொடரும்.)

லக்ஷ்மீ வெங்கடரமணன்.

---

## அவரைப்பற்றி உன் மனைவிக்கும் சொல்லிவை.

ஸகோதரா! நீ எந்த உத்தமனிடத்தில் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறாயோ, எவரை உனக்கும் உன் தொழிலுக்கும் பிராணாதாரமான துணையாய் நம்பி யிருக்கிறாயோ அவரைப்பற்றி உன் மனைவியிடமும் நல்ல குறிப்புகளாகச் சொல்லிவை. உன் மனைவியும் அவரது ஹிருதயத்தை அறிந்திருக்கும்படியாகப் பழக்கப்படுத்திவை. உன்னைப்போல் உன் மனைவியையும் நம்பும்படி செய். இல்லாவிட்டால் உன் காலத்திற்குப் பிறகு உன் மனைவி பல சுயநலப் புலிகளின் வார்த்தைகளில் சிக்குண்டு மயங்கி ஏமாறிப்போய் நீ நம்பியவனை நம்பாமல், சுயநல துராத்மாக்களின் வசமாகி, உள்ள சொத்துக்களையும் உன் பிரபல வியாபாரத்தையும் பாழ் செய்து கொண்டு, கடைசியில் என் பர்த்தா நம்பியபடி நான் அவரை நம்பாமற் போனேனே என்று பிரலாபித்து ஏழ்மையில் வாடும்படி அலங்கோலப்படுத்திவிடும். எவ்வளவு பயங்கர ஸம்பவம் இது! ஆகவே, எதையும் உன் மனைவிக்குச் சொல்லிவை. உன் எந்த சங்கதியும் உன் மனைவிக்குத் தெரிந்திருக்கட்டும். இது ஒரு பெரிய—பட்டறிந்த அனுபவ மர்மமாகும். இதை மறுபடியும் மற்றொரு முறை படித்துப் பார்.

# கவிதா விலாஸம்

## *ஸ்ரீ ஹரிக் கண்ணி

(453-ம் பக்கத் தொடர்ச்சி.)

41. (ஸ்ரீமன்) நாராயணாய நமாவெனு முனக்கரத்தைப்
பாராயணம் பண்ணப் பத்தியருள் ஸ்ரீஹரியே.

42. மதுசூதனா வென்று மாமும லெண்ணித்
துதிசெய்து பேறுபெறச் சொல்லியருள் ஸ்ரீஹரியே.

43. வாசுதேவா வுனையே வர்ணித்து நாடோறும்
பூசைசெய்தே பிழைக்கப் போதந்தா ஸ்ரீஹரியே.

44. பிழைக்க வுபாயமிதே பேருலகில் யார்க்கும்
அழிக்கப் படைக்கக்காப் பாற்றவல்ல ஸ்ரீஹரியே.

45. ஸ்ரீராமா வுன்னை யென்றன் சித்தமிசை நிறுத்த
வாராமற் செய்யேல் வரதா நீ ஸ்ரீஹரியே

46. வரதனெனக் கரியால் வந்த பெயர்க்கேற்பப்
பரதவிக்கு மென்றனைக்காப் பாற்றுவாய் ஸ்ரீஹரியே.

47. மேதினியின் வாழ்வதனை மெய்யென் றிருந்தேனையோ
வாதனைகள் வந்தபின்னவ் வாறிருந்தேன் ஸ்ரீஹரியே.

48. இறக்கும்பொழுதி லெமவாதை யென்னை
வருத்தாமற் காத்து வரந்தந்தாள் ஸ்ரீஹரியே.

49. ஆண்டுநீ யெய்தி யடியேனரு கிருந்து
மீண்டு பிறவாத வீடருள்வாய் ஸ்ரீஹரியே.

50. அறமென்ப தொன்றையும்யா னறியாதபாவி
பிறன்பொருண்மே லாசைமட்டும் பெற்றிருந்தேன் ஸ்ரீஹரியே.

51. ஒருவர் பொருளிச்சித் துழன்றலைந்தேனன்றி
ஒருவர்க்கியா னொன்று முதவுகிலேன் ஸ்ரீஹரியே.

52. ஏதுமுதவே னிரப்போர்க் கினிதுரையேன்
றீதுபலவுந் தினஞ்செய்தேன் ஸ்ரீஹரியே.

53. தெரிந்துந் தெரியாதுஞ் செய்த பிழைதன்னால்
வருந்தி யுன்றாள்சேர்ந்தான் வருத்தாதே ஸ்ரீஹரியே.

54. சரணம் விபீடணனார் தானடைந்த போதே
மரணமுதனீக்கி மகிமை செய்தாய் ஸ்ரீஹரியே

55. அவரிதய நன்மையினா லவ்வண நீ செய்தாய்
எவர்க்கு மதுவுளதோ வென்செய்வேன் ஸ்ரீஹரியே.

56. இதயம் பலவா றிருக்குமென்போற் பாவிக்
குதயமுனையல்லாம லுண்டோ சொல் ஸ்ரீஹரியே.

57. என்றன் குடும்பமதி லெல்லோர்க்கு நல்லறிவும்
உன்றனினைப்பு முண்டாகச் செய் ஸ்ரீஹரியே. (தொடரும்.)

தந்தை: சந்து. இராமசாமி நாயுடு.

All Rights Reserved to the Author.

## II

# கணிகையரின் கபட ஜாலம்

(1)

*ஒரு தாசியிடத்தில் ஒருவன் தனக்கிருந்த சகல பொருட்களையுங் கொடுத்து வறுமை யடைந்து, கடன்காரனாகி, கடனுக்காகச் சிறையில் வைக்க அவனை இழுத்துக்கொண்டு போகுஞ் சமயத்தில் அவன் சொல்லியது :—*

பூவையிவட் களித்தநிதி கணக்கிலையோர் கடன்காரன் புலிபோனம்மைச்
சாவடிக்கே யிழுக்கமயி லேயிடர்தீ ரென்றிவடன் றளில்வீழ்ந்தோம்
பூவில்வைத்த நிதியையோர்கிழப்பூதங் காத்தினிய பூபாவுன்னைச்
சீவபலி யிடினீவே னென்றதென்ற ளேவன்செய்வா டேரிவைதானே.

இதன் பொருள் .—*கிளிபோன்ற இந்தத் தாசிக்கு நாம் கொடுத்த திரவியம் கணக்கில்லாதது ; (அவள் நிமித்தம் பட்ட கடனுக்காக) ஒரு கடன்காரன் புலியைப்போல நம்மைச் சிறைச்சாலைக்கு இழுத்துக்கொண்டு போம்பொழுது, மயிலுக்குச் சமானமானவளே! இப்பொழுது நேரிட்டிருக்கிற துன்பத்தை நிவர்த்தி செய்யென்று இவளுடைய காலில் விழுந்தோம். பூமியிற் புதைத்திருக்கும் திரவியத்தை, (தாய்க்கிழவியாகிய) ஒரு கிழப் பூதம் காத்துக்கொண்டு, எனக்குப் பிரியமான அரசனே! உன்னைப் பலி கொடுத்தாற் கொடுப்பேனென்று சொல்லுகிற தென்றாள்; அந்தப் பெண்ணானவள் வேறென்னதான் செய்வாளென்க.*

(2)

*நேசமாயிருந்த காலத்தில் நீர் இறந்துபோனால் நானும் இறந்துவிடுவேனென்று சொன்ன ஒரு தாசியைப் பற்றி ஒருவன் சொன்னது :—*

நேரிழைநம் முடனிறப்ப னெனமுன்ன முரைசெய்தா ணிருபனம்மை
யீரவெனக் கொலைக்களத்திற் கிழுக்கவடி பற்றிப்பின் னிரங்கிவந்த
காரிகையை நோக்கினே மிஞ்சியவோர் கோவணத்தைக் கருவந்தே
னேருயிர்நம் மிருவர்க்கு நீர்வீயி னிறந்த தொக்குமென்றாள்.

இதன் பொருள் .—*ஆபரணங்களை யணிந்த இந்தத் தாசியானவள் நாம் இறந்தால், நம்முடன் தானும் இறந்து போவதாக முன்னாலே சொல்லி யிருந்தாள் ; (அந்தத் தாசிக்காக நாம் செய்த குற்றத்தி னிமித்தம்) அரசன் இப்பொழுது நம்மை வெட்டும்படி உத்தரவு செய்து, கொலைக்களத்துக்கு இழுத்துக்கொண்டு போம்பொழுது நமக்குப் பின்கூடத் தொடர்ந்து வந்த அந்தத் தாசியைப் பார்த்தோம். உம்மிடத்தில் ஒரு கோவணம் பாக்கி யிருப்பதால் அதைக் கருதி வந்தேன். நம்மிருவருக்கும் உடல் இரண்டானாலும் உயிர் ஒன்றானதால், நீர் இறந்துபோனால் நானும் இறந்து போனதற்குச் சமானமென்று சொன்னாளென்க.*

வேதநாயக வாக்கு.

# மலையாளத்து மந்திரவாதம்

பாலக்காட்டிற்கு அருகிலுள்ளதொரு கிராமத்தில் ஒரு வீட்டில் தம்பதிகள் வருஷக் கணக்காய்ப் புத்திர சந்தானமில்லாது மன வருத்தமடைந்திருந்தனர். அவர்களுக்குத் தர்மம் பண்ண போதுமான ஐவேஜி இருந்ததுடன், பூர்வீக சொத்துகளும் அதிகம் சேர்ந்திருந்ததினால் அக்கிராமத்தில் உள்ளோர் அவர்களைத் தனவந்தர்களாக மதித்து வந்தார்கள். இப்படி இருக்கும் நாளில், மலையாளத்து மந்திரவாதிகளில் ஒருவன் அக்கிரகத்துக்குப் போய்த் தான் அவ்வீட்டுப் பெண்மணியின் கையில் கட்டும் ஒரு ரக்ஷா மந்திரத்தினால் அவளைக் கர்ப்பவதியாக்கிப் புத்திரசந்தானம் கொடுக்க முடியுமென்றும், அதற்காகத் தனக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லவே, தம்பதிகள் ஒரு குழந்தையில்லாக் குறைவினாலும், குழந்தை உண்டாகுமென்ற ஆவலினாலும் மந்திரவாதி கேட்டபடி ஒப்புக்கொண்டனர். அவனும் ரட்சைகட்ட, எல்லோரையும்போல் இந்த வீட்டு ஸ்திரீ கர்ப்பிணியாகிப் பத்தாவது மாதத்தில் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தனள். மூன்றுமாத காலமாயிற்று; வீட்டில் தம்பதிகள் இருவரும் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். ஒருநாள் தகப்பனார் அயல் கிராமத்திற்கு அவசரமாகப் போகவேண்டி நேரிட்டபோது, தன் மனைவியைப் பார்த்துக் குழந்தையை ஜாக்கிரதையாய்க் கவனித்துக்கொள்ளும்படி பத்து விசை சொல்லிப்போயினன். வெளியிலிருந்து தாயார் உள்ளே வந்ததும், கூடத்தில் தொட்டிலில் படுத்திருந்த குழந்தை, தலையைத் தூக்கி—

"அம்மா, உன்னைக் குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படி அப்பா சொல்லிப்போனாரா?" என்று கேட்டது. உடனே தாயார் பயந்து அண்டை வீட்டார் எல்லோரையும் கூப்பிட்டுச் செய்தியைச் சொல்லிக் குழந்தையைத் தான் தொடேன் என்று சொல்லி விட்டனள். அயல் கிராமத்திற்குச் சென்ற கணவன் இரவில் வீடுவந்து சேர்ந்ததும், அன்று மத்தியானம் நடந்தவை யனைத்தையும் கேள்வியுற்று ஒரு புறம் துயரமும், மற்றொருசார் வியப்பும் உடையவனாய்க் குழந்தை மத்தியானம் முதல் பால் இல்லாமல் தொட்டிலில் கிடக்கிறதே என்ற ஆத்திரத்துடன் அதை யெடுத்துத் தன்னிடம் கிடத்தி இரவில் படுத்துக்கொண்டனன். நடு நிசியில் அக்குழந்தை தகப்பனின் கண்கள் இரண்டையும் பறித்துக்கொண்டு எங்கேயோ போய்விட்டது. மூன்றாவது தினம் தகப்பனும் மாண்டான். அந்த மந்திரவாதி ஒரு பேயையே தன் மந்திரத்தால் கட்டுப்படுத்திச் சிசு வடிவமாய்க் கர்ப்பத்தினுள் தங்குமாறு இருக்கவிட்டு ரூபாயைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டனனென்று பிறகு விளங்கிற்று.

## II

மற்றொன்று:—ஒரு மலையாள மந்திரவாதியிடமிருந்து ஒரு பிராமணன் ஏதோ மந்திரங் கற்று அதன் வழியாக ஒரு எட்சணியைத் தனது கிரகத்தில் எப்போதும் இருக்கும்படி வசியப்படுத்திக்கொண்டிருந்தான்.

அந்தத் தேவதை ஒரு வேலைக்காரனாக எப்போதும் வீட்டிலேயே விழுந்து கிடக்கும். அவனது மனைவி கர்ப்பிணியா யிருந்தனள். ஒரு தினம் அவனுக்கு வெளியில் போகவேண்டிய அலுவலிருந்ததினால் கர்ப்பிணியா யிருக்கும் தன் மனைவியை வீட்டு வேலைக்காரியுடன் உட்புறத்தில் படுத்துக் கொள்ளும்படிக்கும், கூடத்தில் எப்போதும் விளக்கு எரிந்துகொண்டிருக்கும்படிக்கும் சொல்லிப்போயினன். அன்றிரவில் பதிவிரதா ரத்நமான கர்ப்பிணி ஸ்திரீக்குத் தன் கணவன் அருகே யில்லாததினால் நித்திரை சரியாய் வரவில்லை. கண் விழித்தபடியே படுத்திருந்தாள். இரவு இரண்டு மணி சுமாருக்குக் கூடத்து விளக்கு சிறிது மங்கலாயிருந்தது. உடனே தாழ்வாரத்தில் படுத்திருந்த வேலைக்காரனான எட்சணி எழுந்து நாக்கினால் விளக்குத் திரியை முன்னிழுத்துச் சுடரைத் தட்டவும், இதைப் பார்த்துக்கொண்டிருந்த உட்புறத்தில் விழித்தபடி இருக்கும் கர்ப்பவதியான ஸ்திரீ—“என்னடா எச்சில் பண்ணி விளக்கை நெண்டுகிறாய்” என்றனள். உடனே எட்சணிக்குக் கோபம் பிறந்து அவளை ஒரே அடி அடித்துவிட்டது. மறுநாள் கணவன் வந்ததும் சமாசாரம் என்னவென்று வினவ, அந்த எட்சணி “காரியம் மிஞ்சிவிட்டது” என்று பதில் சொல்லிற்று. நான்கு நாள் ஜ்வரம் அடித்து ஐந்தாம் நாள் அந்த ஸ்திரீ மாண்டு போனாள்.

இவ்விதமாக மலையாளத்தில் அநேக மந்திரவாதிகள் இப்போதும் இப்படிப்பட்ட செயல்களைச் செய்துகொண்டு அந்தரங்கத்தில் காலம் கழிப்பதாக அநேகர் சொல்லுகிறார்கள் “மந்திரத்துக்கு மருந்தில்லை” என்று ஒரு பழமொழியுண்டு.

## III

ஸமீபத்தில் ஒரு மந்திரவாதி தன் பந்துவான ஒரு பெண் ஆஸ்பத்திரியில் ரணசிகிச்சையில் இருப்பதைப் பார்த்தார். அந்தப் பெண்ணுக்கு முதலில் ஒரு சிரங்கு புறப்பட்டு, வரவரப் பெரியதாகிப் புரையோடி தேகத்தில் ஒரு பாகம் பெரும் ரணமாகி இரண்டு மாதமாகச் சிகிச்சையில் கிடக்கும்படியாயிற்று. பிழைப்பது புனர் ஜன்மம் என்றும் தெரிந்தது. அந்த மந்திரவாதி அப்பெண்ணின் குமாரத்தியிடம் தானே அப்பெண்ணுக்கு சூன்யம் வைத்துவிட்டதாயும், அதனால் தான் இப்படியாயிற்றென்றும், இனி பிழைப்பது கிடையாதென்றும் சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால், ஈசுவர கிருபையால் அந்தப் பெண்ணுக்கு ரணம் முற்றும் ஆறிச் சுகம் உண்டாய்விட்டது. மந்திரவாதிகளின் சகவாசமே மிகவும் பொல்லாதது. “பாம்பாட்டிக்குப் பாம்பினாலேயே சாவு” என்பதுபோல, மந்திரவாதிக்கு அவனது மந்திரத்தினாலேயே மரணம் எதிர்ப்பட்டுக்கொள்வதும் உண்டு. எப்போதும் அக்கிரமப் பிரவர்த்திகள் வீண்போகாது. ஆண்டவன் ஒருவர் இருக்கிறார். அவர் கடைசியில் சிக்ஷிக்காது போகார்.

---

# சிறு மணித் திரள்

(456-ம் பக்கத் தொடர்ச்சி.)

219. "ஆசை ஆடம்பரங்களைக் கூடுமான வரையில் அடக்கியாள நீங்கள் துணிந்துவிட்டால் உத்தியோக மில்லாக் கஷ்டம் உடனே நீங்கிவிடும்."
(ஸி. ராஜகோபாலாச்சாரியார்.)

220. "நமது ஸ்திரீகள் பெங்களூர் புடவை போன்ற உயர்ந்த புடவைகளை ஏன் கட்டிக் கொள்ளவேண்டும்?"......"ஏழைகள் பால் அநுதாபம் காட்டாவிடில் நமக்கு நாகரீகம் இல்லையென்று பொருள்படும். நீங்கள் படித்து நாகரீக புத்தியுள்ளவர்களா யிருந்தால் கதரை வாங்குங்கள். கதர் என்றால் 'ஏழைகளின் பிழைப்பு' என்று அர்த்தம்."
(ஸி. ராஜகோபாலாச்சாரியார்.)

221. "அன்பினால் வெல்லமுடியாத தடை என்ன இருக்கிறது?" ........."அன்பு எப்போதுமே அது யாரிடம் செலுத்தப்படுகிறதோ அவரோடு ஐக்கியப்பட்டு விடுகிறது." (மகாத்மா.)

222. "பிரார்த்தனை என்றால் என்ன? ஆண்டவன் யார்? அவர் எங்கிருக்கிறார்? என்ற கேள்விகளைக் கிளப்பவேண்டாம். பிரார்த்தனையும் கடவுளிடத்தில் நம்பிக்கையும் மத நம்பிக்கையையே பொறுத்தவை.".....நமது திக்கற்ற நிலைமையை உணர்ந்து வேறு ஒன்றும் சாத்தியமில்லாததால் கடவுளிடத்திலேயே பூரண நம்பிக்கையையும் வைத்து விடுவதுதான் பிரார்த்தனை. (மகாத்மா.)

223. "ஆண்டவனை நாம் ஆயிரம் பெயர்களைக் கொண்டு தெரிந்திருந்தாலும், நம் அனைவருக்கும் அவர் ஒருவரே." (மகாத்மா.)

224. "மண்டி போடுவதால் பிரயோஜன மில்லை. நிமிர்ந்து நின்றுதான் போராடவேண்டும்." (பேர்னார்டு ஹூட்டன்.)

225. "இத்தனை கேடுகளும் நமக்கு ஒரு தினத்தில் தோன்றியவையல்ல. அதே மாதிரி அவைகளை அகற்றி நன்னிலை அடைவது ஒரு தினத்தில் நிறைவேறக் கூடியதல்ல. நீண்டகாலம் முயற்சிக்க வேண்டி யிருக்கும்," (டாக்டர் வரதராஜுலு நாயுடு.)

226. "உள்ளுக்குள் நாம் சண்டையிட்டுக் கொண்டிருப்பதால் நமது பலத்தை இழந்து விடுகிறோம்; அதிகார வர்க்கத்தினரை எதிர்க்க நமக்குச் சக்தி யில்லாதுபோய் விடுகின்றது." (ஸ்வாமி சிரத்தானந்தர்.)

227. "ரஸாயன எருவிட்டு விளைந்த சோளத்தைவிட, சாணி எருவிட்ட விளைந்த சோளத்தில் ஜீவசத்து மிகுதியாக உளது."
(கர்னல் மக்காரிஸன்.)

228. ........."வான சாஸ்திரம், கணித சாஸ்திரம் இவற்றில் முதல் முதல் பிரசித்தி பெற்றவர்கள் ஹிந்துக்கள் தான். அவர்கள் போதித்ததைத் தான் இப்பொழுதும் உலகம் கையாண்டு வருகிறது. ஐரோப்பியர்கள் அவற்றை யெல்லாம் கீழ் நாட்டிலிருந்துதான் கற்றுக் கொண்டிருந்தார்கள். எண்களை உபயோகிக்க ஹிந்துக்கள் தான் கண்டு

பிடித்து உலக முழுவதும் அதை வியாபிக்கச் செய்தார்கள். ஹிந்துக்க ளிடமிருந்து ஐரோப்பியர்கள் இதைக் கற்றுக் கொள்வதற்கு முன்னர் 1926 என்ற எழுதவேண்டி யிருந்தால் பல அட்சரங்களை M D C C V I என்று அடுக்கி எழுதிக் கொண்டிருந்தார்கள்.''

(ஆச்சாரியர் ஸர் பிரபுல்ல சந்திரராய்.)

229. "ரஸாயன சாஸ்திரத்தில் புராதன கால ஹிந்துக்கள் அநேக அபூர்வ ரகசியங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.''......"இந்தியர்கள் உலோக ஆராய்ச்சியில் எவ்வளவு தீர்களென்பதை அவர்கள் ரஸத்தை இலகுவாக சுத்தம் செய்வதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.''......"டில்லி யில் 14-நூற்றாண்டுகளுக்கு முன்பாக வார்க்கப்பட்ட குடப்மினார் என்ற இரும்பு ஸ்தம்பம் இவ்வளவு காலமாக மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் இருந்தபோதிலும் துருப் பிடிக்காது இன்னும் பளபளப்புடன் இருப்பதைக் காண்போர் வியப்பினால் விக்கிப்போகிறார்கள். இன்றைக் கும் அந்த ஸ்தம்பம் வார்ப்பதில் என்ன சாமான்கள் கலக்கப்பட்டன வென்பது கண்டு பிடிக்கப்படவில்லை. இதுபோல் துத்த நாகத்தை இதர உலோகங்களிலிருந்து எவ்விதம் பிரிக்கக் கூடுமென்றும் அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.'' (ஆச்சாரியர் ஸர் பிரபுல்ல சந்திரராய்.)

230. ஒரு பக்கம் முழுதும் எழுதித் தெரிவித்தும் கூடப் பிறர் மன துக்கு நன்றாக விளங்காத விஷயம் சில வேளை வேடிக்கைப் படங்களால் உடனே விளங்கும். எழுத்துக்குக் குறித்த ஒரே அர்த்தம் தான் சொல்ல முடியும். ஆனால் சித்திரத்துக்கோ அவரவர் மனோபாவத்திற் கேற்பப் பல பொருள் கொள்ளும்படி அது விரியும்.

231. தேக சுகத்தோடு பலமும் அவசியம். பலமிருந்தால் தான் வியாதியை வரவொட்டாமல் தடுக்கும் சக்தி தேகத்துக்கு உண்டாகும். பலமிருக்கும் வரையில் தேகத்தில் ஏற்கெனவே ஊறிய பழய நோய் தலை காட்டாது பெட்டிப் பாம்புபோல் அடங்கி யிருக்கும். பலம் குறைந்தவில் அது எழுந்து படம் விரித்தாடத் தலைப்பட்டு விடும்.

232. கமலக்கண்ணா! மக்கள் தம் உள்ளத்து வேட்கைகளை விட்டு விடும்போதே நின் தெய்வ் சம்பத்துக்கு உரியவராகின்றனர். கார்மேக வண்ணா! பார்வை குன்றியவனுக்கு நள்ளிருளில் கரை காட்டுவோன் நீ ஒரு வனே யன்றோ?

233. "ஸர் பிரோஸ்ஷா மேட்டா ஹிமாலய மலையைப் போலவும், லோகமான்ய திலகர் ஸமுத்திரத்தைப் போலவும் எனக்குத் தோன்றினார் கள். ஆனால் கோகலே கங்கா நதியைப் போலிருந்தார். புண்ணியநதியில் ஒருவர் சௌகரியமாக ஸ்நானம் செய்ய முடியும். ஆனால் ஹிமாலய மலை யின் மேலே ஏறமுடியாது. ஸமுத்திரத்திலும் சுலபமாக எவரும் இறங்கிச் சென்று விடமுடியாது. (மகாத்மா.)

234. "ராஜீய விஷயத்தில் கோகலே என் மனதில் வகித்த ஸ்தா னம் எப்போதுமே தனிமையாக இருந்து வருகிறது.'' (மகாத்மா.)

235. ஸ்தல ஸ்தாபனங்களைக் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்றுவதால் இரண்டு விதமான பலன்கள் உண்டு. அந்த ஸ்தானங்களின் நிர்வாகத் தைக் கொண்டு ஜனங்களுக்கு அநுகூலம் செய்ய முடியும். ஜனங்க ளுடைய இஷ்டத்தை அனுசரித்ததாக நிர்வாகத்தைச் செய்ய முடியும்.

ஸ்தல ஸ்தானங்களின் மூலம் ஜனங்களுக்கு ராஜீய ஞானமும் அநுபோக மும் உண்டாகும்.

236. ஆண் மக்கள் கற்று வருவது வீட்டிலும் போற்றப்பட்டா லொழிய அதன் பெருமை குறைந்து விடும். வெளியில் விஸ்தாரப் பிரசங் கம் செய்த கனவான் வீட்டுக்குள் படியாக் கூட்டமான பெண்களுடன் கலப்பதில் இருவரும் பயன் பெறுது போகின்றனர்.

237. ஆறு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப் பியே தீரவேண்டுமென்று ஆப்கானிய ஸ்தானத்து அரசரின் கட்டளை.

238. "மதிப்பு வாய்ந்த தலைவர்கள் யுக்தி வாதத்தில் இறங்கும் போது ஏற்படும் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது."

"ஸர்குலேட்"

239. "அரசியல் ஜனங்களுக்கு ஜவாப்தாரியாக இராதிருக்கையில், விசேஷ அதிகாரங்கள்—கவர்னர்கள், கவர்னர் ஜெனரல்களாகியவர்களிடம் இருக்கையில், ஜனப் பிரதிநிதிகள் என்ன பொறுப்பை வகிக்கக் கூடும்?"

"சுதேசமித்திரன்"

240. ஜகதீச சந்திர வஸு தாம் கண்டு பிடித்த ஒரு கருவியின் உரி மையை ஏராளமான தொகைக்கு விற்கும்படி கேட்கப்பட்டபோது, "அதைவிட என் மனைவியை விற்பேன்" என்று கூறி மறுத்தாராம். இவ்விதமே சில ஆசிரியர்கள் தங்கள் நூல்களின் உரிமையை விற்கச் சம்மதிக்காமல் எங்காவது குழந்தைகளை விற்பார்களா என்று மறுப்பதையும் கேட்டிருக்கிறோம்.

241. 1923–24-ம் வருஷத்தில் வெளி நாடுகளிலிருந்து 315-லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள $47\frac{1}{2}$ லட்சம் காலன் சாராய வகைகள் இந்தியா விற்கு வந்திருக்கின்றன. 1924–25-வருஷத்தில் 328-லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 53-லட்சத்துச் சொச்சம் காலன் சாராய வகைகள் இறக்குமதியாகி யிருக்கின்றன. 1925–26-ம் வருஷத்தில் 334-லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள $57\frac{1}{4}$ லட்சம் காலன் சாராய வகைகள் வந்திருக் கின்றன.

242. "மேனாட்டினர் இந்தியா விஷயத்தில் விசேஷ அக்கறை காட்டுகின்றனர். நம் நாட்டை அவர்கள் மதிக்க ஆரம்பித்திருக்கின்றனர். நம் வேலைகளையும் பாராட்டுகின்றனர். என்னை எங்கும் வரவேற்று அன் புடன் உபசரித்ததும், மகாத்மா விஷயத்திலும்—ஸர். ஜே. ஸி. போஸ் விஷ யத்திலும் அவர்கள் கொண்டுள்ள மதிப்பும் மரியாதையும் எனக்கு மிக்க மகிழ்ச்சியை யளித்தன. கீழ் நாட்டினைப்பற்றி விஷய மறிந்து கொள்ள இப்போது மேனாடுகளில் ஒரு ஆசையிருந்து வருகிறது."

(ரவீந்திரநாத் தாகூர்.)

---

இவ்வுலகத்தில் பல தீங்குகள் அறியாமையாலே செய்யப்படுகின்றன. எனவே, சற்று பொறுமையை வகித்து ஒருவர் அபிப்பிராயத்தை மற்றொரு வர் அறிந்து நடப்பதால் ஒற்றுமை யேற்பட்டு பரஸ்பரம் உள்ள குறைகளும் மனஸ்தாபங்களும் நீங்க வழியுண்டாகும்.

# விநோதக் களஞ்சியம்

**சுருக்கமான பதில் :—**

**யுவகன் :**—கண்மணி! உன் கன்னத்தில் கறகண்டு இருக்கிறதுபோல் காண்கிறதே?

**யுவதி :**—அது புசிப்பதற்கு யோக்கியமானதல்ல.

***

**மட்டிப் புத்தி :—**

**தலைவி :**—அந்த மீனைப் பொரிப்பதற்கு நன்றாய்க் கழுவினாயா?

**பரிசாரகை :**—அதைக் கழுவுவானேன்? அது தான் பிறந்தது முதல் ஜலத்திலேயே இருந்திருக்கிறதே.

***

**நங்கையின் குறிப்பு :—**

**துரை :**—எனக்குச் சலிப்பு உண்டாகுமட்டும் வெகு நேரம் உன்னுடன் பேசினேனே, என்ன பிரயோஜனம்?

**துரைசானி :**—உண்மைதான். புத்திசாலிகள் அவ்வளவு வீண் தொனப்பு தொனப்பமாட்டார்கள். எதிர் மனுஷ்யாளின் போக்கை ஒரே குறிப்பில் தெரிந்துகொள்வார்கள்.

***

**மாப்பிள்ளையின் பதில் :—**

**நண்பன் :**—ஏது மாமியார் வீட்டில் பலமாகக் கூடாரம் போட்டுவிட்டாயே?

**மாப்பிள்ளை :**—நான் எந்த வேலைக்கும் உதவாதவனென்று தெரிந்து தான் என் தந்தை நல்ல பணக்காரர் வீடாகப் பார்த்து எனக்குப் பெண் எடுத்தார். தந்தையின் கருத்தை இப்போது நிறைவேற்றுகிறேன்.

***

**சதா தொல்லைகொடுப்பவன் :—**

**மாதவன் :**—எப்போது பார்த்தாலும் அவன் என்னுடன் கூடிக் கொண்டு வீண்தொல்லை விளைக்கிறான். அவன் ஸகவாசத்தை ஒழிப்பது எப்படி?

**கேசவன் :**—நீயாகவே அவனுக்கு வலிய ஒன்று இரண்டு ரூபாய்களைக் கடன்கொடுத்துவிடு. அப்பால் உன்னிடம் ஏன் வருகிறான்? உன்னைக் கண்டாலும், உனக்கு இன்னும் கடன் திருப்பித்தரவில்லையே என்று பதுங்குவான். அத்துடன் அவன் தொல்லை தீர்ந்த மாதிரிதான்.

***

**இடத்துக்குத் தகுந்த விலை :—**

**விற்பவன் :**—ஐயா, இது புதுப் புத்தகம், மிக அருமையானது, விலை ரூபாய் மூன்று. தங்களுக்கு வேண்டுமா?

வாங்குபவன் :—இதை அதன் சொந்தக்காரர்களே விற்ருல் மூன்று ரூபாய் கொடுக்க சம்மதமே. அது அவர்களின் உழைப்புக்கு ஒரு பிரதி பிரயோஜனமாகும். ஆனால், நீயோ எப்படியோ 'அப்பி'க்கொண்டு வந்திருக்கிருய். உனக்கு அவ்வளவு விலை கொடுப்பது சரியல்ல. இரண்டணுவுக்கு அந்தப் புஸ்தகத்தைக் கொடுப்பாயா ?' அது கூட அதிகம்தான்.

***

அன்னியோன்னிய தம்பதிகள் :—

மனைவி :—எங்கே இன்றைய தினத்துக் கூலி ?

புருஷன் :—எஜமானர் நாளை தருவதாகச் சொன்னார்.

மனைவி :—பணம் கொண்டுவரவில்லையா ? பின்னே சோறு ?

புருஷன் :—என்னடி ! எல்லாம் உனக்காகவே உழைக்கிறேன். ஒரு நாளெல்லாம் அலுத்து வீட்டுக்கு வந்தால் இப்படிச் சிடுசிடு என்று படுகிருய். உன்னிழவுக்கு எத்தனை நகைகள் செய்துபோட்டேன். உங்கப்பன் வீட்டிலிருந்து ஒரு துரும்பாவது கொண்டுவந்தாயா ?

***

படியாப் பெண்ணுடன் வாழ்க்கை :—

கல்லா மனைவி :—உங்கள் கையை அவன் ஏன் அப்படிக் குலுக்கினான் ? இதென்ன ஆச்சரியம் !

பி. ஏ. பட்டதாரி :—அடி அசடே ! நீ நாட்டுப்புறம். கை குலுக்குவது ஸ்நேகத்தைக் குறிப்பிடுகிறது. இதற்கு இங்கிலீஷில் ஷேக் ஆண்ட்ஸ் (Shakehands) என்று சொல்வார்கள்.

கல்லா மனைவி :—அதுதான் போகட்டும். என்னவோ 'ஹா டு டு' என்றீர்களே !

பி. ஏ. பட்டதாரி :—'ஹா டு டு' அல்ல. 'ஹௌ-டு-யூ-டு. (How do you do) அவசரத்தில் அப்படிச் சொல்லிவிடுகிறோம். அது க்ஷேமம் உசாவும் வார்த்தையாகும். இந்த மூடப் பெண்களைத் திருத்த வழியில்லையா ? உனக்குள்ள அஞ்ஞானம் எப்போது நீங்குமோ தெரியவில்லையே !

கல்லா மனைவி :—அது போகட்டும். ஏதோ 'யூ—ஹாப்பி—நீ—யார்' என்றீர்களே ! அதென்ன ?

பி. ஏ. பட்டதாரி :—இதற்காகத் தான் பெண்களுக்குக் கல்வி அவசியமென்கிறோம். 'ஐ—விஷ்—யூ—எ—ஹாப்பி—நியூ—ஈயர்' (I wish you a happy New Year) என்ருல், 'புது வருஷம் உனக்கு மங்களத்தை யுண்டாக்கட்டும்' என்று அர்த்தம். இன்று புதிய 1927-ம் வருஷ ஆரம்பமானதால் அப்படிச் சொல்வது வழக்கம்.

கல்லா மனைவி :—இதென்ன புதுமை ! இன்று வருஷப் பிறப்பா ? சித்திரைமாத மன்ருே புது வருஷம் ?

பி. ஏ. பட்டதாரி :—அது ஆங்கில ஸம்பிரதாயம். கிறிஸ்தவர்களுக்கு இன்று வருஷப் பிறப்பு.

கல்லா மனைவி :—ஐயோ ! தாங்கள் கடைசியில் கிறிஸ்துவராகவா போனீர்கள் ?

பி. ஏ. பட்டதாரி:—ஏ மூடமே! படித்த எனக்கு நீ எங்கிருந்து மனைவியாக வந்தாய்? படித்த மனைவியிடம் குலாவி வித்தியா ஸம்பாஷணை செய்யும் இன்பம் இந்த ஜென்மத்தில் எனக்கு இல்லாமற் போய் விட்டதே! இனி இவ்விதம் உளறினால் அடிப்பேன்.

கல்லா மனைவி:—என்னைத் தாராளமாய் அடியுங்கள்—என்று சொல்லி முதுகைக் காட்டி அந்நிய மதத்தில் மட்டும் சேரவேண்டாமென்று பிரார்த்தித்தாள்.

பி. ஏ. பட்டதாரி:—நமது பெண்கள் மூடங்களானாலும், ஹிந்து மதமும் பூர்வாசாரணைகளும் அவர்களால்தான் பொன்போல் போற்றப்பட்டு அழியாது இன்றளவும் காக்கப்படுகின்றன—என்று கூறி, தான் பிற மதம் புகுவதில்லை யென்று தெரிவித்து தன் மனைவிக்கு ஒரு முத்தப் பரிசும் தந்தான்.

விவாகம் நடந்தபின் ஒத்துப்போவதே மேன்மை. தலை விதியை மாற்றமுடியுமோ?

---

இளம் பிராயமானது தனக்குப் பிரதிகூலமான வஸ்துவை அனுகூல மென்றும், அனுகூலமான வஸ்துவைப் பிரதிகூலமென்றும் தோன்றச் செய்யும். படிப்பைவிட விளையாட்டையே வெகு உத்ஸாகமாக நினைக்க வைக்கும். இவ்விதமே ஒவ்வொரு காரியங்களும் நன்மைக்கு எதிரிடையாக இருக்கும். அன்னியர்களின் வீட்டிற்கு வந்திருக்கையில் அவர்கள் வைத்துள்ள சாமான்களைக் கேட்டு, அதற்காகப் பிடிவாதத்துடன் அழச் சொல்லும். நமது வீட்டுப் பண்டம் அல்லவே, நாம் வந்திருப்பது நமது வீடல்லவே என்கிற ஞானம் உண்டாகாது. நாம் எல்லோரும் தாய்ப்பாலை யருந்தி இவ்வித தவறுகள் செய்து கொண்டு சிறுவர்களா யிருந்தவர்கள் தான்.

## வீண் தொன தொனப்புக்காரன்.

அவனால் ஒரு காசுக்கும் பயனில்லை! ஒரு உதவியும் செய்யப்பட்ட மனுஷ்யனல்ல. நல்ல அவசர சமயத்தில், வேலை நேரத்தில் திடீரென்று வந்து உன் பக்கத்தில் உட்கார்ந்துகொள்கிறான்! உடனே வீண் தொன தொனப்புக்கு ஆரம்பித்துவிடுகிறான். உன் வேலை அவ்வளவும் பாழாய்விடுகிறது. அதுமட்டுமா? அவன் நீ என்னென்ன வேலை செய்கிறாய் என்பதையும் ஆழமாய் ஒரு பார்வை பார்த்துக்கொள்கிறான்! உள்ளே கபடம், தந்திரம்! வெளியிலோ புன்னகையின் அமிர்தமழை! இந்த விருதா கோஷ்டியிலே உன் அரியகாலம் வீணாய்விடுகிறது! எழுதுவதற்கு ஞாபகத்தில் வந்த சங்கதியும் மறைந்துபோகிறது! மனோவேகமும் தடுமாறிவிடுகிறது! ஐயோ! ஆசிரியர்கள் இந்தத் தொன தொனப்புக்காரர்களால் படும்பாடு கொஞ்சமா?

## நாநாவிஷயக் குறிப்புகள்

இக்காலத்தில் அங்கங்கே கொலைக் கேஸுகள் நடப்பதற் கெல்லாம் காரணம் முக்கியமாய்ப் பொறாமையும் பொருளாசையு மென்னலாம். பெண்ணும் பொன்னும் எனக்கெனக்கென் றடித்துக் கொள்ளும் மனிதர்களே ஒருவரை யொருவர் கொலை செய்து மாண்டு போகின்றனர். இதை யோசிக்கையில், ஜனங்கள் கேவலம் இகலோக சுகத்தையே விரும்புகிறார்களென்றும், பரலோக ஸாம்பிராஜ்யத்தைக் கோரவில்லை யென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. வைதீக மார்க்கத்தில் விசுவாசம் குறைவதே பலவித துஷ்கிருத்யங்கட்கு ஹேதுகரம். தானம், தர்மம், பெரியோரிடம் மரியாதை, ஈச்வர பக்தி ஆகிய இவைகளெல்லாம் வைதீக நெறியை யனுஸரிப்போர்க்கே இருக்கும். மற்றவர்களிடம் மருந்துக்கும் இராது. பெற்றோர்கள் சிறுபோதில் தங்கள் குழந்தைகட்கு மத கிரந்தங்களைப் படிப்பியாமல் விடுவது பிற்காலத்தில் பலவித அநர்த்தங்களுக்கும் ஆஸ்பதமன்றோ?

***

“தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்” என்ற பழமொழிப்படி மனுஷ்யன் இளம்பிராயத்தில் எவ்விதப் பழக்கம் செய்கிறானோ அதை அவன் சாகுமட்டும் விடுகிறதில்லை. ஒரு காரியம் பழகுவதற்கு அதைக் கற்பிக்கும் ஆசான் அவசியம். நம்முடைய வாழ்நாளில் நமக்குக் கிடைக்கும் ஆசான்கள் பலருளர். குழந்தைப் பருவத்தில் மாதா பிதாக்களே ஆசாரியர்கள். அவர்கள் நம்மைச் சிரிக்கச் சொன்னால் நாம் சிரிக்கிறோம். இதில் ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. குழந்தையைச் சிரிக்கச் செய்வோர் தாங்களும் சிரித்துக் காட்டி அந்தப்படி செய்யுமாறு அக்குழந்தையைத் தூண்டுகின்றனர். பிறகு பாடசாலையில் நமக்குக் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்களின் குணம் திறமைக்கேற்றபடி நமது புத்தி விசாலப்படுகிறது. இவ்விதமே நெடுக நாம் ஸகவாஸத்தின் தன்மைக் கேற்ப மாறிக் கொண்டே போகின்றோம். துஷ்ட ஸகவாஸத்தால் கெட்டவர் அநேகர். ஜலம் அருந்தும்போது பாத்திரத்தின் முக்காலே மூன்று வீசம் பாகத்தை வாய்க்குள்ளே செலுத்தி வீசம் பாகத்தை மட்டும் வெளியே நிறுத்தி அப்பாத்திரம் கீழே விழாதபடி பற்களால் கடித்துக் கொண்டிருக்கும் வழக்கம் கெட்ட பழக்கத்தால் உண்டாயிற்றென்பதை யார் தான் மறுப்பர்? எனவே, நாம் கடைத்தேறுவதற்கு ஈசுவர பக்தி, ஸத்ஸகவாஸம், கல்வி ஆகிய மூன்றும் ஹேதுக்களாம். பெரியோர்களுடைய ஸகவாஸத்தால் பெருமையும், சிறியோரின் நேசத்தால் சிறுமையும் உண்டாகும். ஈசுவர பக்தி எந்தக் காரியத்துக்கும் அவசிய மாதலால் அதைக் கொள்ளாதவன் கடைத்தேற மாட்டான்.

***

ஒரு காரியத்தைச் செய்யுமுன் அதனால் தனக்கும் பிறருக்கும் உண்டாகக் கூடிய நன்மை தீமைகளை ஆய்ந்தறியவேண்டும். தனக்கும் பிறருக்கும் நன்மையைத் தரத்தக்க காரியங்களைச் செய்பவன் உத்தமன். தனக்குத் தீமையும் பிறருக்கு நன்மையும், அல்லது தனக்கு நன்மையும் பிறருக்குத் தீமையும் செய்து கொள்ளுபவன் மத்திமன். தனக்கும் பிறருக்கும் தீமையைச் செய்து கொள்ளுகிறவன் அதமன். மேற்கூறிய நியாயப்படி நற்றொழில்களை யனுசரிப்பவர்களே விவேகிகளெனப் படுவர்.